Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆவணி 10 ஞாயிற்றுக்கிழமை (26-08-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:273

# அரசு - ஐ.தே.க. பேச்சு ஆரம்பம்

# ஆனால் முன்னேற்றம் ஏதுமில்லை!

## நாளையும் மறுதினமும் தொடர்ந்து பேச முடிவு

கொழும்பு,ஓகஸ்ட்26

**தற்போதைய அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காணும் முகமாக தேசிய நல்லிணக்க அரசு ஒன்றை அமைக்கலாம் என்ற யோசனை தொடர்பாக ஆளும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் பிரதிநிதிகளுக்கும், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று உத்தியோகபூர்வ பேச்சுக்கள் ஆரம்பமாகின.**

**நேற்று ஐந்து மணிநேரம் பேச்சுக்கள் நடைபெற்றபோதும் அதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏதும் கிட்டவில்லை என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.**

**நாளையும் நாளைமறுதினமும் தொடர்ந்து பேசுவது என்ற முடிவோடு நேற்றைய - முதல் நாள் - பேச்சுக்கள் முடிவுற்றன.**

இரு தரப்புப் பேச்சுகள் குறித்தும் தனிப்பட்ட முறையில் தகவல்களை வெளியிடுவதில்லை என்றும் -

அன்றன்றைப் பேச்சுக்களின் முடிவில் கூட்டறிக்கை மட்டுமே வெளியிடுவதென்றும் -

ஆரம்பத்திலேயே இரு தரப்பினரும் தீர்மானித்துக்கொண்டுள்ளபோதிலும், நேற்றைய பேச்சுக்களில் பயன் ஏதும் கிட்டவில்லை என்ற தகவலை இரு தரப்பிலும் ஓரளவு உறுதி செய்யமுடிந்தது.

நேற்று நண்பகல் 12 மணி முதல் மாலை வரை கொழும்பு பண்டார நாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடபெற்ற இந்தச் சந்திப்பில் அரசுத் தரப்பில் அமைச்சர்கள் டி.எம்.

(2ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சரின் பிரசாரத்துக்கு ஆள் பிடிக்கும் இராணுவம்!

யாழ்ப்பாணம்,ஓக.26

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அரசியல் பிரசாரச் சந்திப்புக்கு இராணுவம் ஆள் திரட்டித் தருவது குறித்து வர்த்தகர்கள் மத்தியில் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இது பற்றித் தெரியவருவதாவது-

சில தினங்களுக்கு முன்னர் நண்பகல் 11.45 மணியளவில் திருநெல்வேலிப் பகுதியில் உள்ள கடை உரிமையாளர்களிடம் திடீரென வந்த இராணுவத்தினர் அவர்கள் அனைவரையும் நண்பகல் 12 மணிக்கு ஊரெழு இராணுவ முகாமுக்குக் கட்டாயம் வரும்படி பணித்தனர்.

இதனையடுத்து வர்த்தகர்கள் ஒன்றும் புரியாமல் தமது வர்த்தக நிலையங்களில் போட்டது போட்டபடி இருக்க அவசர அவசரமாக ஊரெழு இராணுவ முகாமுக்கு விரைந்தனர்.

பிற்பகல் 1 மணிவரை அவர்கள் அங்கு இருத்தி வைக்கப்பட்டனர். சரியாக 1.15 மணிக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அங்கு வந்து சேர்ந்தார்.

(2ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.மக்களின் நிலைமை: இன்று தளபதியுடன் பேச்சு

யாழ்ப்பாணம்,ஓக. 26

யாழ்ப்பாண மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் குறித்து யாழ். மாவட்ட ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன், யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் விஜேசூரியவை இன்று மாலை பலாலியில் சந்தித்துப் பேச இருக்கின்றார்.

தற்போது யாழ்ப்பாணம் வந்திருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பிக்கள் சிலரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொள்ளக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தச் சந்திப்பில் பின்வரும் விடயங்களைத் தாம் வலியுறுத்த இருப்பதாக தி.மகேஸ்வரன் எம்.பி. தெரிவித்தார்:-

★ அவசரகாலச் சட்டம் நடைமுறையில் இல்லாததால் ஊரடங்குச் சட்டத்தைக் குடாநாட்டில் நடைமுறைப்படுத்துவது சட்டவிரோதமான செயலாகும்.

★ அவசரகாலச் சட்டம் நடைமுறையில் இல்லாத காரணத்தால் குடாநாட்டில் மக்களின் வெளியிடங்களுக்கான போக்குவரத்துக்கு கட்டுப்பாடுகள் விதிப்பதும் தவறானது. எனவே பாதுகாப்பு அனுமதி 'பாஸ்' என்ற கெடுபிடிகளை அவர்களுக்கு விதிக்கக்கூடாது; விதிக்க முடியாது. அதனை நீக்கவேண்டும்.

★ பொதுமக்களின் வெளியிடங்

(2ஆம் பக்கம் பார்க்க)

### பேச்சு தோல்வி அடைந்தால்

## அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து இரு தரப்பினரும் தனித்தனியாக ஆராய்வு

கொழும்பு,ஓக.26

தேசிய நல்லிணக்க அரசு ஒன்றை அமைப்பது தொடர்பாக அரசுக்கும் ஐ.தே.கட்சிக்கும் இடையில் தற்போது நடைபெறும் பேச்சுக்கள் தோல்வி அடைந்தால் அடுத்த கட்டமாக மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகள் குறித்து அரசும் எதிர்க்கட்சியும் தனித்தனியே ஆராய்ந்துவருகின்றன.

எதிர்வரும் 7 ஆம் திகதி நாடாளுமன்றம் மீண்டும் கூடும்போது அரசாங்கம் அன்றைய தினம் ஒரு தர்மசங்கடமான நிலையை எதிர்நோக்க வேண்டி இருக்கும் என்பதனால் அதற்கான மாற்றுவழி குறித்து அரசு ஆராய்ந்து வருகிறது.

செப்ரெம்பர் 7 ஆம் திகதி ஜனாதிபதி நாடாளுமன்றத்தை ஆரம்பித்து வைத்து கொள்கை விளக்க உரையாற்றிய பின்பு அது வாக்கெடுப்புக்கு விடப்படும்போது அது தோற்கடிக்கப்படக்கூடிய வாய்ப்புகள் பெருமளவு காணப்படுவதாகவும் -

அத்தகைய நிலை ஏற்பட்டால் அமைச்சரவை இராஜினாமாச் செய்ய வேண்டி ஏற்படும் என்றும் -

அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே நாடாளுமன்றக் கூட்டத்தை மீண்டும் அறிவித்தல் ஒன்றின் மூலம் ஒத்திவைப்பது குறித்தும் -

அரசமைப்பின் 70 ஆவது சரத்தில் இதற்குச் சாதகமான வாய்ப்புகள் உண்டா என்பது குறித்தும் -

அரசாங்கம் தற்போது ஆராய்ந்து

(2ஆம் பக்கம் பார்க்க)

### நேற்று ஒரே சமயத்தில் அரசுத் தலைவர்கள்

## ஒருபுறத்தில் ஐ.தே.கவுடன் பேச்சு மறுபுறத்தில் ஜே.வி.பியுடன் பேச்சு

கொழும்பு,ஓக.26

தேசிய நல்லிணக்க அரசு அமைப்பது தொடர்பாக அரசுத் தரப்பும் ஐ.தே. கட்சியும் ஒருபுறத்தில் பேச்சு நடத்திக்கொண்டிருக்க -

மறுபுறத்தில் தற்போதைய அரசியல் நெருக்கடியைச் சமாளிக்க ஜே.வி.பியின் ஆதரவைப் பெறுவது தொடர்பாக ஜனாதிபதி அக்கட்சியின் பிரதிநிதிகளுடன் நேற்று நீண்டநேரப் பேச்சுக்களில் ஈடுபட்டார்.

இந்தப் பேச்சுக்களில் ஜனாதிபதியுடன் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க, அமைச்சர் ரிச்சர்ட் பத்திரன, ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்ட பெண்டி ஆகியோரும் -

ஜே.வி.பி. தரப்பில் அதன் செயலாளர் ரில்வின் சில்வா, பிரசார செயலர் விமல் வீரவன்ஸ, நாடாளுமன்ற உறுப்பினர் நந்தன குணதிலக ஆகியோரும் - கலந்துகொண்டனர்.

ஜே.வி.பியால் முன்வைக்கப்பட்ட 'தகுதிகாண்' அரசு பற்றிய யோசனை குறித்து இந்தப் பேச்சுக்களின்போது ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. எனினும் பேச்சு குறித்து உத்தியோகபூர்வ அறிவிப்பு எதுவும் வெளியிடப்படவில்லை.

'தகுதிகாண்' அரசு அமைக்கப்

(2ஆம் பக்கம் பார்க்க)

## அரசு-புலிகள் பேச்சை வலியுறுத்த வர்த்தக சம்மேளனம் முழு முயற்சி

### நாளை கொழும்பில் கூடி ஆராய்வு

கொழும்பு,ஓக.26

அரசு விடுதலைப் புலிகளுடன் பேசி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்பதை ஜனாதிபதிக்கும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் வலியுறுத்துவது தொடர்பாக கொழும்பு வர்த்தக சம்மேளனம் நாளை திங்கட்கிழமை கொழும்பில் கூடி ஆராய உள்ளது.

"நாட்டில் இனப்பிரச்சினை மிக நீண்டகாலமாக இழுபட்டுச் செல்கிறது. இதனால் தற்போது அரசியல் ஸ்திரமற்ற தன்மையும் தோன்றி உள்ளது.

"இந்த நிலையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு விடுதலைப் புலிகளுடன் பேசுவதே ஒரேவழி. தற்போதைய நிலையில் முதலில் செய்ய வேண்டிய நடவடிக்கையும் அதுவே.

"எனவே இந்த விடயத்தில் அரசுக்கும் எதிர்க்கட்சிக்கும் அழுத்தங்களைக் கொடுப்பதே எமது நோக்கம்" - என்று கொழும்பு வர்த்தக சம்மேளனத் தலைவர் லலித் கொத்

(2ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர்களின் எண்ணிக்கையை குறைப்பதில் ஜனாதிபதி தீவிரம்

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசிலுள்ள அமைச்சர்கள், பிரதி அமைச்சர்களின் எண்ணிக்கையை குறைப்பது தொடர்பாக ஜனாதிபதி தீவிரமாகப் பரிசீலித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனடிப்படையில் 44ஆகவுள்ள அமைச்சர்களின் எண்ணிக்கையை 30ஆகக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

பிரதி அமைச்சர்களின் எண்ணிக்கையை எவ்வளவு முடியுமோ அந்த அளவுக்குக் குறைப்பது குறித்தும் ஆராயப்பட்டு வருவதாக பொ.ஐ.முன்னணி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த விடயம் குறித்து கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற பொ.ஐ.முன்னணியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்திலும் பிரஸ்தாபிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பெரும் பொருளாதார நெருக்கடி மற்றும் அமைச்சரவையை சிறியதாக்குமாறு எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருவது போன்ற காரணங்களாலேயே ஜனாதிபதி இந்த விடயத்தில் தீவிரம் காட்டி வருவதாக அவதானிகள் தெரிவித்தனர். (ம-9)

### துண்டுப்பிரசுரம்

யாழ்ப்பாணம்,ஓக 26

'நாடாளுமன்றப் பதவிகளைத் தூக்கி எறியுங்கள்!' என்ற தலைப்பிட்டு 'சங்கிலியன் படை' என்ற பெயரில் துண்டுப் பிரசுரம் ஒன்று யாழ்ப்பாணத்தில் பிரமுகர்கள் பலருக்கும் தபாலில் நேற்றுக் கிடைத்தது. (உ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# கலாசார செயல்திட்டங்களுக்கு பிரதேச செயலக ரீதியாக நிதி

யாழ்ப்பாணம்,ஓக.26

யாழ்.மாவட்டத்தில் கலாசாரச் செயல் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கென ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுக்கும் விசேட நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் க.பரமேஸ்வரன்.

யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றும் கலாசார உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் யாழ்.செயலகத்தில் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் க.பரமேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலிலேயே செயலாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

தமிழர்களின் பாரம்பரியக் கலைகளை வளர்க்கும் வகையில் பிரதேசாதியாக வருடந்தோறும் கலை நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டு கலைகளுக்கு புதுத்துயிர் அளிக்கப்படவேண்டும். அத்துடன் கலைஞர்கள் கௌரவிக்கப்படவேண்டும்.

மேற்படி திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் சம்பந்தப்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்த கலைஞர்கள், அரச அதிகாரிகள், அபிமானிகள் ஒன்றுபட்டுச் செயற்படவேண்டும்.

மாவட்டங்கள் தோறும் கலாசாரச் செயற்றிட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்கென வடக்கு - கிழக்கில் உள்ள சகல மாவட்டங்களுக்கும் தனித்தனியே 'மாவட்டக் கலாசார உத்தியோகத்தர்' ஒருவர் நியமிக்கப்படுவார். இந்த உத்தியோகத்தர்கள் மாவட்டச் செயலகங்களில் இருந்து செயற்படுவர்.

குடாநாட்டில் கலாசார உத்தியோகத்தர் பதவி வெற்றிடமாகவுள்ள ஊர்காவற்றுறை, சாவகச்சேரி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளுக்கு விரைவில் புதிய உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்படுவர்.

அத்துடன் யாழ்மாவட்ட கலாசார உத்தியோகத்தர்களின் தடைதாண்டல் பரீட்சைகளுக்கான வழிகாட்டல் கருத்தரங்குகள் நடத்தப்படும்.

கலாசார உத்தியோகத்தர்களின் சம்பளம் மற்றும் பிரயாணக் கொடுப்பனவு, இடர்காலக் கொடுப்பனவு தொடர்பான விடயங்களுக்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் - என்று அவர் தனது உரையில் தெரிவித்தார்.

மேற்படி கலந்துரையாடலில் வலி.வடக்கு பிரதேச செயலரும், மேலதிக அரச அதிபருமான திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போலும் கலந்துகொண்டார்.

(ஐ-7)

# அடாவடித்தனம் புரிந்த படையினர் மீது விசாரணையின் பின்னர் நடவடிக்கை

## கலந்துரையாடலில் அதிகாரிகள் உறுதி

வடமராட்சி,ஓக.26

வடமராட்சிக் கடற்பகுதியில் மீனவர்கள் தொழிலில் ஈடுபடும்போது அடாவடித்தனங்கள் புரிந்ததாகக் கூறப்படும் கடற்படையினர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு அவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு வடமராட்சிக் கடற்படை அதிகாரிகள் மீனவர் சங்கப் பிரதிநிதிகளுக்கு உறுதி அளித்துள்ளனர்.

வடமராட்சிக் கடலில் மீன்பிடிக்கச் சென்றவேளையில் கடற்படையினரின் அடாவடித்தனம் தொடர்பாக இப்பகுதி கடற்றொழிலாளர் சங்கங்களால் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதியுடனான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் வல்வெட்டித்துறை சிவில் நிர்வாக அலுவலகத்தில் இடம்பெற்றது.

அதன்போதே இந்த உறுதிமொழி அளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் கலந்துகொண்ட கடற்படையினர் கடலில் அனுமதிக்கப்பட்ட தூரத்திற்கு அப்பால் மீன் பிடிக்கச்சென்ற படகுகள் மீதே நடவடிக்கை மேற்கொண்டதாகக் கூறினர். இக்கூற்றினை கலந்துரையாடலில் கலந்துகொண்ட அனைத்துக் கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளும் ஒரே குரலில் ஆட்சேபித்தனர். நடைபெற்ற சம்பவங்கள் படையினரால் அனுமதிக்கப்பட்ட கடற்பகுதிக்குள்ளேயே நடந்ததாகவும் - கடற்படையினர் திட்டமிட்டே இதனை நடத்தினர் எனவும் - குற்றம் சாட்டினர்.

இதனையடுத்து. -

சம்பந்தப்பட்ட கடற்படையினர் மீது விசாரணை மேற்கொண்டு அவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்வதாக உறுதியளிக்கப்பட்டதாக கலந்துரையாடலில் கலந்துகொண்ட மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

அண்மையில் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா வடமராட்சிக்கு வந்தபோது கடற்பகுதியில் இழைக்கப்படும் அடாவடித்தனங்களை அந்தந்த முகாம்களில் முறையிடவேண்டுமெனக் கேட்டுக்கொண்டதையடுத்து வலைகள் அறுப்பு, மீனவர்கள் தாக்கப்பட்டமை போன்ற முறைப்பாடுகள் அந்தந்த முகாம்களில் முறையிடப்பட்டதாகவும் மீனவர் பிரதிநிதிகளால் தெரிவிக்கப்பட்டது. (ம-117-173)

## மேலதிக கல்வித் திணைக்கள வெற்றிடங்கள்:

# நேர்முகப் பரீட்சையை நிறுத்துமாறு மாகாண ஆளுநருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம்,ஓக.26

மேலதிக மாகாணக் கல்வித் திணைக்களத்தில் உள்ள ஆளணி வெற்றிடத்தை யாழ்.தொழில் நுட்பக் கல்லூரியில் பயிற்சி பெற்று வெளியேறிய மாணவர்களைக் கொண்டு நிரப்ப எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி விடயம் தொடர்பாக நாளை திங்கட்கிழமை தொழில் நுட்பக் கல்வி வலயம் நான்கின் யாழ். உ.ப. அலுவலகத்தில் நடைபெறவுள்ள நேர்முகப்பரீட்சையை ரத்துச் செய்யுமாறு கோரி வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநருக்கு கடிதம் ஒன்றும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி மற்றும் தென்மராட்சிப் பகுதிகளைச் சேர்ந்த 31 இளைஞர், யுவதிகள் ஒப்பமிட்டு இந்தக் கடிதத்தை கடந்த வெள்ளியன்று மாகாண ஆளுநருக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

அவர்கள் அந்தக் கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது:-

★ அரச திணைக்களம் ஒன்றில் ஏற்படும் வெற்றிடங்கள் போட்டிப் பரீட்சை ஒன்றின் மூலம் நிரப்பப்பட வேண்டும்.

★ இப்பதவிகளுக்கான தேர்வுக்குப் போட்டியிடத் தகுதியான அனைவருக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படல் வேண்டும்.

★ யாழ்ப்பாண தொழில்நுட்பக் கல்லூரியில் 1999/2000 ஆம் ஆண்டில் படித்தவர்களைக் கொண்டு நிரப்புவது அநீதியான ஒன்றாகும்.

★ குறிப்பிட்ட பதவிகளுக்கான வெற்றிடங்களை 1997 (1998)இல் நடைபெற்ற போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களைக் கொண்டு நிரப்பலாம். இப்பரீட்சையில் சித்தியடைந்தோரில் யாழ்ப்பாண மாவட்டத்தில் இதுவரை தமிழ்த் தட்டெழுத்தாளர் பதவிக்கு பத்திற்கு குறைவானவர்களுக்கும், ஆங்கில தட்டெழுத்தாளர் பதவிக்கு ஐந்திற்குக் குறைவானவர்களுக்கும் மட்டுமே நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. எனவே இப்பதவிகளுக்கு ஏனையோரை, பெற்ற புள்ளியின் அடிப்படையில் நியமனம் செய்யலாம்.

- என்று அதில் உள்ளது.

(ஐ-7)

# குடாநாட்டு விவசாயிகளுக்கு நல்லின விதை விநியோகம்

யாழ்ப்பாணம்,ஓக.26

யாழ். மாவட்ட விவசாயிகளின் பெரும்போகப் பயிர்ச் செய்கைக்கென குடாநாட்டு விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் உயர் விளைச்சலைப் பெறக்கூடிய சிபார்சு செய்யப்பட்ட நல்லின விதைகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கென சமார் 2 ஏக்கர் நிலப்பரப்பில் உற்பத்தி செய்யப்பட்ட மிளகாய், கத்தரி, தக்காளி, பாவல், புடோல், பயிற்றை, நிலக்கடலை, பயறு, கௌபி, சோளன் மற்றும் வெண்டி ஆகியவற்றின் விதைகள் தயார் நிலையில் உள்ளதாக யாழ். பல்கலைக்கழக விவசாய பீடாதிபதியும் விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவருமான எஸ். இராசதுரை தெரிவித்தார்.

மாவட்டத்தில் உள்ள சகல கமநல சேந்திர நிலையங்கள் ஊடாகவும், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாகவும் இந்த விதைகள் விரைவில் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும். மேற்படி விதைகள் தேவைப்படுகின்ற விவசாயிகள் கோண்டாவில் - இருபாலை வீதியில் அமைந்துள்ள - பழனி ஆண்டவர் ஆலயத்துக்கு அருகில் உள்ள விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் நேரடியாகப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

(ம-10)

ஒரு புறத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படும் பட்சத்தில் அதற்கு ஆதரவு வழங்க ஜே.வி.பியால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைக் குறைப்பு தொடர்பான நிபந்தனை குறித்தும் நேற்றைய பேச்சில் ஆராயப்பட்டதாக அறியவந்தது.

நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் ஆரம்பமான இந்தப் பேச்சுக்கள் 5 மணிக்கு இடைநிறுத்தப்பட்டன. மீண்டும் 6மணிக்கு ஆரம்பமான பேச்சுக்கள் நள்ளிரவுவரை தொடர்ந்து இடம்பெற்றதாகக் கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-9)

அடுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை -

அரசாங்கம் செப்ரெம்பர் 7 ஆம் திகதி நாடாளுமன்றத்தைக் கூட்டாமல் அதனை ஒத்திவைக்கும் நிலை ஏற்பட்டால் அத்தகைய நிலையை எதிர்கொள்வதற்கான மாற்றுவழிகள் குறித்து எதிர்க்கட்சிகளும் ஆராய்ந்து வருகின்றன.

இது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாளை திங்கட்கிழமை சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்காவைச் சந்தித்துப் பேசஉள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்படவில்லையாயின் எதிர்வரும் புதன்கிழமை சகல எதிர்க்கட்சித் தலைவர்களும் சபாநாயகரைச் சந்தித்துப் பேசுவதற்கும் -

எதிர்வரும் வெள்ளிக்கிழமை சகல எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் சபாநாயகரைச் சந்தித்துப் பேசுவதற்கும் - திட்டமிடப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. (ம-9)

கொக்குத்தொடுவாய் மோதலில் மீட்கப்பட்ட

# படையினரின் 7 சடலங்கள் புலிகளால் நேற்று ஒப்படைப்பு

கடந்த வியாழனன்று கொக்குத்தொடுவாய் இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலின்போது புலிகளால் கைப்பற்றி எடுத்துச் செல்லப்பட்ட படையினரின் ஏழு சடலங்களும் நேற்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலம் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டன.

நேற்றுக்காலை கிளிநொச்சியில் வைத்து விடுதலைப் புலிகள், சடலங்களை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் ஒப்படைத்ததாகவும் -

அவற்றை வவுனியாவுக்கு எடுத்து வந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர் மாலை 5 மணியளவில் சடலங்களை படை அதிகாரிகளிடம் ஒப்படைத்ததாகவும் -

செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு பேச்சாளர் ஹர்ஷா குணவர்த்தன தெரிவித்தார். சடலங்கள் அனைத்தும் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படுவதற்காக வவுனியா ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருந்தன. (ம-9)

## மாகாண மட்ட போட்டிகளில் பங்குபற்றிய வீரருக்கு!

அண்மையில் திருகோணமலையில் நடைபெற்ற வடக்கு - கிழக்கு மாகாணமட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றிய அனைத்து வீர, வீராங்கனைகளையும் இன்று பிற்பகல் 4 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரிககு சமுகமளிக்குமாறு யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஏ. எவ்.ஜே.ரூபசிங்கம் கேட்டுள்ளார்.

கரப்பந்தாட்டம், உதைபந்தாட்டம், மேசைப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம் மற்றும் மெய்வன்மைப் போட்டிகளில் கலந்துகொண்டவர்களே இவ்வாறு அழைக்கப்பட்டவர்களாவர். (ம-4)

அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலாவல தெரிவித்தார்.

இந்த விடயங்களை வலியுறுத்தும்முகமாக ஜனாதிபதியையும் எதிர்க்கட்சித் தலைவரையும் எப்போது சந்தித்துப் பேச்சு நடத்துவது என்பது குறித்து நாளைய கூட்டத்தில் முடிவு செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

1999ஆம் ஆண்டும் இந்தச் சம்மேளனம் இத்தகைய முயற்சியொன்றில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. அரசுக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையே புரிந்துணர்வு ஏற்படுத்துவதற்காக இரு தரப்புகளுடனும் இந்த அமைப்பு அப்போது ஐந்து கட்டப் பேச்சுக்களை நடத்தியிருந்தது. எனினும் அந்த முயற்சி தோல்வியிலேயே முடிவடைந்தது. (ம)

அமைச்சரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊரெழு இராணுவ முகாமுக்கு இராணுவத்தினரால் அழைத்துவரப்பட்ட வர்த்தகர்களுக்கு முகாமில் வைத்து அரசியல் பிரசாரக் கூட்டம் நடத்தினார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

அமைச்சரின் அரசியல் பிரசாரத்துக்கு ஆள் பிடிக்கும் வேலையை இராணுவம் செய்வதாகக் குறிப்பிட்டு தங்களுக்குள் பொருமினார்கள் வர்த்தகர்கள்.

## அரசு - ஐ.தே.க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜயரத்ன, மஹிந்த ராஜபக்ஷ, ஜெனரல் அனுருத்த ரத்வத்தை, நிமால் ஸ்ரீபால டி சில்வா, மங்கள சமரவீர, லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோரும், ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் அதன் பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய, தவிசாளர் சரித்த ரத்வத்தை, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டிரோன் பெர்னாண்டோ, கே.என். சொக்ஸி ஆகியோரும் பங்குபற்றினர்.

நேற்றைய பேச்சுக்களின் போது பேச்சுக்களில் ஆராயப்படவேண்டிய விடயங்கள் எனக் குறிப்பிட்டு சில யோசனைகளை அரசுத் தரப்பும், சில யோசனைகளை ஐ.தே.கட்சித் தரப்பும் முன்வைத்தன. அவற்றின் அடிப்படையில் பேச்சுக்கள் ஆரம்பமாகின.

ஐந்து முக்கிய விடயங்களைக் கையாள்வதற்கு சுதந்திர ஆணைக் குழுக்கள் நியமிக்கப்படவேண்டும் என்று ஐ.தே.கட்சித் தரப்பில் வலியுறுத்தப்பட்டது தொடர்பாக -

ஊடகவியல்துறை தவிர, ஏனைய நான்கு துறைகளுக்கும் தனி ஆணைக் குழுக்களை நியமிக்க அரசுத் தரப்பில் முழு இணக்கம் தெரிவிக்கப்பட்டதாக அறியவந்தது.

ஊடகவியல்துறை தொடர்பான ஆணைக்குழு குறித்து மேலும் விரிவாகப் பேசி முடிவு செய்யலாம் என்ற கருத்து அரசுத் தரப்பால் தெரிவிக்கப்பட்டதாக அறியவந்தது.

"தாங்கள் ஆட்சியில் தொடர்வது குறித்து மட்டுமே அரசுத் தரப்பில் சிரத்தை காட்டப்பட்டது. அதற்கு நாம் இடங்கொடுக்கப்போவதில்லை. நாடாளுமன்றத்தில் யாருக்குப் பெரும்பான்மையுள்ளதோ அவர்களே அரசமைக்கவேண்டும் என்ற கருத்தை ஏதோ ஒரு வகையில் - ஏதோ ஒரு யோசனை ஊடாக - நாம் வலியுறுத்திக்கொண்டே இருப்போம்; விட்டுக்கொடுக்கமாட்டோம். எமது தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறியபடி இறந்துகொண்டிருக்கும் இந்த அரசுக்கு உயிர்ப்பிச்சை வழங்குவதற்காக நாம் பிராணவாயு ஆகிய எமது ஆதரவைத் தரப்போவதில்லை" - என்று நேற்றைய பேச்சுக்களின் பின்னர் ஐ.தே.கட்சிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

"நாளைமறுதினம் வரை இரு தரப்பும் பேச்சை இழுத்தடிக்கும் என்பது நிச்சயம். நாளை மறுதினம் மாலையில் 'எந்தவித முன்னேற்றமுமின்றி பேச்சுத் தோல்வியில் முடிவடைந்தது' என்ற அறிவிப்பை அனைவரும் எதிர்பார்க்கலாம்" - என்று கொழும்பில் விடயமறிந்த வட்டாரம் ஒன்று தகவல் வெளியிட்டது. (உ-ம-9)

யாழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கான போக்குவரத்து விவகாரத்தில் ஈ.பி.டி.பிக்கு வழங்கப்பட்டுள்ள தனியுரிமை அதிகாரங்கள் நீக்கப்படவேண்டும். இந்த ஏகபோக உரிமையால் குடாநாட்டு மக்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

- இந்த விடயங்களை வலியுறுத்தி இவற்றுக்குத் தீர்வு காணதான் முயற்சிக்கப்போவதாக தி. மகேஸ்வரன் தெரிவித்தார். (உ)

# மரண அறிவித்தல்

## நல்லையா ஸ்ரீபன் நவரத்தினம்

கரம்பகத்தைப் பிறப்பிடமாகவும் கரவெட்டி கிழக்கைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட நல்லையா ஸ்ரீபன் நவரத்தினம் நேற்று (25.08.2001) சனிக்கிழமை கர்த்தருக்குள் மகிமை அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லையா - செல்லம்மா தம்பதிகளின் மூத்தமகனும் மகாலட்சுமியின் அன்புக் கணவரும் மகாரத்தினம், மகாதேவி, ஜீவரத்தினம் (கனடா), ரத்தினதேவி (அமெரிக்கா), பத்மினிதேவி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இரத்தினபாக்கியதேவி (ஆசிரியை, யா/கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம்), யோகரட்ணம் (ஊழியர், கட்டைவேலி மெதடிஸ்த திருச்சபை), சிந்தியா, அருமைராஜா, ரவீந்திரன் ஆகியோரின் மாமனாரும் நியோமி அனுஷியா (உடற்கல்வித்துறை, யாழ்.பல்கலைக்கழகம்), நிறோஜன் (ஹாட்லிக்கல்லூரி மாணவன்), தனுஜன், ஜோயனா ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற இராசம்மா மற்றும் கனகரத்தினம் (முன்னாள் இ.போ.ச. சாலைப் பரிசோதகர்), நேசம்மா (ஓய்வுபெற்ற ஆசிரியை), காலஞ்சென்ற அழகரத்தினம் (ஓய்வுபெற்ற விவசாய விரிவாக்க அலுவலர்), அருளம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (26.08.2001) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கரவெட்டி கிழக்கில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'இரத்தின வாசா',*
*கரவெட்டி கிழக்கு.*

(C/18019)

தகவல்:
ந.மகாரத்தினம் (மகன்)




உலகின் பிரபலமான சிலைகள், உயரமான கட்டடங்கள் போன்றவற்றில் எந்தவித பாதுகாப்புச் சாதனங்களும் இல்லாமலேயே தொற்றி ஏறிப் புகழ்பெற்றவர் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த டேர்ரி டேவன். இவரின் ஆபத்தான சாகசச் செயல்களுக்காக பல நாடுகளிலும் இவர் கைது செய்யப்பட்டு அபராதம் கட்டியதும், எச்சரிக்கப்பட்டதும் உண்டு. ஆயினும் இவரது சாதனைகளால் கவரப்பட்டு இவருக்கு ரசிகர்களானவர்கள் ஏராளம்.

கடந்த வியாழக்கிழமை திடீரென்று 'பராகிளைடர்' என்ற தனது பறக்கும் சாதனத்தின் மூலம் பறந்து வந்து அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள சுதந்திரதேவி சிலையின் தீபப் பகுதியில் டெர்ரி இறங்கினார். டெர்ரி சிலை மீது இறங்குவதையும், 'பராகிளைடரின்' குடைப்பகுதி தீபத்தில் சிக்க, அந்தரத்தில் தொங்கும் டெர்ரியை அமெரிக்க அதிகாரிகள் மீட்பதையும், பின்னர் அவர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு கூட்டிச் செல்லப்படுவதையும் படங்களில் காணலாம். தற்போது அமெரிக்க நீதிமன்றம் டெர்ரியை பிணையில் செல்ல அனுமதித்துள்ளது.

# பலஸ்தீனர்களின் தாக்குதலில் 3 இஸ்ரேலியப் படையினர் பலி!

காஸா,ஒக.26

காஸா பள்ளத்தாக்கில் இஸ்ரேலிய பாதுகாப்பு நிலை ஒன்றின் மீது நேற்று பலஸ்தீனத் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் இஸ்ரேலிய இராணுவத்தினர் மூவர் கொல்லப்பட்டனர்; 7பேர் காயமடைந்தனர்.

பலஸ்தீன ஜனநாயக விடுதலை முன்னணி என்ற அமைப்பினரே இந்தத் தாக்குதலை நடத்தியதாகவும்-

அப்போது இடம்பெற்ற மோதலில் அந்த அமைப்பைச் சேர்ந்த இருவர் உயிரிழந்ததாகவும் - கூறப்படுகிறது.

இந்தத் தாக்குதலுக்குப் பதில் நடவடிக்கையாக காஸாவின் தென் பகுதிகளை இஸ்ரேலிய இராணுவம் மூடியுள்ளது.

கடந்த வியாழக்கிழமை மேற்குப் கரையிலுள்ள பலஸ்தீன நகரான ஹெப்ரோனுக்குள் ஊடுருவிய இஸ்ரேலியப் படைகள் பலஸ்தீன வீடுகளை இடித்துத் தரைமட்டமாக்கியதற்கு பதிலடியாகவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கருதப்படுகிறது.

இதற்கிடையில் இஸ்ரேலிய இராணுவத் தாக்குதல்கள் காரணமாக கான்யூனிப், ரஸா ஆகிய பிரதேசங்களில் இருந்து பலஸ்தீனப் படைகள் வெளியேறி வருவதாகக் கூறப்படுகிறது.

(ஒ-9)

# மரபணு சத்திர சிகிச்சையில் ஜேர்மன் நிபுணர்கள் வெற்றி

பெர்ன்,ஒக.26

நோயாளி ஒருவரின் மரபணு பிரித்தெடுக்கப்பட்டு, அதனைப் பயன்படுத்தி அவரது இதயம் சீராக்கப்பட்டுள்ளது.

ஜேர்மனி இதய நோய் நிபுணர்கள் இந்தச் சாதனையைச் செய்துள்ளனர்.

46 வயதுடைய நோயாளிக்கே இந்த அபூர்வ சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நோயாளியின் முள்ளந்தண்டிலிருந்து எடுக்கப்பட்ட கலங்களைக் கொண்டு, அவரது இதயத்தின் சேதமடைந்த பகுதி சீராக்கப்பட்டது.

கடந்த மார்ச் மாதம் கடுமையான மாரடைப்புக்கு இலக்கான இந்த நோயாளி 10 வாரகால மரபணு சிகிச்சையின் பின்னர் தற்போது உடல்நலம் தேறிவருகிறார்.

ஒரு நபரின் மரபணுக்களைக் கொண்டு அவரது இதயத்தில் புதிய தசைகளை உருவாக்குவது இந்தச் சத்திர சிகிச்சையின் வெற்றி என்று மருத்துவ நிபுணர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக மேலும் பல சோதனைகள் நடத்தப்பட வேண்டியுள்ளதாகவும் அவர்கள் கூறினர்.

(ஒ-4)

# வன்முறை குறித்து அதிபர் புஷ் பலஸ்தீனர் மீது குற்றச்சாட்டு

வாஷிங்ரன்,ஒக.26

மத்திய கிழக்கில் தொடரும் மோதல்களுக்கு பலஸ்தீனர்களே காரணமென்று அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ் குற்றஞ்சாட்டியுள்ளார்.

மத்திய கிழக்கில் அமைதியை ஏற்படுத்த பலஸ்தீனத் தரப்பு தவறி வந்ததாகவும் -

பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத் உண்மையான அர்ப்பணிப்புடன் செயற்பட்டால் மேற்குக் கரை மற்றும் காஸாவில் இடம்பெறும் இரத்தக் களரியை முடிவுக்கு கொண்டு வந்திருக்க முடியும் என்றும் - புஷ் கூறியுள்ளார்.

அமைதிப் பேச்சில் ஈடுபடுவதற்கு பலஸ்தீனர்கள் முன்வந்தால் தீவிரவாத நடவடிக்கைகளை முற்றாகக் கைவிடுமாறு அரபாத்திடம் வலியுறுத்தப் போவதாக புஷ் மேலும் தெரிவித்தார்.

பலஸ்தீனரின் தீவிரவாத நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் வேளையில், இஸ்ரேலியர்கள் பேச்சில் ஈடுபட மாட்டார்கள் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் இஸ்ரேலியப் பிரதமரும், அப்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான ஏரியல் ஷைரோன், வன்முறைகள் வெடிக்கக் கூடுமென்ற எச்சரிக்கைகளைப் புறக்கணித்து ஜெருஸலேமில் உள்ள பலஸ்தீனப் பகுதி மசூதி ஒன்றுக்கு விஜயம் மேற்கொண்டதையடுத்தே இஸ்ரேலியர்களுக்கும் பலஸ்தீனர்களுக்கும் மேற்குக்கரைப் பிரதேசத்தில் மோதல்கள் ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-4)

## 6 தலித்துகள் கொலை!

பாட்னா,ஒக.26

இந்தியாவின் பீஹார் மாநிலத்தில் கிராமம் ஒன்றில் 3 குழந்தைகள் உட்பட 6 தலித்துகள் கடந்த வியாழக்கிழமை இரவு மக்கள் போர் படை என்ற அமைப்பைச் சேர்ந்தவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

## கொங்கோ குடியரசில் சமாதானப் பேச்சு ஒக்ரோபரில்

ஹரின்சாஸா,ஒக.26

ஆபிரிக்க நாடான கொங்கோ ஜனநாயகக் குடியரசில் கடந்த 3 ஆண்டுகளாக இடம்பெற்றுவரும் உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர அரசு, எதிர்க்கட்சிகள் மற்றும் தீவிரவாதிகள் ஆகிய மூன்று தரப்புக்களும் தேசிய மட்டச் சமாதானப் பேச்சில் ஈடுபட இணக்கம் காணப்பட்டுள்ளது.

இந்த முத்தரப்புப் பேச்சு எதிர்வரும் ஒக்ரோபரில் எதியோப்பிய தலைநகர் அடிஸ்அபாவில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

கொங்கோ உள்நாட்டுப் பிரச்சினை தொடர்பாக பொஸ்வானாவில் கடந்த ஒரு வாரகாலமாக நடந்த பேச்சில் இந்த இணக்கப்பாடு ஏற்பட்டது.

கொங்கோவில் சமாதானப் பேச்சுக்கான பாதை திறக்கப்பட்டதாகவும்-

இது வெற்றிகரமாக முடியும் என்ற நம்பிக்கை உள்ளதாகவும் -

சமாதானப் பேச்சுக்கு மத்தியஸ்தம் வகிக்கும் கேட்டே மெசையா தெரிவித்துள்ளார்.

(ஒ-4)

**ஸ்பெயினில் வருடந்தோறும் இடம்பெறும் கேளிக்கை விழாவான 'டொமாடினா' சமீபத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. 'டொமாடினா' எனப்படும் இந்தப் பண்டிகையின் போது மலைபோல் தக்காளிப் பழங்கள் தெருக்களில் கொட்டப்படும். கொண்டாட்டத்தில் ஈடுபடுவோர் ஒருவர் மீது ஒருவர் தக்காளிப்பழங்களை எறிந்து, தக்காளிச் சாற்றில் நனைந்து மகிழ்வார்கள்.**

**ஸ்பெயின் வீதியொன்றில் கொட்டப்பட்ட 100 தொன்கள் தக்காளிப் பழங்களின் மீது உருண்டு புரண்டு 'டொமாடினா' பண்டிகையைக் கொண்டாடும் சிலரைப் படத்தில் காணலாம்.**



# —ஐ.நா.பாதுகாப்புச் சபையில்— ஆப்கானிஸ்தான் தொடர்பாக புதிய அணுகுமுறை வகுக்க ஆணை

## கோபி அனான் பிறப்பித்தார்

நியூயோர்க்,ஒக.26

ஆப்கானிஸ்தான் பிரச்சினை குறித்து ஐ.நா.பாதுகாப்புச் சபை புதிய தந்திரோபாயத்தை வகுக்க ஐ.நா.செயலாளர் நாயகம் கோபி அனான் ஆணை பிறப்பித்தார்.

ஆப்கானிஸ்தானில் இடம்பெற்று வரும் உள்நாட்டுப் போரையும், மனித அவலங்களையும், முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் புதிய அணுகுமுறை ஒன்றை வகுக்குமாறு ஐ.நா.செயலாளர் நாயகம் கோபி அனான் பாதுகாப்புச் சபைக்கு உத்தரவிட்டார்.



ஆப்கானிஸ்தானில் படிப்படியாக அமைதியை ஏற்படுத்தக்கூடிய வகையில், சில இலக்குகளை மையமாக வைத்துக்கொண்டு தந்திரோபாயங்கள் வகுக்கப்படவேண்டுமென்றும்-

அத்துடன் அரசொன்றைத் தெரிவு செய்து தேர்ந்தெடுக்கும் உரிமை ஆப்கானியர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் -

கோபி அனான் வலியுறுத்தியுள்ளார்.

ஏற்கனவே ஆப்கானிஸ்தானுக்கு எதிராக ஐ.நா.விதித்த தடைகளானது எதிர்பார்த்த பலனைத் தரவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(ஒ-4)

## திருச்சியில் 300 குடிசைகள் தீயில் சாம்பல்!

திருச்சி,ஒக.26

தமிழகத்தின் திருச்சி மாவட்டம் கொல்லான் குளத்தில் நேற்றுமுன்தினம் குடிசைப் பகுதி ஒன்றில் மூண்ட தீயில் சுமார் 300 குடிசை வீடுகள் எரிந்து சாம்பலாகின.

இந்த விபத்தில் அதிர்ஷ்டவசமாக எவரும் காயமடையவோ, இறக்கவோ இல்லை. ஆயினும் 15இலட்சம் ரூபா மதிப்புக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

# ஐ.நா. இனவிவகார மாநாட்டை பகிஷ்கரிக்க யூத மதகுரு முடிவு

ஐ.நாவினால் அடுத்த வாரம் நடத்தப்படவுள்ள இனவிவகார மாநாட்டில் கலந்துகொள்ளப்போவதில்லை என்று பிரிட்டனின் யூத மதபோதகரான ஜோனாதன் ஸ்சிஸ்ட் தெரிவித்துள்ளார்.

யூதர்களான இஸ்ரேலியர் மீது இன ஒதுக்கல் நடவடிக்கை தொடர்பாகக் கூறப்படும் அநாவசிய அவதூறுகள் காரணமாகவே இந்த முடிவை எடுத்திருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

பலஸ்தீனர்களுக்கு எதிராக இஸ்ரேல் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளை இன ஒழிப்புச் செயற்பாடாக ஐநா. மாநாடு கருதவேண்டும்மென்று பலஸ்தீன ஆதரவு அமைப்புகள் கோரிவருவது குறிப்பிடத்தக்கது.

# பிஜியில் கிளர்ச்சியின் பின்னர் இடம்பெறும் முதல் தேர்தல்

சுவா,ஒக.26

பிஜி நாட்டில் ஜனநாயக அரசு கவிழ்க்கப்பட்டு 15 மாதங்களின் பின்னர் நேற்று தேர்தல் நடைபெற்றது.

வெளிநாடுகளைச் சேர்ந்த 60 அவதானிகள் தேர்தலின் போது பணியிலீடுபட்டனர்.

கடந்த ஆண்டு மே மாதம் இந்திய வம்சாவளிப் பிரதமர் மகேந்திர சௌத்ரி மற்றும் அவரது அமைச்சரவைச் சகாக்கள் ஆகியோர் திடீர் கிளர்ச்சியில் பதவியகற்றப்பட்டதையடுத்து, அங்கு நிலவிய அரசியல் நெருக்கடிகளை, தேர்தல் முடிவுக்குக் கொண்டுவரும் என்று நம்பப்படுகிறது.

71 ஆசனங்களைக் கொண்ட பிஜி நாடாளுமன்றத்தின் தேர்தலில் சுமார் 4 லட்சத்து 51 ஆயிரம் பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர்.

பிஜி பூர்வகுடிகளுக்காக 23 தொகுதிகளும், இந்திய வம்சாவளியினர்களுக்காக 19 ஆசனங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன.

முன்னர் கிளர்ச்சியில் ஈடுபட்ட ஜோர்ஜ் ஸ்பைட் மற்றும் அவரது இரு சகாக்களுக்கு வாக்களிக்கும் தகுதி பறிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ-4)

# கட்டுநாயக்கா தாக்குதல் தொடர்பான அலுவலகக் குறிப்பில் புதிய தகவல்கள்

கொழும்பு, ஒக. 25

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் மீதும் அதனை அண்டியுள்ள விமானப் படைத் தளத்தின் மீதும் கடந்த மாதம் 24 ஆம் திகதி விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல் தொடர்பான அலுவலகக் குறிப்புகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

அந்தக் குறிப்புகளின் படி தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டவிதம் அந்தத் தாக்குதல்களைப் பாதுகாப்புப் படையினர் எவ்வாறு எதிர்கொண்டனர் என்பன குறித்து புதுமையான தகவல்கள் வெளியாகியுள்ளன.

★ விடுதலைப்புலிகள் தாக்குதல்களை மேற்கொள்ளுவதற்கு முன்னரே அவர்களது உத்தேசத் திட்டம் வெளியானது. முதலில் பொதுமகன் ஒருவராலும் இரண்டாவதாக விமானப்படை சார்ஜனாலும் மூன்றாவதாக விமானப் படைச் சிப்பாயாலும் தகவல்கள் தரப்பட்டன.

★ மின்சாரம் துண்டிக்கப்படும் வேளையில் விமானப் படைக்கு மின்சாரத்தை வழங்கும் மின்பிறப்பாக்கியைச் சுற்றி முட்கம்பி வேலி அமைக்கப்பட்டிருந்தது. இந்த முட்கம்பி வேலி ஊடாகவே விடுதலைப் புலிகள் விமானப் படைத் தளத்திற்குள் ஊடுருவியுள்ளனர். இந்த மின்பிறப்பாக்கி ஒரு வாரமாக செயலிழந்திருந்தது—ஆனால் திருத்துவதற்கு நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை

★ விடுதலைப் புலிகளின் குழுவில் 14பேர் அடங்கியிருந்தனர் எனப் பலரும் தெரிவிக்கின்றனர் — விடுதலைப் புலிகளின் வீடியோப் படப்பிடிப்பாளரும் அவர்களில் அடங்கியிருந்தார் என அறிக்கைகள் தெரிவிக்கின்றன. வீடியோப் படப்பிடிப்பாளர் அங்கு வந்திருந்தால் தனது உபகரணங்களுடன் விமான நிலையத்தின் பயணிகள் வெளியேறும் வழியூடாகத் தப்பிச்சென்றுள்ளார் என்றே கருதவேண்டியுள்ளது.

★ விடுதலைப் புலிகளின் 4 உறுப்பினர்கள் விமானப் படைத்தளப் பிரதேசத்திற்குள் குண்டுகளை வெடிக்க வைத்து தற்கொலைசெய்துள்ளனர்.

★ விமான ஓடுபாதையில் இறந்து கிடந்த 4 விடுதலைப் புலி உறுப்பினர்கள் குண்டுகளை வெடிக்க வைத்து தற்கொலை செய்து கொண்டனர்.

★ பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் குழப்பங்களின் மத்தியில் இராணுவக் கொமாண்டோக்களின் தாக்குதல் காரணமாக 2 புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர்.

★ பிரயாணிகள்தங்குமிடம் மற்றும் பொதிகள் அறையின் கூரைகளின் மேல் 2 புலி உறுப்பினர்கள் குண்டுகளை வெடிக்க வைத்துத் தற்கொலை செய்துள்ளனர்.

★ விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவர் ஜன்னல் ஊடாக குளிரூட்டும் பிரிவுக்குள் நுழைந்து குண்டை வெடிக்க வைத்து தற்கொலை செய்து கொண்டார்.

★ விமான நிலையம் மீண்டும் 24ஆம் திகதி மாலை 6.00 மணிக்குத் திறக்கப்பட்டது. ஆனால் 25 ஆம் திகதி காலை குளிரூட்டும் பிரிவுக்குள் துர்நாற்றம் வீசியதை அடுத்தே இந்தச் சடலம் கண்டெடுக்கப்பட்டது.

★ விமானப் படையினரால் விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவர்கூட கொல்லப்படவில்லை.

★ விமானப் படையினரின் தவறுதலான தாக்குதல் காரணமாக இராணுவக் கொமாண்டோ ஒருவர் கொல்லப்பட்டார்.

★ எயர்பஸ் ஏ. 340 விமானத்தில் விமானப் படையினரின் தோட்டாக் காயங்கள் காணப்படுகின்றன — இந்த ரகத் தோட்டாக்கள் (ரவைகள், விடுதலைப் புலிகளிடம் இல்லை.

★ ஏ. 320 ரக எயர் பஸ் விமானங்கள் இரண்டும் விமானப்படையினரின் துப்பாக்கிப் பிரயோகம் காரணமாகவே சேதமடைந்துள்ளன.

★ மேற்குறிப்பிட்ட எயர் பஸ் விமானங்கள் மூன்றில் எதற்கும் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களால் சேதங்கள் ஏற்படவில்லை. மேலும் இந்த மூன்று விமானங்களும் விமானப்படையினரின் தாக்குதல்கள் காரணமாகவே சேதமுற்றன.

★ பிரயாணிகள்தங்குமிடம் மற்றும் பிரயாணிகள் செல்லும் படிக்கட்டு ஆகியவற்றிற்கு ஆயுதம் தாங்கிய 9 விமானப்படைச் சிப்பாய்கள் பாதுகாப்பை வழங்கினர். இருந்த போதிலும் அவர்களால் ஒரு விடுதலைப் புலி உறுப்பினரைக்கூட வீழ்த்த முடியவில்லை.

★ விமானப் படையின் விமானங்களில் முதலாவது விமானம் அதிகாலை 3. 50 மணிக்கு அழிக்கப்பட்டது. சிறிலங்கன் விமான சேவைக்குச்சொந்தமான யு எல்.விமானம் (பயணிகள் விமானம்) காலை 6.10 க்குத் தாக்கப்பட்டது. இறுதியான விமானம் காலை 8.52க்குத் தகர்க்கப்பட்டது. விடுதலைப் புலிகளின் கடைசிப் போராளி தனக்குத் தானே குண்டை வெடிக்க வைத்தது காலை 9.10 மணிக்கு ஆகும்.

★ 38 ஆயிரம் படையினரைக் கொண்ட விமானப் படையின் அதிஉச்சப் பாதுகாப்பு வலயத்திற்குள் இவ்வளவு தூரம் அழிவுகளை மேற்கொள்ள 14 விடுதலைப் புலிகளுக்கு எடுத்த நேரம் 5 மணித்தியாலங்கள் மட்டுமே.

★ சம்பவத்திற்கு மறுதினம் விமானப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட கூட்டு நடவடிக்கையின் போது பற்றைக்குள் கஞ்சா புகைத்துக் கொண்டிருந்த சாதாரண நபர்கள் இருவர் நாயக்க கந்தையில் சுட்டுக்கொல்லப்பட்டனர். தென்னை மரத்தின் உச்சியில் இருந்த மற்றுமொருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். தென்னைமரஉச்சியில் இருந்து இலக்கு வைக்கிறார் எனத் தவறாக ஊகிக்கப்பட்டதால் அவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

★ இவற்றின்படி விமானப் படையினர் இராணுவக் கொமாண்டோ ஒருவரையும் 3 பொதுமக்களையும் கொன்றுள்ளனர் — மேலும் 3 பயணிகள் விமானங்களைத் தாக்கியுள்ளனர். அவற்றில் ஒன்று திருத்த முடியாதளவுக்குச் சேதமடைந்துள்ளது.

இவை அனைத்திற்கும் ஒரு விலை உள்ளது? அந்த விலை தான் எவ்வளவு? பொருளாதார இழப்பா? அது ஒரு நீண்ட கதையாகும்.

— இவ்வாறு ராவய' சிங்களப் பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

(ம)

## மண்டபம் அமைப்பு

நீர்வேலி தெற்கு அம்மன் ஆலயத்தில் வைரவப் பெருமானுக்கென தனியான சிறிய மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்த சிறிய மண்டபத்தில் வைரவப் பெருமான் பிரதிஷ்டை செய்து வைக்கும் வைபவம் விரைவில் இடம்பெறும். (க-17)

## துண்டுப் பிரசுரப் போட்டியில் முதலிடம்

சண்டிலிப்பாய், ஒக. 26

இந்த வருட தேசிய போஷாக்கு வாரத்தை முன்னிட்டு கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சு 'யுனிசெவ்' நிறுவனத்தின் அனுசரணையுடன் அகில இலங்கை ரீதியில் நடத்திய 'விற்றமின் ஏ' பற்றிய தகவல் துண்டுப் பிரசுரப் போட்டியில் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை யாழ். மாவட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளது.

இதற்கான சான்றிதழ் கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சினால் இப்பணிமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இச்சான்றிதழ் சிங்கள மொழியில் மட்டுமே உள்ளது. (ம-135)

# அறிவுரைகளின்படி நடப்பதே ஆன்மீக வாழ்வுக்கு அடிப்படை

சுதந்திரம் மனிதனின் பொது உடைமை. அதனை அனுபவிக்க விரும்புவது தவறாகாது. ஆனால் மற்றவர்களின் உரிமையைப் பாதிக்காத வகையில் செயற்படுவதுதான் சுதந்திரமாகும். இன்று சுதந்திரம் என்ற கருத்து நினைத்தவாறு பயன்படுத்தப்படுகின்றது. அவரவர் சொந்தக் கருத்துப்படி செயற்படுவதும், தன்னை ஒத்த உணர்வுடையவர்களைச் சார்ந்திருப்பதும் அனைவருக்கும் விருப்பம் தரும் என்பது உண்மை. பலர் அன்பினாலன்றிக் கட்டாயத்தினால் பணிகிறார்கள். இவர்கள் இறைவனை எண்ணிப் பணியாமல் இருந்தால் தண்டனையொன்று வரும்போது முணுமுணுப்பார்கள். இவர்கள் மனச் சுதந்திரம் அடையமாட்டார்கள்.

**ஞாயிறு நற்பிரசாதம்**

பெற்றோர், பெரியோர், மூத்தோருக்குக் கட்டுப்பட்டு நடக்கும்போது சுதந்திரம் பறிக்கப்படுகின்றது என்று நினைப்பது தவறானதாகும். இளமைத் துடிப்பும், இளம் பராயமும் இக்கருத்தை முற்றுமுழுதாக ஏற்றுக் கொள்வதில்லை. ஆனால் விவிலியம் கூறுகின்றது; ''பிள்ளாய் உன்னைக் கண்டித்துத் திருத்துவதை வேண்டாமெனத் தள்ளிவிடாதே.— தந்தை கண்டித்துத் திருத்தாத பிள்ளையுண்டோ, இவ்வாறு திருத்தப்படுவது இப்போது மகிழ்ச்சியாய் இராமல், துயரத்துக்குரியதாகவே தோன்றும். ஆனால் பின்னர் இவ்வாறு பயிற்சி பெற்றவர்கள் அமைதியாயும், நேர்மையான வாழ்வையும் பயனாகப் பெறுவர்''

(எபி.12:6,11,12).

எமது கருத்துப் பொருத்தமானது என்றாலும் பிறருடைய கருத்துக்கும் மதிப்புக் கொடுத்து சரியான கருத்தை நடைமுறைப்படுத்தும் போது அதிக பயன் கிடைக்கின்றது. எம் எண்ணங்கள் செயல்கள் தூய்மையற்றனவாகவும், வெளிகப்பற்றுள்ளனவாகவும் இருக்கும் மட்டும் நாம் பிறரைச் சுதந்திரமாக வாழவிடமாட்டோம். பிறருக்குக் கொடுக்க வேண்டியவற்றைக் கொடுக்காமல், நீதியான செயற்பாடுகளைத் தன்பணியாளர்களுக்கே செய்யாமல் மற்றவர்களை வழிப்படுத்த நினைக்கும் போது அக்கருத்து வலுவற்ற கருத்தாகும்.

இவ்வாறு தான் பலர் தம் பிழைகளை ஏற்றுக்கொள்ளாமல் வாழ்கின்றார்கள். இவர்களுக்கு இயேசு சொல்கிறார்: ''இடுக்கமானவாயில் வழியாக நுழைய வருந்தி முயலுங்கள். ஏனெனில் பலர் உள்ளே செல்ல முயன்றும் இயலாமற் போகும்'' (லூக்: 13:23) இவ்வாறு தாம் நினைத்தவாறு வாழ்பவர், இறுதி நாளில் ஆண்டவரின் தீர்ப்புக்கு உள்ளாவர்.

**ஆசிர் அன்ரனிபீற்றர்**

கடவுள் ஒருவனுக்கு உதவி செய்ய நினைத்துவிட்டால், எந்த மனிதனின் வன்பகையும் அவனுக்குத் தீமைசெய்ய இயலாது. உனக்கு சார்பாக அல்லது எதிராக நிற்பவர் யார் என்பதில் அதி கவனம் செலுத்தாதே. நீ செய்யும் அனைத்திலும் இறைவன் உன்னுடன் இருக்கின்றாரா என்பதில் கவனமும், கவலையும் செலுத்து. இறைவனின் திருவுளம் அயலாரின் நலன். இவற்றைத் தவிர வேறு எதையும் நாடாமலும், தேடாமலும் இருந்தால் நீ உள்ளத்தில் விடுதலை (சுதந்திரம்) பெற்று இன்புறுவாய்.

★

# மரண அறிவித்தல்

## திருமதி நாகம்மா நடராசா

(இளைப்பாறிய ஆசிரியை)

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், இணுவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட நாகம்மா நடராசா 24-08-2001 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா— ஆச்சிக்குட்டி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் — சீனிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், நடராசா (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சின்னம்மா, நாகரத்தினம், காலஞ்சென்ற தில்லைநாயகி, தில்லையம்பலம் (ஸ்கந்தபுரம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான, கணபதிப்பிள்ளை, யோகம்மா, திருநாவுக்கரசு, சோமசுந்தரம், நடனசபாபதி ஆகியோரின் அன்பு மைத்துனியும், வனஜா, தயாபரன் (பிரான்ஸ்), பிரபாவதி, மகேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், இரவீந்திரன் (கிராம அலுவலர், இணுவில் மேற்கு), சந்திரவதனா (பிரான்ஸ்), கிருபாமூர்த்தி (சிவன் ஸ்ரோர்ஸ், இணுவில்), கல்யாணி (பிரான்ஸ்), ஆகியோரின் அன்பு மாமியாரும், சிந்துஜன், கீர்த்திகா, அருண்பிரசாத், சோபிகா, சேந்தன், (பிரான்ஸ்), கௌசிகன் (பிரான்ஸ்), மாதுலன் (பிரான்ஸ்), துவாரகன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26-08-2001) ஞாயிற்றுக்கிழமை 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

இணுவில் மேற்கு, இணுவில்.

அ. நடராசா (கணவர், இளைப்பாறிய ஆசிரியர்)

(91572)

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 01 — 11 — 1946



உதிர்வு: 19 — 08 — 1999

## அமரர் வன்னியசிங்கம் கார்த்திகேசு

அம்பன்—குடத்தனை)

**திதி: 26-8-2001**

அன்புத் தெய்வமே!

உங்கள் ஆத்மா சாந்தியடைவதாக!

கற்பகா பண்ணை, அம்பன் குடத்தனை.

குடும்பத்தினர்.

(91597)

**உதயன்**

## இரட்டைத் தோணியில் கால் வைத்தால்....!

இரண்டு தோணியில் கால் வைப்பவன் நடுக்கடலில் வீழ்வது தவிர்க்க முடியாதது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசைப் பொறுத்த வரையில் - அதன் தலைமைத்துவத்தைப் பொறுத்த வரையில் - இந்த உண்மை நிதர்சனமாவது அதற்கு இப்போது புரியத் தொடங்கியிருக்கும் என்று கூறுவதில் தப்பில்லை. என்றாலும் அந்தப் பண்பை அது விட்டுக்கொடுப்பதாகவும் இல்லை.

நாட்டை உலுக்கிக் கொண்டிருந்த இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் - அமைதித் தீர்வு காண்பேன் என்று முழங்கிக்கொண்டு ஆட்சிக்கு வந்த சந்திரிகா, ஒரு புறத்தில் சமாதானம் பேசிக கொண்டு மறு புறத்தில் போர் முரசம் கொட்டினார். அதாவது இனப்பிரச்சினைத் தீர்வுக்கு வழி காண - ஒருபுறம் சமாதானத் தோணியிலும் - மறுபுறம் இராணுவ நடவடிக்கைத் தோணியலும் அவர் கால்வைத்தார். இப்போது தீர்வு முயற்சி நடுக்கடலில் வீழ்ந்து மூழ்கி அமுங்கிப் போய்க் கிடக்கின்றது.

1994 பிற்பகுதியில் ஜனாதிபதிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட சந்திரிகா அம்மையார் 1995 ஏப்ரல் வரை புலிகளுடன் சமாதானம் பேசுவதாக 'பாவனை' பண்ணினார்.

சமாதான முயற்சி முறிந்து ஆறு மாத காலத்துக்குள் குடாநாட்டின் கணிசமான பகுதிகளை புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து அரசுப் படைகள் கைப்பற்றின. அடுத்த ஆறு மாதத்துக்குள் குடாநாட்டின் முழுப் பகுதியுமே படையினர் வசமாயிற்று.

பத்தாண்டுகள் தனது கட்டுப்பாட்டில் இருந்த யாழ் குடாநாட்டை - இராணுவ ரீதியில் மனோபலம், தரம் குன்றியிருந்த தனது படைகளை வைத்துக்கொண்டு - பேச்சு முறிந்த ஆறு மாத காலத்துக்குள் சந்திரிகாவால் வெற்றிகொள்ள முடிந்தது எப்படி? ஆட்சிக்கு வந்து, சமாதானப் பேச்சு நடத்திக்கொண்டிருந்த காலத்திலேயே ஒரு புறம் பேச்சு நடத்திக்கொண்டு, மறுபுறத்தில் இராணுவ நடவடிக்கைகளுக்கான முழுத் தயாரிப்பில் தனது படைகளை ஈடுபடுத்தியதாலேயேதான் சந்திரிகாவுக்கு இது சாத்தியமாயிற்று.

நீண்ட காலம் கைப்பற்ற முடியாதிருந்த - முன்னைய ஐ.தே.க. அரசால் கைப்பற்றுவதற்கு எண்ணிக் கூடப் பார்க்க முடியாத நிலையில் இருந்த - யாழ்.குடாநாட்டை ஆறு மாத காலத்துக்குள் சந்திரிகா தனது படைகள் மூலம் கைப்பற்றுவதற்கு ஒரு புறம் சமாதானப் பேச்சிலும் மறுபுறம் இராணுவ முஸ்தீபுகளிலும் கால் வைத்திருந்ததே காரணம்.

சமாதானப் பேச்சு நடந்த காலத்திலேயே புலிகள் இது குறித்து எச்சரிக்கை விடுத்து வந்தனர். அரசு உண்மையாக நடக்கவில்லை; குள்ளத்தனத்துடன் செயற்பட்டு, குடாநாட்டைக் கைப்பற்றிக் கபளீகரம் செய்வதற்கு தனது படைகள் மூலம் சுற்றிவளைத்துத் தயாராகின்றது என்று அமைதிப் பேச்சு நடந்த காலத்திலேயே புலிகள் அபாய ஒலி எழுப்பி வந்தனர். விளைவு..... சமாதானப் பேச்சு தோல்வியில் முறிந்தது.

இப்போதும் கூட அரசியல் நெருக்கடி ஏற்பட்டுத் தனது அரசு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை இழந்த பின்னரும் இரண்டு தோணியில் கால்வைக்கும் தனது பண்பை சந்திரிகா அம்மையார் விடவில்லை. ஒரு புறம் ஜே.வி.பி. தோணியில் கால் வைத்து 'தகுதிகாண்' அரசு அமைத்து, காலத்தை ஓட்டி, தன்னுடைய ஆட்சியைத் தக்கவைக்க முயற்சி; மறுபுறம் ஐ.தே.கட்சியுடன் சமாதானம் - சமரசம் பேசி - தேசிய நல்லிணக்க அரசு அமைத்து, ஆட்சியைத் தொடரப் பிரயத்தனம்.

இரண்டு முயற்சிகளிலும் அவர் உண்மையானவராக - நேர்மையானவராக - இல்லை என்பது மற்றைய இரண்டு தரப்புக்கும் நன்கு தெரியும். கடைசியில் இந்தத் தோணியிலும் இல்லாமல் அந்தத் தோணியிலும் இல்லாமல் அரசு முறிந்து விழும்போது சந்திரிகாவும் அவரது பொது மக்கள் ஐக்கிய முன்னணியினரும் நல்ல பாடத்தைப் படிப்பர்.

ஜே.வி.பியைக் கையாள்வதிலும் கூட அம்மையார் இந்த இரட்டைப் போக்கைத்தான் கடைப்பிடிக்கின்றார்.

'தகுதிகாண் அரசு' அமைக்க ஜே.வி.பி. விதித்த நிபந்தனைகள் ஏற்க முடியாதவை என்று ஜனாதிபதி அந்தக் கட்சிக்குக் கடிதம் மூலம் அறிவித்திருக்கின்றார். ஆனால் அவரின் பிரதமரோ ஜே.வி.பி. விதித்த நிபந்தனைகளில் பலவற்றை ஏற்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும் எஞ்சியுள்ள ஓரிரு விடயங்கள் குறித்து மேலும் பேசித் தீர்வுகாணலாம் என்றும் அக்கட்சிக்கு, அதே நாளில் கடிதம் எழுதுகின்றார்.

இப்படி எல்லா விடயத்திலும் இரட்டைத் தோணியில் கால் வைத்து நாட்டைக் குட்டிச் சுவராக்கப்போகின்றது இந்த அரசு.

# வவுனியாவில் காணாமற்போன மூவர் பற்றித் தகவல் இல்லை

வவுனியா,ஓக.26

வவுனியா மாவட்டத்தில் கடந்த மாதங்களில் காணாமற்போன மூவர் பற்றித் தகவல் எதுவும் கிடைக்கவில்லை என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா அலுவலகம் தெரிவித்துள்ளது.

பூந்தோட்டம், 6ஆம் கொலனியைச் சேர்ந்த வில்லியம் கணேசன் (வயது 32) என்பவரை கடந்த பெப்ரவரி 27ஆம் திகதி முதலும் -

நெலுக்குளத்தைச் சேர்ந்த முனீஸ்வரன் சதீஸ்குமார்(வயது 18) என்பவரை கடந்த 14ஆம் திகதி முதலும் -

பொன்னரசங்குளத்தைச் சேர்ந்த மகாலிங்கம் கேதீஸ்வரன்(வயது16) என்பவரையும் கடந்த 15ஆம் திகதி முதல் காணவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## ஆங்கில ஆசிரியர் பதவிகள் வெற்றிடம்

வடமராட்சி கிழக்கு,ஓக.26

வடமராட்சி கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் 94ஆங்கில ஆசிரியர்களுக்கு வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

சில பாடசாலைகளில் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் ஆரம்பக் கல்வி, அழகியல் கல்வி ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர்களுக்கும் பற்றாக்குறை காணப்படுகின்றது. (ஐ-182)

## நாட்டு நடப்பு

**எருதும் திருமண நங்கையும்**

*கூட்டிவர கொஞ்சம் குனிந்தே நடந்துவரும்*
*மாட்டிவிடக் கழுத்தில் மகிழ்ந்தே அதை ஏற்கும் – நாட்டமுடன்*
*பூட்டிவிட பொறுப்பாய் கொண்டிழுக்கும் தன்மையினால்*
*கட்டும் தாலியும் கட்டை வண்டி எருதும் ஒன்றே அறி.*

*- விகடகவி.*

# அழுகிய பழங்களைக் கொண்ட கூடையை ஒத்த நிலையில் அரசு

## ரணில் கூறுகிறார்

கொழும்பு,ஓக.26

அழுகிய பழங்களைக் கொண்ட கூடையான இன்றைய அரசுக்குள் ஐ.தே.க. என்ற நல்ல பழத்தை வைத்தால் அதுவும் அழுகிவிடும். ஆகவே அந்த அழுகிய கூடைக்குள் விழ ஐ.தே.க. தயாரில்லை.

ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் இடம்பெற்ற ஐ.தே.கவின் அரசுக்கெதிரான ஆர்ப்பாட்டப் பேரணியின் முடிவில் மாநகரசபை மைதானத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

ரணில் தனதுரையில் மேலும் தெரிவித்ததாவது:-

"நாட்டு மக்களின் நம்பிக்கையை இழந்து விட்ட சந்திரிகா, இப்போது ஜே.வி.பி.மற்றும் ஐ.தே.கவின் ஆதரவை நாடுகிறார்.

"அடுத்த மாதம் ஏழாம் திகதி நாடாளுமன்றம் கூட்டப்படும் போது ஜனாதிபதி தனது அரசின் கொள்கை விளக்கப் பேருரையை நிகழ்த்த வேண்டும்.

"இவ்வுரை மீது விவாதம் நடத்தப்பட்டு, நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விட வேண்டியது நியதியாகும். அந்த வேளையில் சந்திரிகா அரசு நிச்சயமாகத் தோற்கடிக்கப்படும்.

"நாடாளுமன்ற ஜனநாயகத்தைப் பாதுகாக்க எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படும் ஒருவரைப் பிரதமராக்கி, பொறுப்புணர்ச்சி உள்ளவர்களை அமைச்சர்களாக்க அவரை அனுமதிப்பதுடன், சர்வஜன வாக்கெடுப்பை ரத்துச் செய்து நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்ட வேண்டும் என்று நாம் யோசனைகளை முன்வைத்தோம்.

"ஆனால் சந்திரிகா அதனை ஏற்கவில்லை.

"தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக நாடாளுமன்றத்தை மூடி, சர்வஜன வாக்கெடுப்புக்கு சந்திரிகா திகதி வைத்தார்.

"ஆனால் அது நடந்தால் தனக்குத் தோல்வி நிச்சயம் என்பதை ஜனாதிபதி தற்போது உணர்ந்து விட்டார்."

இவ்வாறு ரணில் கூறினார். (ஒ)

## தந்தைக்குத் தர்மம் இதுஎன உரைத்த விந்தை மிகு மைந்தர் இருவர் திறமை!

தந்தை மகன் உறவு மிகவும் உன்னதமானது. ஏன் பிள்ளைகள் பெற்றோர்மேல் வைத்திருக்கும் அன்புக்கு ஈடேது. இதுபற்றி நமது இலக்கியங்களில் இதயத்தைத் தொடக்கூடிய சந்தர்ப்பங்கள் இரண்டு உண்டு. ஒன்று கம்பராமாயணத்தில் வரும் இந்திரஜித் என்னும் மேகநாதன். மேகநாதன் சுத்தவீரன்.

சுத்த வீரன் எதிரியினுடைய வலிமையை இலகுவாக அறிந்துவிடுவான். இந்திரஜித் போர்க்களத்தில் பகைத்திறம் அறிந்து பின் தந்தையிடம் வருகிறான். அவனைத் தொழுது "ஐயனே இன்று நடந்த போரில் நான் அரிய பெரிய போர்க்கலங்களையெல்லாம் உபயோகித்தேன். ஆனால் அவை பயனற்றுப்போயின. அதனால் நான் போருக்கு அஞ்சினேன் என்று கருதற்க. உன்பால் வைத்த ஆசையால் ஒன்று சொல்லக் கருதி வந்தேன். சிறைப்படுத்திய சீதையை விட்டுவிட்டால் நாம் சீரும் சிறப்பும் சிதையாமல் வாழலாம். உன்மேல் வைத்த அன்பினால் இது சொன்னேன்" என்றான்.

சீறிச் சினந்தான் இராவணன் "பேதையே நீ அறியாமல் பேசுகிறாய் உன்னை நம்பியல்ல என் தோள் வலியை நம்பியே நான் சீதையைக் கொண்டுவந்தேன்".

*"வென்றிலன் என்றபோதும் வேதமுள்ளவும் யானும்*
*நின்றுளனன்றோ மற்றவ் விராமன் பேர் நிற்குமாயின்*
*பொன்றுதல் ஒருகாலத்தும் தவிருமோ, பொதுமைத்தன்றோ*
*இன்றுளார் நாளை மாள்வார் புகழுக்கும் இறுதியுண்டோ"*

உலகமுள்ளளவும் என்னுடைய புகழும் இராமனுடன் சேர்ந்து நான் தோல்வியுற்றாற்கூட நிற்கும். மரணத்தை யாவராலும் வெல்ல முடியுமோ, வாழ்க்கை நிலையானதோ? புகழே நிலையானது என்று சினந்து கூறுகிறான். இந்திரஜித் தந்தையின்பால் வைத்த வாஞ்சை வரண்டு போக குன்று முட்டிய குருவிபோல போர்க்களம் புகுந்து தன் தந்தைக்காக உயிர் துறக்கிறான். பிறன் மனை நயத்தல் பெரும் பிழை என்று தெரிந்தும் அவன் தந்தையைக் கைவிட்டான் இல்லை மாறாகத் தன் உயிரைவிட்டான். அவனன்றோ நன் மகன்.

**இலக்கியச்சோலை**

மற்றைய சம்பவம் கச்சியப்ப சிவாசாரியார் பாடிய கந்த புராணத்திலும் இப்படியொரு சந்தர்ப்பம் வருகிறது. சூரன் என்னும் பேரரசன் இந்திரன் முதலாம் தேவர்களைச் சிறை செய்தான். ஆயிரத்தெட்டு அண்டங்களையும் நூற்றெட்டு யுக காலம் ஆண்டான். இறுதியில் முருகன் அவதரித்து யுத்தத்துக்கு வருகிறான். யுத்தம் நடைபெறுகிறது. சூரன் மகன் பானுகோபன் இந்திரஜித் போலவே சுத்தவீரன். யுத்தம் செய்து முருகனை ஒரு பொழுதும் வெல்ல முடியாது என்று கருதித் தந்தையிடம் வருகிறான். "தந்தையே நான் பலபல படைக்கலங்களை உபயோகித்தேன். மாயப் படைகூட பயன்படாதது. எனவே உன்மேல் உள்ள அன்பினால் ஒன்று கூறுகிறேன் தேவர்களை விடுதி" என்கிறான். சீறிச் சினந்த சூரன்

*"மந்திர வர்க்கும் அல்லால் இடுக்கண் ஒன்றுமில்லும் தம்பால்*
*பிறந்திடும் மானம் தன்னை விடுவரோ பெரியர் ஆனோர்*
*சிறந்திடும் இரண்டு நாளைச் செல்வத்தை விரும்பியானும்*
*துறந்திடேன் பிடித்த கொள்கை சூரன் என்றொருபேர் பெற்றேன"*

என்று கூறி இவ்வுலக வாழ்வு நிலையற்றது இளமை, செல்வம், வீரம் யாவுமே அழியும். நிலைநிற்பது புகழே. அதனைத் தருவது மானமே என்று கூறி மறுக்கிறான். மனம் வெதும்பிய பானுகோபன் அமர்க்களம் சென்று போர் செய்து வீரசுவர்க்கம் அடைகிறான்.

தந்தையால் அன்பு வைத்துத் தன்னுயிர் ஈந்த மைந்தர்கள் இவர்கள்.

**உதயா**

# வவுனியா நீதிமன்றக் கட்டடத்தை பிரதம நீதியரசர் திறந்து வைத்தார்

வவுனியா,ஓக.26

வவுனியாவில் புதிதாக அமைக்கப்பட்ட மாவட்ட நீதிமன்றக் கட்டடத்தை பிரதம நீதியரசர் சரத் என். சில்வா சம்பிரதாயபூர்வமாக நேற்று முன்தினம் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் வவுனியா, ஹெப்பிட்டிகொலாவ, மன்னார், அநுராதபுரம், மாரவல ஆகிய பகுதிகளில் இயங்கும் நீதிமன்றங்களின் நீதிவான்கள் கலந்துகொண்டனர்.

இந்த விழாவில் ஓர் அங்கமாக- 'சுடர் ஒளி' பத்திரிகையின் ஆதரவுடன் நடத்தப்பட்ட பேச்சு, கட்டுரைப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பதக்கங்களையும் சான்றிதழ்களையும் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா வழங்கினார். (ஐ-3)

# கொழும்புத் துறைமுகத்திற்கு 217 கப்பல்கள் வரும் சாத்தியமில்லை

கொழும்பு,ஓக.26

ஸ்ரீலங்காவுக்கு வரும் கப்பல்களிடமிருந்து அறவிடப்படும் காப்புறுதிக் கட்டணம் இரண்டாவது முறையாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளதால், இம் மாதம் இங்கு வரவிருந்த 272 கப்பல்களில் 55 கப்பல்கள் மாத்திரமே அவற்றின் வரவை உறுதிப்படுத்தியுள்ளன.

பாதுகாப்பு காரணங்களால் அதிகரிக்கப்பட்டுள்ள காப்புறுதிக் கட்டணத்தை நீக்குமாறு ஸ்ரீலங்கா அரசும் கப்பல் முகவர்களின் அமைப்பும் 'லொயிட்ஸ்' காப்புறுதி நிறுவனத்திற்கும் லண்டன் காப்புறுதி நிலையத்திற்கும் வேண்டுகோள் விடுத்துள்ளன.

துறைமுகம் மற்றும் விமான நிலையம் ஆகியவற்றின் பாதுகாப்பு சர்வதேச தரத்தில் உள்ளது என உறுதிப்படுத்தப்பட்டால் மாத்திரமே அதிகரித்த காப்புறுதிக் கட்டணத்தை குறைத்தல் அல்லது நீக்குதல் பற்றிப் பரிசீலிக்க முடியும் என்று லண்டன் காப்புறுதி நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்த சுயாதீன மதிப்பீட்டாளர் ஒருவரை அனுப்பி அறிக்கை கோரவுள்ளதாக லண்டன் காப்புறுதி நிலையம் மேலும் தெரிவித்துள்ளது. (க)

# வீதி திருத்தப்பட்டது

பருத்தித்துறை நகரசபை எல்லைக்குள் நீண்டகாலமாகத் திருத்தப்படாதிருந்த தாழ்வு கலட்டி வீதி, திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

நகரசபைக்குக் கிடைத்த மூலதன நிதியிலிருந்து இரண்டு லட்சத்து 30 ஆயிரம் ரூபா செலவில் இவ் வீதியை பருத்தித்துறை நகரசபை திருத்தியுள்ளது. (ஐ-173)

### நாளை

ஆவணி 11
திங்கட்கிழமை
திதி: நவமி
மாலை : 7.01 வரை
நட்சத்திரம் : கேட்டை
பின்னிரவு 11.37 வரை
சுபநேரம்: 12:05 - 1.35
ராகுகாலம் : 7.35 - 9.05
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

உழைப்பில் ஊக்கமும், உண்மையில் உறுதியும், தொழிலில் திறமையும், தொண்டில் நேர்மையும், சொல்லில் இனிமையும், துன்பத்தில் சகிப்பும் காணப்படுமானால் வாழ்வில் வளம் இருக்கும்.


**கன்னிகள் காத்திருக்கின்றன, கவனம்!**



# சின்னஞ்சிறு விளம்பரம்

### DISSERTATION TYPE SETTING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் ஆங்கிலக் கட்டுரைகள், தட்டச்சு வேலைகள் செய்து, **Binding** செய்து கொடுக்கப்படும். பிள்ளையார், 676, பருத்தித்துறை வீதி, நல்லூர். (91376)

### புறோயிலர் விற்பனைக்கு

இறைச்சிக்கோழி புறோயிலர் **(BROILER)**, சேவல், கல்பேட் என்பன மொத்தமாகவும் சில்லறையாகவும் தேவையான நிறையில் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். 68, **OLD PARK ROAD, JAFFNA** (91536)

### சித்திரம்

தரம் 6 தொடக்கம் **O/L, A/L** வரையான மாணவர்களுக்கும் ஆர்வமுள்ளோருக்கும் சித்திரம் கற்பிக்கப்படும். இல.76, ஆத்திசூடி வீதி, கந்தர்மடம். (91488)

### லவ்பேட்ஸ் விற்பனைக்கு

லவ்பேட்ஸ் குருவிகள் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் பார்வையிடலாம். தொடர்பு:பி.திலீபன், மூணாமலை ஒழுங்கை, சுதுமலை அம்மன கோயிலடி, சுதுமலை. (91476)

### நாய்க்குட்டி விற்பனைக்கு

இரண்டு மாதங்கள் நிரம்பிய அழகிய கறுப்புநிற பொமேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:-அல்பிறேட், 25பாக்றோட், றெகிளமேசன், குருநகர். (91568)

### மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள சுப்பர் கப் - 90 பற்றி மொடல் மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. இல.71, பலாலி றோட், திருநெல்வேலி வடக்கு. (இராணுவ முகாம் அருகில்) (91562)

### விற்பனைக்கு

நல்லநிலையிலுள்ள லான்ட் மாஸ்ரர் பெட்டி, சைனா165**F** மொடல் எஞ்சின் நீர் இறைக்கும் இயந்திரம் (இந்தியன் இங்கிலண்ட்) மொடல் 12 என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: இ.பாஸ்கரன், 21, சட்டநாதர் வீதி, நல்லூர். (91539)

ஒருகைப் பாவனையில் உள்ள கார் (8 **SRI**5175 வொக்ஸ்வகன்) விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.40/18, வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (91510)

இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட இட்லி, தோசை அரைக்கும் இயந்திரம் **(Wet grinder)** (ஹோட்டல்களுக்குகந்தது) விற்பனைக்குண்டு தொடர்பு: இல.39, பிறவுண்வீதி, நீராவியடி. (91559)

### தவறிவிட்டது

கரணவாய் தெற்கைச் சேர்ந்த மகேஸ்வரி இராசசிங்கம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.377350221**V**) நல்லூர் கந்தசாமி கோயிலுக்கருகில் தவறிவிட்டது. கணடெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க் காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். இரகுராமன் பலபொருள் வாணிபம் கரணவாய் தெற்கு, (ஹரி கடை), கரவெட்டி. 070-212849. **(C-18006)**

உரும்பிராய் மேற்கு சிவகுலவீதியைச் சேர்ந்த இராசலட்சுமி கனகசுந்தரம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.485370323**V**), விசேட அடையாள அட்டை (இல. 0903028349) என்பன கடந்த 23.08.2001 அன்று மல்லாகத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (91586)

இராசரத்தினம் தெய்வசேனா என்பவருடைய தேசிய அடையாள அட்டை "(இல.407622081**V**), விசேட அடையாள அட்டை (இல.0909023323) என்பன நல்லூருக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டு எடுத்தவர்கள் முதலியார் வளவு, கரணவாய் தெற்கு என்னும் விலாசத்தில் ஒப்படைத்துதவவும். (91591)

### இறைச்சிக் கோழிகள் விற்பனை

**Broiler** மற்றும் இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து(பாதிக் கோழி உட்பட) தினமும் பெற்றுக்கொள்ளலாம். 19,முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (91397)

புறொயிலர், கல்பேட்ஸ் இறைச்சிக் கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. **1 Kg 150/-** சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு:- றாஜீவ், ஆனைக்கோட்டைச்சந்தி, **T.P. 3529, 2867.** (91413)

புறொயிலர், கல்பேட்ஸ் விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும் **1 Kg 150/-** தொடர்பு: இல.40 கோயில் வீதி, யாழ்ப்பாணம். (91543)

இறைச்சிக்கோழி **(Broilers)**, கல்பேட்ஸ் என்பன விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு:- இல.15, 6ஆம் குறுக்குவீதி, யாழ்ப்பாணம். (91551)

இறைச்சிக்கோழி **(BROILERS)**, கல்பேட்ஸ் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு:- ச.கிருபாகரன், வன்னியசிங்கம் வீதி, தாவடி, கொக்குவில். (91580)

### விற்பனைக்குண்டு

வைரா புறோயிலர் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. விலை 50/=. புறோயிலர் இறைச்சிக்கோழி குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். லக்கி, மதவடி ஒழுங்கை, திருநெல்வேலி. (91583)

### பேட்டுக்குஞ்சுகள் விற்பனைக்கு

பிறிமா, சேவர் இனச் சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- குணபாகன், 343,கே.கே.எஸ்.வீதி, 609,கே.கே. எஸ் வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (91587)

### திருமண சேவை

எல்லா மதத்தினருக்கும் சகல விதமான மணமகன்கள், மணமகள்கள் எம்மிடம் உள்ளனர். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- கமலக்கண்ணன் திருமண சேவை. இல.3.கச்சேரி நல்லூர் வீதி, மூத்தவிநாயகர் வீதி, யாழ்ப்பாணம். (91588)

### யா/ இணுவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்

### வருடாந்தப் பொதுக்கூட்டம

காலம்:- இன்று (26.08.2001)ஞாயிற்றுக்கிழமை மாலை3.00 மணி
இடம்:- **கல்லூரி மண்டபம்.**

அனைவரையும் தவறாது சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(C/18005) **- பழைய மாணவர் சங்கம்**

## ஆறாண்டு நினைவலைகள்

மலர்வு 18 - 04 - 1907



உதிர்வு 02 - 09 - 1995

### அமரர் ஆறுமுகம் கந்தையா

(இளைப்பாறிய தபாலதிபர், கோப்பாய்)

திதி:- பூர்வபக்க அட்டமி 26.08.2001

ஆறாண்டென்ன ஆறாறு ஆண்டுகள் தான்
சென்றாலும் உங்கள் அன்பு
வெள்ளம் எங்கள் நெஞ்சில் என்றும் நிறைந்திருக்கும்.

உங்கள் ஆத்ம சாந்திக்காக ஆண்டவனை இறைஞ்சுகின்றோம்.

**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள.**

*கைதடி தெற்கு, கைதடி* (91582)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியையான
திருமதி வசந்தி எட்வேட் றெஜினோல்ட் அவர்களின் அன்புத்தாயார்

### திருமதி மகேஸ்வரி பொன்னுத்துரை

அவர்களது மறைவு குறித்து துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
ஊழியர்கள், மாணவர்கள்,
**யா/கரம்பொன் சிறிய புஷ்ப மகளிர் ம.வி.**
**ஊர்காவற்றுறை.**

(91581)

### மீனவர் தங்கு மடத்துக்கு அடிக்கல்

காரைநகர் சாம்பலோடையில் மீனவர் தங்குமடம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது.

காரை. மத்தி கிராம சேவையாளர் எஸ்.கே.சிவலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அரச, அரச சார்பற்ற நிறுவன அதிகாரிகள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

இந்த மீனவர் தங்குமடத்தை அமைப்பதற்காக அகதிகளுக்கான ஐநா. தூதரகம் 5லட்சத்து 50ஆயிரம் ரூபா நிதியை வழங்கி உள்ளது. (ஐ-73)

### வேலணையில் சுகாதார விழிப்புணர்வு

வேலணை,ஓக.25

வேலணைப் பகுதியில் சுகாதார விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் வீடியோ படக்காட்சிகள் காண்பிக்கப்பட்டுவருகின்றன.

வேலணை பொது சுகாதார பரிசோதகர் பொ.யோகராசாவின் ஏற்பாட்டில் ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்களால் இப்படக்காட்சிகள் பொது இடங்களில் காண்பிக்கப்பட்டு வருகின்றன.

மாதத்தில் 1ஆம், 3ஆம் செவ்வாய்க் கிழமைகளில் இப்படக்காட்சி காண்பிக்கப்பட்டு வருவதாகவும் -

இதில் புழுநோய், பற்சிகிச்சை, மலேரியா மற்றும உள சுகாதாரம் போன்றவற்றினை விவரிக்கும் விளக்கப்படங்களுடனான காட்சிகளும் அடங்கும் எனவும் -

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைப் பொறுப்பதிகாரி ச.திவ்வியகுமாரன் தெரிவித்துள்ளார். (ம-167)

## தேவை

இரும்புக் கடை வியாபாரத்தில் அனுபவம் உள்ள விற்பனையாளர் தேவை.
எதிர்வரும் 29.08.2001இற்கு முன் நேரில் வரவும்.

**20,கே.கே.எஸ் வீதி,**
**சுன்னாகம்.** (91590)


## அறிவித்தல்

*தயவு செய்து கவனிக்கவும் ஜப்பானைச் சேர்ந்த* Nippon Antenna Company, Nippon America Booster*களைத் தயாரிப்பதில்லை.*
KOBE Antenna Booster*களைத் தயாரிக்கும்* SHOWA Company Limited *ம் நிப்போன்அமெரிக்கா பூஸ்டர்களைத் தயாரிப்பதில்லை.*

**KOBE Booster பெட்டிகளில் வரும் இந்தப் போலி பூஸ்டர்களுக்கு நாம் எந்த பொறுப்பையும் ஏற்கமுடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.**

3 வருட உத்தரவாதம்
(ட்ரான்ஸ்போமரைத் தவிர்த்து)

அசல் முதல் தர விற்பனைச் சாதனை கொண்ட

**கோபே அன்டெனா பூஸ்டர்**

என்று கேட்டு வாங்குங்கள்

**LANKA NIPPON**

No.18, Keyzer St, Colombo-11.Tel:437735.
No.10, Trelawny Place, (Behind Milk Bar), BambalapitiyaJunc,Colombo-04.Tel:589992.

AVAILABLE ISLAND WIDE


## மாவட்ட நீதிமன்றம் - மல்லாகம்.

வழ.இல:- மணநீக்கம/120

பொன்னுத்துரை அசோகன் பெண் மேகலா
மே/பா, கே. குமாரலிங்கம்
இணுவில், தெற்கு, இணுவில்.

*- வழக்காளி -*

எதிர்

பொன்னுத்துரை அசோகன்
உடையார் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

*- எதிராளி -*

### பின்னுறுதித் தீர்வை

மேற்படி இலக்க வழக்கு 2001ஆம் ஆண்டு ஆனி மாதம் 22ஆம் நாள் மல்லாகம் மாவட்ட நீதிபதி திருவாளர் பா.சுப்பிரமணியம் அவர்கள் முன்னிலையில் வழக்காளியும் அவரது சட்டத்தரணியும் மன்றில் சமுகமாயிருக்க எதிராளியோ அல்லது அவரது பதிவுபெற்ற சட்டத்தரணியோ மன்றில் சமுகமாயிருக்காத காரணத்தினால் ஒருமுக விளக்கம் நடைபெற்று வழக்காளியின் சாட்சியம் பதியப்பட்டு பின்வருமாறு தீர்ப்பு வழங்கப்பட்டது.

வழக்காளியின் பிராது, சாட்சியம் ஆகியவற்றின் அடிப்படையில் எதிராளி வழக்காளியை வன்மமாகப் பிரிந்து வாழ்வதால் வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையே 1998ஆம் ஆண்டு வைகாசி மாதம் 11ஆம் திகதி நடைபெற்ற பதிவுத் திருமணம் மன்றினால் இரத்துச் செய்து தீர்ப்பளிக்கப்படுகின்றது.

இப்பின்னுறுதித் தீர்வையின் எதிராளி இன்றிலிருந்து மூன்றுமாத காலத்துக்கும் தகுந்த காரணத்துடன் ஏன் முற்றான தீர்வையாக்கப்படாது எனக காரணம் காட்டாதவிடத்து முற்றாக்கப்பட்டு முற்றான தீர்வையாகப் பதியப்படும்.

2001ஆம் ஆண்டு ஆனி மாதம் 25ஆம் நாள்.

ஒப்பம்:-
மாவட்ட நீதிபதி
மல்லாகம்.

என்னால் வரையப்பட்டது.
**எஸ்.பி.சிவஞானம்**
*வழக்காளியின் சட்டத்தரணி.*

(C/17993)

## கண்ணீர் அஞ்சலி

இணுவில் மேற்கு J/191 கிராமசேவையாளர்
திரு.க.இரவீந்திரன் அவர்களின் அன்பு மாமியார்

### திருமதி நாகம்மா நடராசா

(இளைப்பாறிய ஆசிரியர்)

**அவர்களது மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த மனவேதனையுறுகிறோம். அமரருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகிறோம். அத்துடன் அவரது பிரிவால் வாடும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

**இணுவில் மேற்கு**
(91585) **விவசாய சம்மேளனமும் விவசாயிகளும்.**

## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது நாவாந்துறை புனித மரியாள் ஆலய புனரமைப்பிற்கும்
நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகத்திற்கும்
நிதி ஒதுக்கீடு செய்து உதவியமைக்காக



வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு,
புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ்
விவகாரங்கள், இந்து சமய கலாசார
அமைச்சருமாகிய
மாண்புமிகு
**திரு.கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும்



யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்
**கௌரவ கே.வி.குகேந்திரன்**
**(ஜெகன்)**
அவர்களையும்

தோழர் **கேதீஸ் (மனோ)** அவர்களையும்
யாழ்.மாநகர சபை உறுப்பினர் **இளங்கோ (றீகன்)**
அவர்களையும்
*அவர்கள் சேவை மேன்மேலும் சிறந்து ஓங்க நன்றியுடன்*
*பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

நாவாந்துறை புனித மரியாள் ஆலய பங்குத்தந்தையும்
பங்கு மக்களும், நாவாந்துறை சென்.மேரிஸ்
விளையாட்டுக் கழகமும்,
(91566) நாவாந்துறை சென்.மேரிஸ் சனசமூக நிலையமும்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
15 - 10 - 1953

மறைவு
26 - 08 - 1999

### அமரர் நடராசா திசைவீரசிங்கம்

திதி:-02-09-2001

ஈராண்டு சென்றாலும் - உங்கள்
இனிமையான நினைவுகள் இதயத்தை விட்டு அகலவில்லை
எங்கே சென்றுவிட்டீர்கள் எமை வாடவிட்டு?
இறைவனை நாம் வேண்டுகின்றோம் - உங்கள்
ஆத்மா சாந்தியடைந்திடவே!

அன்பு மறவாத
மனைவி:- தி.சத்தியபாமா,
மகள்:- தி.றயினா, உறவினர்கள்.

*இராஜவீதி,*
*சிறுப்பிட்டி மேற்கு.* (91540)

## 35ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு
04 - 04 - 1927

உதிர்வு
24 - 07 - 2001

### அமரர் நாகமணி சீவரட்ணம்

*(இளைப்பாறிய லிகிதர், கச்சேரி, யாழ்ப்பாணம்)*

பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய்
பாங்குடனே பலருக்கு உதவி பல புரிந்து
பரகதி அடைந்த அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.....

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் அண்மையில் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட அன்னார் 24-07-2001இல் இறைவனடி எய்தியமையை இட்டு அவரது ஆத்மா சாந்தி நிகழ்வு நாளை (27.08.2001) திங்கட்கிழமை அச்சுவேலியில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:-
பாசமிகு தங்கை
திருமதி தர்மலிங்கம் குணலட்சுமியும்
குடும்பமும்.

*சட்டத்தரணி சபாரட்ணம் ஒழுங்கை,*
*அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.* (91498)

## நிரந்தர வீடுகள்

தென்மராட்சி,ஓக.26

பலாலிப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து வடமராட்சி பிரதேசத்தில் வியாபாரி மூலை, வறுத்தாலை, சக்கோட்டை, இன்பருட்டி போன்ற இடங்களில் தங்கியுள்ள குடும்பங்களுக்கென இப் பகுதிகளில் 200 நிரந்தர வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

நிரந்தர வீடுகள் அமைப்பதற்குரிய நிதியினை வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## கராத்தே போட்டி

யாழ்ப்பாணம்,ஓக.26

ரங்கன் மாஸ்ரர் ஆட்ஸ் கராத்தே கழகம் நடத்தும் மாபெரும் கராத்தே போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினராக வலி.தென்மேற்கு பிரதேச சபைத் தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் கலந்துகொள்ளவுள்ளார். (ஐ-4)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஓக.26

சுன்னாகம் சந்தை சுற்றாடலில் வசிக்கும் 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த மக்கள் யுத்தப் பாதிப்புகள் தொடர்பாக சுன்னாகம் மத்தி கிராம சேவையாளருடன் இன்று காலை 9.30 மணிக்கு கலந்துரையாடவுள்ளனர்.

சுன்னாகம் றோ.க.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில் இப்பகுதி இளைஞர் யுவதிகள் மற்றும் பெற்றோர்களைக் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

## ஆலயம் புனரமைப்பு

சண்டிலிப்பாய்,ஓக.26

பிரசித்தி பெற்ற மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்தில் புனரமைப்புப் பணிகள் தற்போது துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அலயத்திற்கு அண்மையிலுள்ள காணி ஒன்றை ஆலய நிர்வாகம் கொள்வனவு செய்துள்ளது தெரிந்ததே. ஆலயத்திற்கு வரும் பக்தர்களுக்கான வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-135)

## தையல் மெஷின் கையளிப்பு நிகழ்வு


யாழ்ப்பாணம்,ஓக.21

பத்துப் பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்களைக் கையளித்து, உரிமைப்பத்திரம் வழங்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நெல்லியடி முருகன் திருமண மண்டபத்தில், கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்கத் தலைவர் த.சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராகக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ.கு.சண்முகநாதன் கலந்துகொள்வார்.

இந்தப் பத்துத் தையல் இயந்திரங்களையும் திரு.திருமதி ந.பாஸ்கரன் தம்பதியர் கூட்டுறவுச் சங்கத்துக்கு அன்பளிப்பாக வழங்கியிருந்தனர். (க-9)

## பெருமகிழ்வடைகின்றோம்



INTERNATIONAL UNIVERSITY FOR MARTIAL ARTS - SRI LANKA

இனரினால் இந்த அமைப்பின் தலைமையகத்தில்
**DR.V.THANARAJAH J.P (9TH DAN)**
Chief Instructor & Examiner
&
**KANCHO.S.V.SWARNARAJAH. B.Sc. (9TH DAN)**
Chief Instructor & Examiner
ஆகியோரினால் 12.08.2001இல் நடைபெற்ற
4ஆவது கறுப்புப் பட்டி வழங்குவதற்கான தரமுயர்த்தும் நிகழ்வில்
***SHOTOKAN KARATE ACADEMY - JAFFNA*** இன்
அமைப்பாளரும் பிரதம பயிற்றுநருமான
**SENSEI.D.ANTO DINESH M.T.SK (4TH DAN)**
சித்தி பெற்றமையினைப் பாராட்டிப் பெருமகிழ்வடைகின்றோம்.

**Chief Instructor, students**
**Shotokan Karate - Do - International**
**Federation - Jaffna.**
**Sri Lanka.**

(91561)

## நன்றி கூறுகின்றேன்

கலியுகவரதனாம் நல்லைக் கந்தன் தண்ணீர்ப் பந்தலுக்கு சீனி மூடை மற்றும் பணஉதவி செய்பவர்களின் பெயர், விலாசங்கள் பத்திரிகையில் பிரசுரிப்பது வழமை. இம்முறை பலர் தர்மம் செய்வதை வலக்கை கொடுப்பது இடக்கைக்குத் தெரியக் கூடாதாம் என்கின்றனர். ஆனால் நீங்கள் எல்லோரும வழமைபோல் உதவி செய்தீர்கள் மேலும் யாழ். மாநகரசபை, நீர்வள சபை மற்றும் நீர் விநியோகப் புனரமைப்புத் திட்ட ஆலோசகரும், ஜீ. ரீ. இசற் பொறியியலாளரும் பெரிய தண்ணீர்த் தாங்கி களைத் தந்து எமக்கு உதவினர். இலங்கை மின்சார சபையின் நல்லூர்ப் பகுதியினர் எந்த நாளும் பந்தலை ஒளிமயமாக இருக்க உதவினர். ஆகவே யாழ். மாநகரசபை மேயர், அங்கத்தவர்கள், ஆணையாளர் மற்றும் எல்லோருக்கும் வாகனப் பொறுப்பாளர், பகல் நேர வாகனச் சாரதிகள், ஊழியர்க்ளுக்கும் மற்றும் அழகாகப் பந்தலை அமைத்துத் தந்த இந்திரன் குழுவினருக்கும் - கந்தனுக்குப் பிள்ளை யார் அண்ணன் உதவுகிறது போல யாழ் நகரில் மின்சாரம் தடைப்பட்டவுடன் நல்லைக் கந்தன் பந்தல் மட்டும் ஒரே ஒளி மயமாக இருக்குமே! எப்படி? யாழ் நகரில் 676, பருத்தித் துறை வீதி, நல்லூரில் கணனி முறையில் முன்னேறிக் கொண்டு செல்லும் பிள்ளையார் அச்சகத்திலிருந்து மின் இயந்திரம் மூலம் எமக்கு ஒளி தந்தவர்களுக்கும் மற்றும் எல்லோருக்கும் எனது மனமார்ந்த நன்றியைக் கூறுகின்றேன். முருகன் கொடியவருத்தங்கள், துன்பங்கள், ஒன்றுமில்லாமல் உங்கள் அனைவரையும் காப்பாற்றுவாராக!

நன்றி!

நல்லைக் கந்தன் தண்ணீர்ப்
பந்தல் நிர்வாகி
(91542) திரு.சு.கனகரத்தினம்.

## 31ஆம் நாள் நினைவலைகள்..



### திருமதி கிருஷ்ணபிள்ளை அன்னப்பிள்ளை

(அன்னம்மா)

மலர்வு
28-01-1916 (அரியாலை)

உதிர்வு
27-07-2001 (லண்டன்)

**பாசத்தின் திருவுருவமாய் பண்பின் உறைவிடமாய் எங்களுக்கெல்லாம் அன்பு காட்டி அரவணைத்த நீங்கள் பிறந்த மண்ணினை விட்டு லண்டனில் வசித்து வந்தீர்கள். எம்மைவிட்டுப் பிரிந்து 31 நாள்களல்ல பல்லாயிரம் நாள்கள் சென்றாலும் உங்கள் நினைவுகள் எம் நெஞ்சங்களைவிட்டு என்றுமே மறையமாட்டாது.**

உங்கள் ஆத்மா சாந்தியடைய இங்குள்ள உறவினர்கள்
அனைவரும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மைத்துனர்கள்:-
1. மு.சோமசுந்தரம் *(அரியாலை கண்ணகை அம்மன் ஆலய தர்மகர்த்தா)*
2. இ.மாசிலாமணி *(அரசினர் நிர்வாக உத்தியோகத்தர் சேவையிலிருந்தவரும், உளவளத்துணை நிபுணர், வடமாகாண புற்றுநோய் - எயிட்ஸ் நோய்த் தடுப்பு சங்க செயற்குழு உறுப்பினர், இ.இ.பேரவை நிர்வாக உத்தியோகத்தர், யாழ்ப்பாண மாவட்ட சமாதான நீதிவான்.)*


*இளையதம்பி வீதி,*
*(கண்டி றோட்),*
*அரியாலை,*
*யாழ்ப்பாணம்.* (91531)

# ST.JOHN . COLLEGE, JAFFNA.
# CHUNDIKULI GIRLS' COLLEGE, JAFFNA.
## ADMISSION - 2002

1. பின்வரும் வகுப்புகளில் வெற்றிடங்கள் உள்ளன. தரம் 1, தரம் 6.
2. (அ) விண்ணப்பப்படிவங்களை அந்தந்தக் கல்லூரிகளிலிருந்து 01.09.2001 முதல் 15.09.2001 வரை பெற்றுக்கொள்ளலாம்.
   (ஆ) எக்காரணம் கொண்டும் 15.09.2001ஆம் திகதிக்குப் பின் விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்படமாட்டாது.
   (இ) எமது விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
   (ஈ) விண்ணப்பப் படிவங்கள் ஏற்கப்படும் இறுதிநாள் 21.09.2001. அத்திகதிக்குப் பின் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டாது.
3. பிழையாக நிரப்பப்பட்டவையும், பூரணமாக நிரப்பப்படாதவையுமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம்.
4. தரம் ஒன்றுக்கான விண்ணப்பப் படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி (போட்டோ ஸ்ரற் கொப்பி) இணைக்கப்பட வேண்டும்.
5. விண்ணப்பப் படிவங்களை ஞாயிறும், விடுமுறையும் தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணிவரை அந்தந்தக் கல்லூரிகளில் பெற்றுக்கொள்ளலாம்.
6. ஒரு படிவத்துக்கான கட்டணம் ரூபா 300/-
7. வயதெல்லைகள் : (அ) தரம் 1: விண்ணப்பதாரி 01.02.1996க்கும் 31.01.1997க்கும் இடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
   (ஆ) தரம்6: விண்ணப்பதாரிகள் 01.02.1991 இல் அல்லது அதற்குப் பின் பிறந்திருத்தல் வேண்டும்.
8. பிரவேசப் பரீட்சை : தரம் 6 வகுப்புக்கு 29.09.2001 சனி காலை 9.00 மணிக்கு பரீட்சை ஆரம்பமாகும்.
9. ஏனைய வகுப்புகளுக்கான விண்ணப்பங்களையும் காரியாலயத்தில் இதே நாள்களில் பெற்றுக்கொள்ளலாம். பரீட்சை மார்கழியில் நடத்தப்படும். விவரங்கள் பத்திரிகைவாயிலாக அறிவிக்கப்படும்.

(C/17950) - அதிபர்கள்.


# முதலாம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில் மலர்வு 05 - 03 - 1935

விண்ணில் மறைவு 06 - 09 - 2000

**அமரர் பெரியதம்பி சோமசுந்தரம்** *(சீனர்)*

திதி:-26-08-2001

இந்நில மீதினில் ஒளியாகி
இலங்கிட வைத்துயர் காசினியில்
புன்னகை தவழ்ந்திடச் செய்தவரே!
புவியினில் இன்றுமை நாமிழந்து
சென்றதோர் ஆண்டது எனக்கண்டு
செய்வழி ஏதெனக் கலங்கியுமே
இன்றுங்கள் நினைவலை தனில்மூழ்கி
இருகரம் கூப்பியே அஞ்சலித்தோம்...!

*பிரபாகரன் கபே, மல்லாகம்.* (91443)

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# கண்ணீர் அஞ்சலி

கல்வியங்காடு ஸ்ரீ சத்தியசாயி பஜனை நிலைய இயக்குநர் சபையின் நீண்டகால உறுப்பினரான

**கந்தையா இராஜேந்திரா** *(இராசா)*

அவர்கள் இறைவனடி சேர்ந்ததையிட்டு நாம் எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம். அத்துடன் அவரது ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திப்பதோடு, பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நிர்வாகத்தினரும், சாயி பக்தர்களும்,
*ஸ்ரீ சத்திய சாயி பஜனை நிலையம், கல்வியங்காடு.*

(91528)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

The **Late.Rev.Mother Josephine Tynan**

- ஓய்வுபெற்ற அதிபர், யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடம் -
(1951 - 1971)

இவரது ஆன்ம சாந்திக்காக எதிர்வரும் (29.08.2001) புதன்கிழமை பி.ப. 5.00 மணிக்கு (புதியநேரம்) பாடசாலை சிற்றாலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இந்நிகழ்வுக்கு அனைவரையும் தவறாது சமுகம் தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர்,
திருக்குடும்ப ஆங்கில பாடசாலை,
பழைய மாணவர் சங்கம்.

(91527)

# வெளி மாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம்,ஓக.26

யாழ்மாவட்டத்தில் இருந்து வெளியிடங்களுக்குச் செல்வதற்கான பயண அனுமதிக்கு விண்ணப்பித்தவர்களில் இம்மாதம் 18ஆம் திகதி வரையும் அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

## யாழ்ப்பாணம்

| | | |
|---|---|---|
| (168715ஏ) | (189777ஏ) | (189791ஏ) |
| (189791பி) | (189796ஏ) | (189796பி) |
| (189799ஏ) | (189799பி) | (195395ஏ) |
| (195395பி) | (195395சி) | (197247ஏ) |
| (197403ஏ) | (200067ஏ) | (200067பி) |
| (200257ஏ) | (200257பி) | (200257சி) |
| (202096பி) | (202096சி) | (202308ஏ) |
| (202354ஏ) | (202354பி) | (202364ஏ) |
| (202364பி) | (202364சி) | (202364டி) |
| (202364ஈ) | (202252ஏ) | (202252பி) |
| (202252சி) | (202252டி) | (202252ஈ) |
| (202530ஏ) | (202613ஏ) | (202687ஏ) |
| (202687பி) | (202692ஏ) | (202712ஏ) |
| (202712பி) | (202726ஏ) | (202734ஏ) |
| (202734பி) | (202734சி) | (202835ஏ) |
| (202835பி) | (204828ஏ) | (204843ஏ) |
| (204847ஏ) | (204864ஏ) | (204866ஏ) |
| (204866பி) | (204868ஏ) | (204868பி) |
| (204868சி) | (204868டி) | (204869ஏ) |
| (204869பி) | (204869சி) | (204871ஏ) |
| (204871பி) | (204871சி) | (204871டி) |
| (204876ஏ) | (204876பி) | (204879ஏ) |
| (204879பி) | (204894ஏ) | (204914ஏ) |
| (204917ஏ) | (204917பி) | (204944ஏ) |
| (204944பி) | (204944சி) | (204944டி) |
| (204946ஏ) | (204946பி) | (204946சி) |
| (204951ஏ) | (204952ஏ) | (204978ஏ) |
| (204991ஏ) | (204991பி) | (205002ஏ) |
| (205002பி) | (205027ஏ) | (205028ஏ) |
| (205028பி) | (205029ஏ) | (205030ஏ) |
| (205033ஏ) | (205035ஏ) | (205051ஏ) |
| (205051பி) | (205056ஏ) | (205056பி) |
| (205070ஏ) | (205070பி) | (205077ஏ) |
| (205077பி) | (205077சி) | (205079ஏ) |
| (205079பி) | (205079சி) | (205092ஏ) |
| (205092பி) | (205096ஏ) | (205129ஏ) |
| (205166ஏ) | (205176ஏ) | (205176பி) |
| (205182ஏ) | (205220ஏ) | (205221ஏ) |
| (205221பி) | (205221சி) | (205222ஏ) |
| (205222பி) | (205222சி) | (205242ஏ) |
| (205242பி) | (205243ஏ) | (205243பி) |
| (205243சி) | (205243டி) | (205243ஈ) |
| (205253பி) | (205260ஏ) | (205265ஏ) |
| (205265பி) | (205265சி) | (205265டி) |
| (205265ஈ) | (205267ஏ) | (205267பி) |
| (205282ஏ) | (205282பி) | (205283ஏ) |
| (205447ஏ) | (205447பி) | (205447சி) |
| (205447டி) | (205447ஈ) | (205447எல்) |
| (206204ஏ) | (206225ஏ) | (206225பி) |
| (206231ஏ) | (206231பி) | (206235ஏ) |
| (206244ஏ) | (206244பி) | (206244சி) |
| (206274ஏ) | (206275ஏ) | (206277ஏ) |
| (206277பி) | (206361ஏ) | (206380ஏ) |
| (206384ஏ) | (206387ஏ) | (206387பி) |

## கோப்பாய்

| | | |
|---|---|---|
| (174038ஏ) | (174038பி) | (199036ஏ) |
| (199064ஏ) | (199075ஏ) | (199076ஏ) |
| (199091ஏ) | (199091பி) | (199099ஏ) |
| (199184ஏ) | (199184பி) | (199184சி) |
| (199184டி) | (199188ஏ) | (199188பி) |
| (199188சி) | (199190ஏ) | (199190பி) |
| (199191ஏ) | (199192ஏ) | (200441ஏ) |
| (201409ஏ) | (201409பி) | (203274ஏ) |
| (203274பி) | (203304ஏ) | (203304பி) |
| (203304சி) | (203375ஏ) | (203375பி) |
| (203375சி) | (203394ஏ) | (203394பி) |
| (204744ஏ) | (204744பி) | (204764ஏ) |
| (204789ஏ) | (204789பி) | (204791ஏ) |

## நல்லூர்

| | | |
|---|---|---|
| (171046ஏ) | (177196ஏ) | (177196பி) |
| (187462ஏ) | (187501ஏ) | (187501பி) |
| (187501சி) | (187809ஏ) | (191525ஏ) |
| (191525பி) | (191525சி) | (196191ஏ) |
| (199618ஏ) | (200485ஏ) | (201254ஏ) |
| (201254பி) | (201282ஏ) | (201291ஏ) |
| (201291பி) | (201291சி) | (204567ஏ) |
| (204567பி) | (204567சி) | (204715ஏ) |
| (204715பி) | (204715சி) | (204715டி) |
| (204715ஈ) | (204745ஏ) | (204745பி) |
| (204745சி) | (204749ஏ) | (204763ஏ) |
| (204763பி) | (204763சி) | (204800ஏ) |
| (199859ஏ) | (199859பி) | (199859சி) |
| (199859டி) | (202376ஏ) | (204906ஏ) |
| (204906பி) | (204918ஏ) | (204918பி) |
| (204918சி) | (204919ஏ) | (204965ஏ) |
| (204967ஏ) | (204967பி) | (204967சி) |
| (204972ஏ) | (205081ஏ) | (205281ஏ) |
| (205281பி) | (205284ஏ) | (206210ஏ) |
| (206210பி) | (206214ஏ) | (206248ஏ) |
| (206308ஏ) | (206324ஏ) | (206335ஏ) |
| (206353ஏ) | (206358ஏ) | (206373ஏ) |

## உடுவில்

| | | |
|---|---|---|
| (201310ஏ) | (201310பி) | (204554ஏ) |
| (204554பி) | (204573ஏ) | (204573பி) |
| (204609ஏ) | (204609பி) | (204703ஏ) |
| (204703பி) | (204755ஏ) | (204794ஏ) |

## சண்டிலிப்பாய்

(199782ஏ)

## தெல்லிப்பழை

(187740ஏ)

(க-10)

# குருக்கள் கனடா பயணம்

சண்டிலிப்பாய்,ஓக.26

கனடா நாட்டிலுள்ள றிச்மண்ட்ஹில் பிள்ளையார் ஆலயத்தில் எதிர்வரும் 30ஆம் திகதி நடைபெறவுள்ள மகா கும்பாபிஷேகத்தில் கலந்து கொள்வதற்காக கீரிமலை ஸ்ரீ நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரர் ஆலய ஆதீன கர்த்தா சிவஸ்ரீ குநகுலேஸ்வரக் குருக்கள் இவ்வாரம் அங்கு பயணமானார்.

(ஐ-135)


# முதலாவது பிறந்ததின வாழ்த்து

26-08-2001

HAPPY BIRTHDAY



**செல்வன் அருள்ராஜ் கபிலன்**

49/4, வில்வந்தெரு, கொழும்புத்துறை மேற்கில் வசிக்கும்,
**அருள்ராஜ்** (அருள்) - **மேகலாராணி** (மேகலா)
தம்பதிகளின் செல்வப் புதல்வன்

**செல்வன் கபிலன்**

தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (26-08-2001) ஞாயிற்றுக் கிழமை தனது இல்லத்தில் மிகக் குதூகலமாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மம்மா, பெரிய அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, அண்ணாமார்கள், அக்காமார்கள், பெரியம்மாமார்கள், மாமாமார், அத்தைமார்கள், தினேஷ சித்தப்பா, தர்சிகா மச்சாள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் நல்லூர்க் கந்தன் அருளால் பல்கலையும் கற்று, சகல செல்வங்களும் பெற்று, பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

*49/4, வில்வந்தெரு, கொழும்புத்துறை மேற்கு.*

தகவல்:
(91176) நா.அருள்ராஜ் *(அப்பா)*.

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

26-08-2001

HAPPY BIRTHDAY



**செல்வி பார்த்திபன் ஹரினி**

யாழ்ப்பாணம் - தெல்லிப்பழையைச் சேர்ந்த
**பார்த்திபன்** (சுந்தா) **திவாஜினி** (திவா)
தம்பதிகளின்

**செல்வப் புதல்வி ஹரினி**

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (26.08.2001) ஞாயிற்றுக்கிழமை இலண்டனிலுள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் அம்மப்பா, அம்மம்மா, கொழும்பு பத்தரமுல்லையில் வசிக்கும் அப்பம்மா (விமலா), ஜாஎலையில் வசிக்கும் திரிகரன் (செல்வம்) மாமா, பிரேமாஞ்சனி மாமி, வெள்ளவத்தையில் வசிக்கும் மகேஸ் வரசர்மா மாமா, சுபோ அத்தை, இலண்டனில் வசிக்கும் மோகன் மாமா, பவானி அத்தை, ராகவன் (பாபு), பெரியப்பா, நித்தியா பெரியம்மா, கனடாவில் வசிக்கும் ரமணன் மாமா, வனஜா அத்தை, மச்சான்மார், மச்சாள்மார், சகோதரர்கள், சகோதரி மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோர் சகல கலைகளும் கற்று, சீரும் சிறப்புடனும், பல்லாண்டு காலம் நீடூழி வாழ வேண்டுமென பாசமுடன் வாழ்த்துகிறார்கள்.

தகவல்:-
சி.மு.கந்தையா
(ஓய்வுபெற்ற அதிபர்).

*220, கச்சேரி நல்லூர் றோட், யாழ்ப்பாணம்.* (91448)



தெல்லிப்பழை ப.நோ.கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் தலைவரும், கூட்டுறவாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சி.சிவமகாராஜாவைப் பாராட்டிக் கௌரவிக்கும் வைபவம் சங்கத் தலைவர் ச.தன பாலசிங்கம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

பாராட்டு விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா சிவமகாராஜாவுக்கு விருது வழங்கிக் கௌரவிப்பதையும், அருகில் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம் அமர்ந்து இருப்பதையும் முதலாவது படத்தில் காணலாம். சங்கத்தில் 25 வருட சேவையைப் பூர்த்தி செய்த சங்கப் பணியாளர்களைக் கௌரவிக்கும் வைபவத்தில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட வலிகாமம் வடக்குப் பிரதேச செயலர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் பணியாளர் ஒருவருக்கு தங்கப்பதக்கம் சூட்டிக் கௌரவிப்பதை இரண்டாவது படத்தில் காணலாம். *(படங்கள்:சண்டிலிப்பாய் செய்தியாளர்)* (ஐ-135)

# கள்ளை 'ரின்'களில் அடைத்து விற்க பனை அபிவிருத்திச் சபை நடவடிக்கை

குடாநாட்டில் மேலதிகமான கள்ளை தகரம் மற்றும் பிளாஸ்ரிக் கொள்கலன்களில் அடைத்துக் களஞ்சியப்படுத்தி விற்பனை செய்வதற்கும் அவற்றை வெளி மாவட்டங்களுக்கு அனுப்பவும் பனை அபிவிருத்திச் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

அடுத்த வருடம் முதல் நடைமுறைக்கு வரவிருக்கும் இந்தத் திட்டத்துக்காக முதற்கட்டமாக ஒரு தொகுதி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் மு.பாக்கியநாதன் தெரிவித்தார்.

இதுவரை காலமும் குறிப்பிட்ட காலத்தில் பெறப்படும் கள் உடனடி விற்பனைக்கும், போத்தலில் அடைப்பதற்கும் சாராயம் வடிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டது போக, மீதமான பெருமளவு கள் நிலத்தில் ஊற்றப்பட்டு வந்தது.

இதனால் வருடந்தோறும் பெருமளவு கள் வீணானதுடன் சீவல் தொழிலாளர்களும் நஷ்டமடைந்தனர். இதனைத் தடுக்கவே அடுத்த வருட ஆரம்பத்திலிருந்து எஞ்சிய கள்ளினை 'ரின்'னில் அடைத்து விற்பனை செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதனால் இனிவரும் காலங்களில் சீவல் தொழிலாளர்களின் வருமானம் அதிகரிக்குமென்று கருதப்படுகிறது. இவ்வாறு மேலும் அவர் கூறினார். (ஒ-4)

# கூட்டுறவு பணியாளர்களுக்கு சம்பள உயர்வு

கோப்பாய்,ஒக.26

நீர்வேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஊழியர்களுக்கு புதிய சம்பளத் திட்டத்தின் கீழ் சம்பள உயர்வு வழங்கப்படவுள்ளது.

இம்மாதம் சம்பளத்துடன் கடந்த 7 மாத கால நிலுவையும் சேர்த்து வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-72)

# கட்டட வேலைகள் பூர்த்தி

கோப்பாய் பிரதேச செயலகத்தில் அமைக்கப்பட்டுவரும் சிற்றுண்டிச்சாலைக்கான புதிய கட்டடமும் மற்றும் பொதுமக்களுக்கான வாகனத் தரிப்பிடமும் பூர்த்தியுறும் நிலையில் உள்ளன. (ஐ-72)

# தன்னையும் தாய் நாட்டையும் காப்பாற்ற.....

தொடர்ந்து கொண்டிருக்கும் உள்நாட்டுப்போர் -

இந்த நாட்டின் அரசியல், சமூக, பொருளாதாரக் கட்டுக்கோப்புக்களை ஆட்டி, அசைத்து, வேரோடு பிடுங்கி எறியும் நாளைநோக்கி விரைந்துகொண்டிருக்கின்றது!

எப்படி வர்ணிப்பது என்று தடுமாறும் அளவுக்கு அரசியல் நிலை, கலங்கிப்போன குட்டையாய்க் குழம்பிப் போய்க்கிடக்கின்றது!

அவலச் சாவுகள், அகால மரணங்கள், அங்கவீனர் - அநாதைகள் - அகதிகள் என்போரின் அதிகரிப்பு எனப் பரிதாபத்துக்குரியோரின் தொகை சமூகத்தில் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது!

சிங்கள - தமிழ் உறவு சீர்செய்ய முடியாத அளவுக்குச் சிதைந்துவிட்டது!

பயங்கரப் படுகுழிக்குள் நாட்டின் பொருளாதாரம் பாய்ந்துவிட்டது!

நாட்டின் எதிர்காலம் புதிராய் - புகை மண்டலமாய் - பொய்யாய்ப் போய்விடுமோ என்ற அச்சம் எல்லோரையும் ஆட்டிப்படைக்கத் தொடங்கி விட்டது!

பயங்கரமான இந்த நிலைக்கு நிரந்தரமான ஒரு முடிவை ஏற்படுத்தி -

மக்களுள்ளங்களில் ஒரு புதிய நம்பிக்கையும் மறுமலர்ச்சியும் புத்தூக்கமும் ஏற்படவேண்டுமானால் -

போர் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும் -

அதன்மேல், பேச்சுவார்த்தை உடனடியாக நடத்தப்படல் வேண்டும் -

இனப்பிரச்சினைக்குரிய நீதியான, நியாயமான தீர்வு மிகவிரைவாக எட்டப்படல் வேண்டும்.

அதன்மேல், அந்தத்தீர்வு உடனடியாக நடைமுறைப் படுத்தப்படல் வேண்டும்!

இவற்றைச் செய்யவேண்டியவர்கள் - செய்யக் கூடியவர்கள் -

ஜனாதிபதி சந்திரிகா -

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் -

ஆகிய இரு தரப்பினருமே!

இவை அனைத்திற்கும் தாம் சித்தமாக இருப்பதாகச் சென்ற ஆண்டு மாவீரர் தினத்தில், சம்பந்தப்பட்ட அனைவருக்கும் சர்வதேச சமூகத்தினருக்கும் எவ்வித சந்தேகத்துக்கும் இடமின்றி மிகத்தெளிவான - உறுதியான குரலிற்கூறிய விடுதலைப் புலிகள் -

சமாதானத்துக்கான தம் ஆவலையும் அந்தரங்க சுத்தியையும் நிரூபிக்கும் வகையில், ஒருதலைப்பட்சமான ஒரு மாதகாலப் போர் நிறுத்தத்தை அறிவித்து - மாதா மாதம் அதை நீடித்து - நான்கு மாதங்கள் வரை அதை நேர்மையாகக் கடைப்பிடித்தும் வந்தார்கள்!

நடுநிலையாளராக - அரச தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட எரிக் சொல்ஹெய்ம் அவர்களின் சமாதான முயற்சிகளுக்குப் பூரண ஒத்துழைப்பையும் வழங்கினார்கள்!

ஆனால் -

தவறான ஆலோசனைகளாலும் தப்பான வழி காட்டலாலும் தர்க்கத்திற்கு ஒவ்வாத தான்தோன்றித் தனத்தாலும் -

'சமாதானத்துக்கான போர்' என்ற விசித்திரமான தத்துவத்தை நடைமுறைப்படுத்தி அதிர்ச்சியையும் அழிவையும் அவமானத்தையும் அடைவதைத் தன் வழக்கமாகவும் வாடிக்கையாகவும் கொள்ளத்தொடங்கி விட்டார் சந்திரிகா!

'தனிப் பெருந் தலைவி' என்ற நிலையிலிருந்து 'தனிச் சிறைத் தலைவி' என்ற நிலைக்குச் சந்திரிகா தள்ளப்பட்டிருக்கும் இந்த நிலையிலும் -

போர் நிறுத்தத்துக்கும் சமாதானத்துக்குமான தங்கள் 'விடுதலறியா' விருப்பத்தை விடுதலைப் புலிகள் மீண்டும் வெளிப்படுத்தி இருக்கின்றார்கள்!

சிங்கள மக்களும் தமிழ் மக்களும் ஒன்றிணைந்து வாழவேண்டும் என்பதில் எதுவிதமான பிரச்சினையும் இல்லை. சிங்கள மக்களைப் போலவே தமிழ் மக்களும் தனியான கலாசாரம், இறைமை, உரிமைகள், மொழி, பிரதேசம் என்பவற்றைக் கொண்டிருக்கின்றார்கள். நிரந்தரமான தீர்வென்பது ஒவ்வோரினமும் தமக்குரிய பிரதேச மண்ணில் சுதந்திரமாக வாழவேண்டும். அவர்கள் தனித்துவமாகத் தமது உரிமைகளுடன் மகிழ்ச்சியாகவும் சமாதானத்துடனும் வாழவேண்டும். இவ்வாறான நிலைமை வருமானால் அது குறித்து நாங்கள் பரிசீலிக்கவும் தயாராக இருக்கின்றோம் -

இவ்வாறு -

தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், தமது இயக்கத்தின் இப்போதைய நிலைப்பாட்டை மிகத் தெளிவாகக் கூறியிருக்கின்றார் - பி.பி.சிக்கு அளித்துள்ள செவ்வியில்!

இது, தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் மட்டும் கொண்டுள்ள கருத்து என்பதிலும் -

தம் பாரம்பரியத் தாயகமான வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் பேசும் மக்கள் -

நிர்ப்பந்தம் காரணமாக இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் உலகின் பல்வேறு நாடுகளிலும் இடம்பெயர்ந்து, உளம் நலிந்து வாழும் தமிழ் மக்கள் -

தமிழ் அரசியற் கட்சிகள் -

நியாய புத்தி படைத்த சிங்கள அறிவு ஜீவிகள் -

முதலிய பலரும் மனப்பூர்வமாக ஆதரிக்கும் கருத்தும் இதுவே என்பதுதான் பொருத்தம்!

ஆகவே -

'இரண்டாயிரத்து ஆறாம் ஆண்டுவரை ஜனாதிபதியாக இருக்கும்படி மக்களே என்னைத் தெரிவு செய்தனர்' என்ற இறுமாப்பைத் துறந்து-

மக்கள் தாங்கள் செய்த 'தவறை' உணர்ந்தபடி யாற்றான் எதிரணியினரின் பக்கம் சாரத் தொடங்கி விட்டனர் என்பதை உணர்ந்து -

அளிக்கப்பட்ட இறுதிச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி -

நீட்டப்பட்ட நேசக்கரத்தை, தீட்டப்பட்ட நாசக்கரமாக நோக்கும் போக்கை நீக்கி -

அந்த நேசக்கரத்தை நேர்மையுடன் பற்றி நேர்வழியிற் செயற்பட்டு -

தன்னையும் காப்பாற்றி -

தமிழ் மக்களையும் காப்பாற்றி -

தாய்நாட்டையும் காப்பாற்றுமாறு சந்திரிகா அம்மையாருக்குக் கூறிவைக்க விரும்புகின்றோம்.

*சித்தன்.*

# வாசகர் திருமுகம்

## பரீட்சை எப்போது?

யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கழக முதலாம் வருட நடனத்துறை மாணவியான எனது மகளிடம் "உனக்குப் பரீட்சை எப்போது" எனக் கேட்டேன். அவள் சொன்னாள் 'யாருக்குத் தெரியும், முந்திச் சொன்னார்கள் ஓகஸ்ட்டிற்குள் முடிந்துவிடும் என்று. பிறகு பார்த்தால் பேப்பரில் கலைப்பீட மாணவர்களுக்கு 13 ஆம் திகதி **(August)** பரீட்சை தொடங்குவதாகப் போட்டார்கள். ஆனால் நுண் கலைக்கு எப்ப பரீட்சை என்று போடவில்லை. கலைப்பிரிவு என்ற வகைக்குள் நாமும் அடங்குவதால் எமக்கும் அதற்குள்தான் நடக்கும் என்று நினைத்தோம். ஆனால் இதுவரை ஒரு தகவலும் இல்லை. போற போக்கைப் பார்த்தால் பல்கலைக் கழகத்துக்குள் இருக்கும் அனைத்து வருட மாணவர்களுக்கும் பரீட்சை வைத்த பிறகு தான் எம்மைத் திரும்பிப் பார்பார்கள் போல் இருக்கிறது. நடனத் துறை விரிவுரையாளர்களிடம் எப்போது பரீட்சை என்று கேட்டால், அவர்கள் நடனத்துறைத் தலைவரிடம் கேட்கச் சொல்லுகிறார்கள். தலைவரிடம் கேட்டால், அவர் பல்கலைக்கழகத்தில் கேட்கச் சொல்லுகிறார். அங்கு போனால் அவர்கள் யாரிடம் விடுவார்களோ?' என்று கூறுகிறாள்.

போன தடவை மேற்படி பரீட்சை பல்கலை மாணவருடன் சேர்ந்தே நடத்தப்பட்டது. ஆனால் இந்தத் தடவை அப்படி நடைபெறாது போல் இருக்கிறது. நுண்கலைத்துறை யாழ்.பல்கலைக்கழகத்துடன் இணைத்தாகி விட்டது என்ற பெயர்தானே தவிர, அவர்களை ஏறெடுத்துப் பார்ப்பவர்கள் யாருமில்லை. ஆனால் இவைகள் வெளி உலகிற்குத் தெரிவதில்லை. அதேநேரம் பல்கலைக்கழக மாணவர்களுக்கும், அங்கு வேலை பார்ப்பவர்களுக்கும் நுண்கலைத் துறையினருக்கு எங்கு பரீட்சைகள் நடைபெறுகின்றன என்பது இன்னும் தெரியாது என்றே கூற வேண்டும். அந்தளவிற்கு அவர்களை யாரும் அறிந்திருக்கவில்லை என்பது வேதனைக்குரியதே.

எனது பிள்ளையின் நண்பர், நண்பியர் சிலரிடம் இது பற்றிக் கேட்ட போது, "எங்களுக்கு இப்படி நடக்குமென்று தெரியாது. நாங்கள் எப்ப பரீட்சை எழுதி எப்ப எமது ஊர்களுக்குப் போய்ச் சேர்வது? பரீட்சை ஒழுங்காக ஓகஸ்டில் முடிந்துவிடும் என எல்லா அலுவல்களும் பார்த்தோம். இப்ப என்ன செய்வதென்று தெரியவில்லை" என்று கூறினார்கள். பெற்றோர்களாகிய நாம் இது பற்றி யாரிடம் முறையிடுவது? இதனால் வெளிமாவட்ட மாணவர்களே கூடுதலாகப் பாதிப்படைந்துள்ளார்கள். இது சம்பந்தமாக உரிய பொறுப்புக்களில் உள்ளவர்கள் விரைவில் இதற்கு ஒரு முடிவு எடுக்க மாட்டார்களா?

*யாழ்ப்பாணம்.* **பாதிக்கப்பட்ட மாணவர்களின் சார்பில் பாதிக்கப்பட்ட மாணவரின் பெற்றோர்.**

## சிகை அலங்கரிப்பாளர் சங்கம் உரிய நடவடிக்கை எடுக்குமா?

யாழ்.குடாநாட்டில் இன்று அதிர்ச்சி தரும் செய்தியாக உள்ளது என்னவென்றால் எய்ட்ஸ் நோயாளிகள் பலர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமையாகும். இது யாழ்ப்பாணக் கலாசாரத்துக்குப் பேரிடியாக வீழ்ந்த செய்தியாகும். இப்படிப்பட்ட சில கலாசாரச் சீரழிவு காரணமாக உலக நாடுகளிடையே யாழ்ப்பாணம் தலைகுனிந்து வெட்கித்து நிற்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது என்று கூடக் கூறலாம். ஏனெனில் அப்படி இறுக்கமாகக் கட்டிக்காக்கப்பட்ட கலாசாரம் சீரழிந்து போகும் நிலையில் உள்ளது.

இந்நிலையிலே எய்ட்ஸ் நோயாளிகள் எம் மத்தியில் இனம் கண்டும், இனம் காணப்படாமலும் உள்ளனர். சிகை அலங்கரிப்பு நிலையங்களில் முகச்சவரம் செய்யப்படுகின்றது. ஒரு சவர அலகு கொண்டு பல பேருக்கு முகச்சவரம் செய்யப்படுகிறது. எனவே சம்பந்தப்பட்டவர்கள் இந்நிலையை மாற்றி ஒருவருக்கு ஒரு சவரஅலகு கொண்டு சவரம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எனவே எதுவுமறியாத அப்பாவிகள், இளைஞர்கள் சிகை அலங்கரிப்பு நிலையங்களில் இவ்விதமான நடவடிக்கைகளினால் பெரும் ஆபத்தை சந்திக்கக்கூடும்.

அண்மையில்கூட சிகை அலங்கரிப்புக்கான கட்டணத்தை உயர்த்திய சிகை அலங்கரிப்பாளர் சங்கம் யாழ்.மக்களின் மிக முக்கிய அச்சுறுத்தலான இவ்விடயம் குறித்து உரிய நடவடிக்கை எடுத்து உரிய பதிலைத் தருமா?

*யாழ்ப்பாணம்.* **சகி.**

## சட்டவிரோத மின் பாவனையாளர் இனியும் திருந்தமாட்டார்களா?

சட்டவிரோத மின் பாவனையால் கல்வியங்காடு, கட்டப்பிராய், இருபாலை, கோப்பாய்தெற்குப் பகுதிகளில் வாழும் நிரந்தர மின் பாவனையாளர்கள் பெரும் சிரமத்துக்குள்ளாகி வருகின்றனர்.

மின்சார சபையால் வழங்கப்படும் இரவுநேர மின்விநியோகம்; ஒன்று விட்டு ஒரு நாள்களில் மாலை 6.30 மணி முதல் இரவு 10 மணிவரை நிறுத்தப்படுகின்றது. அதேவேளை மற்றைய நாள்களில் மின் வழங்கப்படும் நேரத்தில்தான் சட்டவிரோத மின் இணைப்பினால் இப்பகுதிகளில் 'பியூஸ்' அடித்து மின் துண்டிக்கப்படுகின்றது.

இதனால் சம்பந்தப்பட்ட பகுதிகளில் எவருக்கும் மின் இல்லாது அல்லல்படும் துர்ப்பாக்கிய நிலை உருவாகியுள்ளது.

எனவே இதுபோன்ற விஷமத்தனமான செயல்களில் ஈடுபடாது நற்பண்புடன் ஒழுகுமாறு சட்டவிரோத மின் பாவனையாளர்களிடம் இப்பகுதி வாழ் நிரந்தர மின் பாவனையாளர்கள் சார்பில் கேட்டுக்கொள்கின்றேன்.

*கோப்பாய் தெற்கு.* **சிவா.**

## மருதடி வீதியை கவனிப்பாரில்லையா?

யாழ்நகரில் அதிகளவில் மக்கள் போக்குவரத்துக்குப் பாவிக்கின்ற மருதடி வீதி நீண்ட நெடுங்காலமாகத் திருத்தப்படாமல் உள்ளது. முன்னைய காலங்களில் தான் வீதிகள் திருத்தப்படாமல் இருந்தமைக்கு பற்பல காரணங்களைக் கூறலாம்.

ஆனால் தற்பொழுது திறமைமிக்க மாநகர முதல்வரைக் கொண்ட சபை இருந்தும் கூட இதுவரை மேற்படி வீதியைத் திருத்துவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. மருதடி வீதியைத் திருத்த இனிமேலாவது நடவடிக்கை எடுப்பார்களா?

*மருதடிவீதி,*
*யாழ்ப்பாணம்.* **வி.எஸ்.லிங்கன்.**

# சங்கரத்தையில் 'சங்கத்தமிழ்' எழுச்சிபெற்ற பவளவிழா

'இன்றைய இளஞர்கள் இப்படியும் இருக்கிறார்களா' என்று வியக்கும் வண்ணம் சங்கரத்தை இந்து வாலிபர் சங்கத்தின் பவளவிழாவை இப்பகுதி இளைஞர்கள் முதல் பெரியோர் வரை மிகச் சிறப்பாகக் கொண்டாடியுள்ளனர். கடந்த 07.07.2001-08.07.2001 சனி, ஞாயிறு இரு தினங்கள் கொண்டாடப்பட்ட இவ்விழா, இன்னும் தமிழ் சாகவில்லை என்று பெருமைப்படக்கூடிய நிகழ்வாக நடந்தேறியது.

முதல்நாள் நிகழ்வு, இந்து வாலிபர் சங்கத் தலைவர் செல்வன் வெ.மகிந்தன் தலைமையில் நடைபெற்றது. வலி.மேற்கு பிரதேச செயலர் கலாநிதி க.குணராசா பிரதம விருந்தினராகவும், ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி 'விகடகவி' மு.திருநாவுக்கரசு சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

கரந்தை, குளவத்தை முருகன் ஆலய வழிபாட்டுடன் விருந்தினர்கள் மங்கள வாத்தியங்கள் சகிதம், சங்கரத்தை திறந்த வெளியரங்கிற்கு அழைத்துவரப்பட்டதானது; பெரியோரை கௌரவிப்பதில் இவ்வூர் இளைஞர்கள் பெரிதும் ஈடுபாடுடையவர்கள் என்பதை எடுத்துக்காட்டியது.

சிறப்பு விருந்தினரால் சிறப்பு மலர் வெளியிட்டு வைக்கப்பட்டது. முதற்பிரதியை சங்கரத்தை கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரும், சமாதான நீதிவானுமாகிய நா.ஜெயரஞ்சிதன் பெற்றுக்கொண்டார். மலர் வெளியீடு பற்றி உரையாற்றிய யாழ். மாவட்ட இளைஞர் சேவை மன்ற உதவி இயக்குநர் தி.சிவதட்சணாமூர்த்தி, இப்பகுதி இளைஞர்களின் இம் முயற்சியானது இவர்கள் இந்து சமய கலாசாரத்தை மறக்காமல், இறை வழிபாட்டை உள்ளார்ந்த மனதியில் 'பக்தி' சிரத்தையோடு போற்றுகின்றார்கள் என்பதை எடுத்துக்காட்டுகின்றது என்றார்.

### இளைஞரின் செயற்திறன்

தொடர்ந்து உரையாற்றிய ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி, -

இந்துசமய கலாசாரம், தமிழர் பண்பாடு போன்றவற்றையும் சமூக ஒருமைப்பாட்டையும் காட்டும் விதத்தில் இளைஞர்கள் ஒற்றுமையாகவும், இந்துசமய முறைப்படி வேட்டி, சால்வை உடையணிந்து சுறு சுறுப்பாகவும், திறமையாகவும் தத்தம் கருமங்களை செயற்படுத்துவதில் மும்முரமாக இருந்தது கண்கொள்ளாக் காட்சியக இருக்கின்றது. இன்றைய இளைஞர்களில் பலர் தெருத் தெருவாகக் குழுமி நின்று பொழுதை வீணடிப்பதும், வேண்டத்தகாத கருமங்களில் தம்மை ஈடுபடுத்தி சமூகத்தில் இருந்து விலகிச் செல்லும்போது இங்குள்ள இளைஞர்களின் செயற்றிறன் வரவேற்கத் தக்கதும் பாராட்டுக்குரியதும் ஆகும் - என்றார்.

"மாணவரின் கல்வி வளர்ச்சியில் பெரிதும் பங்களிப்பவர்கள் பெற்றோர்களா? ஆசிரியர்களா?" என்ற தலைப்பில் நடைபெற்ற பட்டிமன்றம் இவ் விழைவின் சிறப்பம்சமாக விளங்கியதோடு இதில் பங்குபற்றிய ஆசிரியர்கள், இளைஞர்களின் வாதத்திறமையும் மக்களை மயக்கத்தில் ஆழ்த்தி சிந்தனையைத் தட்டியெழுப்பியது என்றால் மிகையாகாது. இந் நிகழ்வுக்கு நடுவராகக் கடமையாற்றிய யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் அ.குமாரவேல் அவர்களின் தீர்ப்பு 'பெற்றோர்கள்தான்' என்றும் அதற்கான விளக்கங்களை அளித்தது.

சங்கானையைச் சேர்ந்த செல்வி வ.ஞாசுந்தரம் குழுவினர் தயாரித்து வழங்கிய 'அகந்தையின் மிடுக்கு' என்னும் நிருத்திய நாடகம் முதல் நாள் நிகழ்ச்சிக்குக் கட்டியம் கூறுவதாக அமைந்ததோடு, அதில் பங்கேற்றோர் ஒவ்வொருவரின் திறமையும் மெச்சக்கூடியதாக இருந்தது.

### இரண்டாம் நாள் நிகழ்வுகள்

செல்வன் இ.குமரேஸ் தலைமையில் ஆரம்பமான இரண்டாம் நாள் நிகழ்விற்கு வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். வலி.மேற்கு முன்னாள் பிரதேச செயலர் கா.சந்திரராசா சிறப்பு விருந்திரனராகக் கலந்து கொண்டார்.

இயல், இசைக்கு முக்கியத்துவம் கொடுத்த இந்த விழா வரவேற்பின் போது பாடசாலை மாணவர்களின் நடனத்துடன் ஆரம்பித்து வைக்கப்பட்டமை மனதைக் கவரக்கூடிய விதத்தில் அமைந்திருந்தது. மங்கள இசை முடிய, நடனம் ஆரம்பிக்க, வந்தோரை வரவேற்ற காட்சியானது வந்தோரை மகிழ்ச்சியுள் ஆழ்த்தியிருக்கும் என்பதில் வியப்பில்லை.

பெரியோரைக் கௌரவித்தல், சேவை செய்து ஓய்வுபெற்றோரைக் கௌரவித்தல் வரிசையில் வட்டு. மத்திய கல்லூரி அதிபர் வி.சிவஞானபோதம் அவர்களும், ஓய்வுபெற்ற உப தபாலதிபர் க.நடராசா அவர்களும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ந.திரிலோகநாதன் அவர்களால் கௌரவிக்கப்பட்டனர்.

'நாளை நமதே'.. என்ற தலைப்பில் மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தன் தலைமையில் கவியரங்கம் நடைபெற்றது. 'தமிழ்மொழிக்கு அமுது' என்று கூறிய பாரதிதாசனின் கூற்றுக்கொப்ப தமது திறமைகளைக் கவி பாடிக்காட்டி வந்தோரை மகிழ்வித்தனர் அதில் பங்குபற்றிய இளைஞர்களும் யுவதிகளும்.

இன்றைய சமூகத்துக்குக் குறிப்பாக இளம் சந்ததியினருக்குப் பாடம் புகட்டுவதை மையமாகக் கொண்டு நகைச்சுவையுடன் நல்ல கருத்தையும் வழங்கிய 'கண்டறியாத கல்யாணம்' என்னும் நாடகத்தைச் சங்க இளைஞர்கள் வழங்கி தமது இயல், இசை, நாடக ஆர்வத்தையும் வெளிக்காட்டினர். இப்படியான நிகழ்ச்சிகள் இன்றைய சூழலில் மக்களுக்கு ஒரு வித மன ஆறுதலைக் கொடுத்திருக்கும் என்பதில் ஐயப்பாடிராது. தமது கவலைகளை ஒருசில மணித்தியாலங்களாவது மறந்து தத்தம் குடும்பத்தோடு இந் நிழ்ச்சிகளைப் பார்த்து ரசித்துக் கொள்வதற்குச் சந்தர்ப்பம் வழங்கிய சங்கரத்தை இந்து வாலிபர் சங்கத்தினரின் முயற்சி வரவேற்கத்தக்க தொன்றாகும்.

**சங்கானைச் செய்தியாளர்**

குறிப்பாகச் சங்கத் தலைவர் செல்வன் வெ.மகிந்தன், உப தபாலதிபர் எஸ்.ரி.நந்தகுமார் போன்றோருடன் ஊர்ப் பெரியோரும், இளைஞர்களும் மிகவும் சிரத்தை எடுத்து ஒரு நாள் அல்ல இரண்டு நாள் நிகழ்வை நடத்தியுள்ளமை பாராட்டப்படவேண்டிய மிகப்பெரும் பணியாகும். ✣






வலி.மேற்கு பிரதேச கலாசாரப் பேரவையின் ஏற்பாட்டில் அராலியில் கடந்த 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்ற பௌர்ணமி தின கலை நிகழ்வில் செல்வி யசோதா மாரிமுத்துவின் மாணவர்கள் வழங்கிய நிரத்தியாஞ்சலி நிகழ்வின் ஒரு காட்சியைப் படத்தில் காணலாம்.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட செல்வி வா.சாந்தினி, செல்வன்.எஸ்.அனிருந்தன், செல்வி ந.ஜெயகௌரி ஆகியோர் நடன விருந்து அளிக்கின்ற காட்சி. *(படம்: சுழிபுரம் செய்தியாளர்)*

# தும்பளையில் "பாஞ்சாலிசபதம்"

**நீண்டகால இடைவெளிக்குப்பின் தும்பளை நெல்லண்டை பத்திர காளி அம்பாள் ஆலய வீதியில் நிறைந்த இரசிகர் கூட்டத்தின் மத்தியில் 03-08-2001ஆம் திகதி 'பாஞ்சாலி சபதம்' நாடகம் அரங்கேறியது.**

**சத்தியவான் சாவித்திரி, அரிச்சந்திரா, காத்தவராயன் போன்ற நாடகங்களைத் தொடர்ந்து பார்த்ததில் சலிப்பு ஏற்பட்ட ரசிகர் கூட்டம் இந்நாடகத்தைப் பார்க்க அலைமோதியதில் வியப்பில்லை.**

**இந் நாடகத்தைத் தயாரித்த அகில இலங்கை இளங்கோமன்றம் பாராட்டுதற்குரியது.**

**நடிப்பைப் பொறுத்த மட்டில் துரியோதனன், கர்னன், சகுனி, பாஞ்சாலி, அர்ச்சுனர், சந்தனமன்னன், குந்தி ஆகியோரின் நடிப்பு பாராட்டுதற்குரியது. இந்நாடகத்தில் துரியோதனனும், கர்னனும் சந்திக்கும் இடமும், குந்திதேவியும் கர்ணனும் சந்திக்கும் இடமும், இரசிகர்களின் பாராட்டைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.**

**இருப்பினும் குறைகள் இல்லாமலும் இல்லை. பின் பாட்டுப் பாடியவர்களின் சத்தம் வெளியே வரவில்லை?**

**பக்கவாத்தியங்களும் பாராட்டுக்களோடு இணையாமல் வேறுபட்டு நின்றதை அவதானிக்க முடிந்தது. இந்த நாடகம் முதல் முறை அரங்கேற்றம் செய்யப்பட்டதால் நாடகக் கதை அமைப்பில் பல குறைகள் தென்பட்டதை யாவரும் அறிவர். நெறியாழ்கை, தயாரிப்பு என்று எதனையும் கண்டுகொள்ள இயலவில்லை.**

**நாடக ஆரம்பத்தில் சலிப்புத்தட்டிய இரசிகர் கூட்டம் துரியோதனன், கர்ணன் வரவின்பின் உற்சாகமாக நாடகத்தை அவதானிப்பதைக் கவனிக்க முடிந்தது. இந்நாடகத்தில் முதுகெலும்பாக விளங்கியவர் துரியோதனன் பாத்திரமேற்று நடிப்பவர் தான். இரண்டாவதாக கர்னனும் குந்திதேவியும் சந்திக்கும் காட்சி எல்லோரது மனதையும் தொட்டு ஒரு சில இரசிகர்கள் கண்ணீர் சிந் தியதையும், அவதானிக்க முடிந்தது. மொத்தத்தில் குறைகள் சில இந்நாடகத்தில் தென்பட்டாலும், முதல் முறை மன்னிப்பு என்று விட்டுவிட்டு பங்குபற்றியவர்களை உற்சாகமூட்ட வேண்டிய கடமையும் ஒன்று உள்ளது.**

**மேலும் இந்நாடகத்தில் நாடகத்துறையை 'தொழிலாகக் கொண்டிராத அரச உயர்அதிகாரிகள் பலர் கலந்து நடித்தது வரவேற்புக்குரியது. இன்னும் இந் நாடகத்தைப் பார்ப்பதற்காக இரசிகர் கூட்டத்தோடு யாழ்.மாவட்டத்தில் உள்ள முதுபெரும் கலைஞர்கள் வந்ததும் சிறப்பம்சமாகும்.**

**கூறப்பட்ட குறைகளை நீக்கிக் கொண்டால் தரமான நாடக வரிசையில் 'பாஞ்சாலி சபதமும்' சேர்ந்துகொள்ளும் என்பதில் சந்தேகமில்லை.**

**- ஆடலரசன்.**

## காரைநகர்ப் பகுதியில்

# சட்டவிரோத மது விற்பனை; அதிகாரிகள் திடீர் சோதனை

காரைநகர்,ஓக.26

காரைநகர்ப் பகுதியில் மதுவரித் திணைக்கள அதிகாரிகளினால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மதுபானம் விற்பனை செய்யப்படும் இடங்கள் திடீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இத்திடீர் பரிசோதனையின் போது காரைநகர் வேம்படிப் பகுதியில் பலசரக்குக் கடை ஒன்றில் சட்டவிரோதமான முறையில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த பல போத்தல் மதுபானம் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை காரைநகரின் பல பகுதிகளில் சட்டவிரோதமான முறையில் வீடுகளில் வைத்து விற்பனை செய்யப்பட்டு வந்த பெருந்தொகையான போத்தல் கள்ளும் கைப்பற்றப்பட்டுள்ளது.

காரைநகர் பகுதியில் சட்டவிரோதமான முறையில் பலசரக்குக் கடைகள் மற்றும் வீடுகளில் வைத்து மது பானங்கள் விற்பனை செய்யப்பட்டு வருவதால் பாடசாலை மாணவர்களும் பெண்களும் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக புகார்கள் தெரிவிக்கப்பட்டதை அடுத்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (ஐ-73)

# சண்டிலிப்பாயில் திருட்டு

சண்டிலிப்பாய்,ஓக.26

சண்டிலிப்பாய் - தொட்டிலடி பிரதான வீதியிலுள்ள வீடு ஒன்றில் நள்ளிரவு வேளை முகட்டு ஓட்டைப் பிரித்து உள்ளிறங்கிய திருடர்கள் ரொக்கப் பணம், தங்கநகைகள், உடுபுடவைகள் ஆகியவற்றையும், இரு சைக்கிள்களையும அபகரித்துச் சென்றுள்ளனர்.

வீட்டிலுள்ளோர் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்து போது இத்திருட்டுச் சம்பவம் நடைபெற்றது.

'சூட்கேஸ்' ஒன்றில் வைக்கப்பட்ட நகைகளையும், ரொக்கப்பணத்தையும் எடுத்துக்கொண்டு வங்கிப் புத்தகங்களை திருடர்கள் வீதியில் வீசி விட்டுச் சென்றுள்ளனர்.

இத்திருட்டுக் குறித்து மானிப்பாய் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (க-135)

### சந்நிதியில் தெய்வீக நிகழ்ச்சிகள்

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் கோயிலில் நடைபெற்று வரும் வருடாந்த மஹோற்சவத்தை ஒட்டி சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை தினமும் நடத்திவரும் தெய்வீகக் கலை நிகழ்ச்சித் தொடரில் எட்டாம் உற்சவ தினமான இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.30மணியளவில் 'சிவபுண்ணியங்கள்' என்ற தலைப்பில் ஆன்மீக விரிவுரையாளர் பிரம்மஸ்ரீ காரை கு.சிவராஜசர்மா சொற்பொழிவாற்றுவார். ஒன்பதாம் உற்சவமான நாளை திங்கட்கிழமை காலை 10.30மணியளவில் 'சிந்தனைச் செல்வம்' எனும் தலைப்பில் செஞ்சொற்செல்வன் இரா. செல்வவடிவேல் சொற்பொழிவாற்றுவார்.

இத் தெய்வீகக் கலைநிகழ்வுகள சந்நிதி கோயில் சுற்றாடலில் உள்ள சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்றுவருகின்றன. (ஐ-173)

### மலசலகூடம் அமைப்பு

பஸ் பிரயாணிகளின் நலன் கருதி வல்வெட்டித்துறை சந்தியில் உள்ள பஸ் தரிப்பிடத்துக்கு அருகில் ஒரு லட்சம் ரூபா செலவில் ஆண், பெண், இருபாலருக்குமான மலசல கூடங்கள் அமைககப்பட்டு வருகின்றன. இந்த மாத இறுதியில் இந்த மலசலகூடங்கள், பயணிகளின் பாவனைக்குத் திறந்து வைக்கப்படும் என்று வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் எம்கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.(ஐ-109)

# பருத்தித்துறை நகர மக்களுக்கு தண்ணீர் வழங்கத் தொட்டிகள்

வடமராட்சி,ஓக.26

பருத்தித்துறை நகர கரையோரப் பகுதி மக்களுக்கு குடி தண்ணீர் வசதியை ஏற்படுத்து முகமாக இப்பகுதியில் பருத்தித்துறை நகர சபையால் குடிதண்ணீர்த் தொட்டிகள் கட்டப்பட்டு வருகின்றன.

கொட்டடி, சுப்பர்மடம், கோரியடி, முனை ஆகிய இடங்களிலேயே இத் தொட்டிகள் கட்டப்படுகின்றன. பவுசர் மூலம் குடிதண்ணீர் தொட்டிகளில் நிரப்பப்பட்டு எந்த நேரமும் குடி தண்ணீரை கரையோரப்பகுதி மக்கள பெறும் வசதிகள் விரைவில் கிட்டும் என பருத்தித்துறை நகரசபைச் செயலாளர் தெரிவித்தார். (173)

### இலவசமாக கண்ணாடி விநியோகம்

வடமராட்சி,ஓக.26

வடமராட்சி லயன்ஸ் கழகத்தினால இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் கரவெட்டி சின்னத தம்பி ஞாபகார்த்த மத்திய மருந்தகத்தில் வைத்து சுமார் 200 பேருக்கு இலவசமாகக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

கரவெட்டி கிழக்கு நாமகள் சனசமூக நிலையம், கரவெட்டி சின்னத் தம்பி ஞாபகார்த்த மத்திய மருந்தகம், நெல்லியடி மெதடிஸ்த மிசன் பாடசாலை ஆகியவற்றில் வைத்து கண் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு கண்ணாடி வழங்க சிபார்சு செய்யப்பட்டவர்களுக்கே இலவச கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன. (ஐ-173)

### கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம் - கந்தர்மடம் ஆத்திசூடி வீதி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா மாகா கும்பாபி ஷேகம் எதிர்வரும் 30ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேக ஆரம்பக் கிரியைகள் நாளை திங்கட்கிழமை விநாயக வழிபாட்டுடன் ஆரம்பமாகின்றன. 29 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிமுதல் மாலை 4மணி வரை பக்தர்கள் எண்ணைக் காப்பு சாத்தும் நிகழ்வும் இடம்பெறும். (ஐ-73)

### சமுர்த்தி வங்கி மூலம் நிதி உதவி

யாழ்.மாவட்டத்தில் சிறுதொழில் ஊக்குவிப்புக் கடன்கள் சமுர்த்தி வங்கிகள் மூலம் விரைவில் வழங்கப்படவுள்ளன. இடம்பெயர்ந்து வாழும் மக்களும் தொழில் முயற்சியொன்றினை ஆரம்பிப்பதற்கு சமுர்த்தி வங்கிகள் மூலம கடன்களைப் பெற்றுக்கொள்ளமுடியும். (ஐ-182)

சுகாதாரப் பிரிவுகளில்

# சிறந்த உணவகம், பேக்கறி தெரிவு செய்யும் பணி ஆரம்பம்

சண்டிலிப்பாய், ஓக. 26

யாழ். மாவட்டத்தில் சுகாதார வைத்திய அதிகாரி (M.O.H) பிரிவு ரீதியாகச் சிறந்த உணவகம், சிறந்த குளிர்பான நிலையம், சிறந்த வெதுப்பகம் (பேக்கறி), சிறந்த வியாபார நிலையம் ஆகியனவற்றைத் தெரிவு செய்யும் பணி தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

சிறந்த பொதுச் சுகாதார பரிசோதகரைத் தெரிவு செய்யும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் சிறந்த பொது சுகாதாரப் பரிசோதகராகத் தெரிவு செய்யப்படுபவர் மாவட்ட ரீதியிலும், மாகாண ரீதியிலும் நடைபெறும் போட்டிகளிலும் தெரிவு செய்யப்பட்டால் வெளிநாடு ஒன்றில் சுற்றுலா செல்லும் வாய்ப்பு அவருக்கு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சுகாதார அமைச்சு விடுத்திருந்த சுற்றறிக்கையின்படி மேற்படி தெரிவுகள் இடம்பெற்று வருகின்றன என்றும் —

இம்மாதம் 31 ஆம் திகதிக்கும் இத்தெரிவுகள் பூர்த்தியடையும் என்றும் —

யாழ். சுகாதாரத் திணைக்கள் வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-135)

## கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

மானிப்பாய் பட்டின பிரதேசத்தில் நாளை திங்கட்கிழமை கட்டாக்காலிநாய்கள் பிடித்து அழிக்கப்படவுள்ளன.

வலி. தென்மேற்கு பிரதேச சபையின் மானிப்பாய் பட்டின உப அலுவலகத்தின் அனுசரணையுடன் இந்தப் பணி மேற்கொள்ளப்படும். அன்றைய தினம் தமது வீட்டு வளர்ப்பு நாய்களைக் கட்டி வைத்திருக்குமாறும்—

கட்டாக்காலிகளைப் பிடிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும்—

மானிப்பாய் பொதுச் சுகாதார பரிசோதகர் கே. வருணநாதன் அறிவித்துள்ளார். (ஐ-135)

# தண்ணீர் விநியோகத்துக்கு 10 பவுசர்கள் கிடைக்கும்

வடமராட்சி கிழக்கு, ஓக. 26

யாழ். மாவட்டத்தில் குடிதண்ணீர் விநியோகத்தை மேலும் விஸ்தரிப்பதற்காக 10 பவுசர்கள் வந்து சேரவுள்ளன.

இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின்போது வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா இதனைத் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்கள் வாழும் முகாம்களுக்குத் தற்போது சில உள்ளூராட்சி சபைகள் அரச சார்பற்ற நிறுவனங்களின் அனுசரணையுடன் குடி தண்ணீர் விநியோகத்தை பவுசர்கள் மூலம் மேற்கொண்டு வருகின்றன.

விரைவில் தருவிக்கப்படவிருக்கின்ற 10 பவுசர்கள் வந்து சேர்ந்ததும் குடி தண்ணீர் விநியோகம் மேலும் விஸ்தரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ-182)

## 'வோட்டர் ஜெட்' மோதியதில் மீனவர் காயம்

தென்மராட்சி, ஓக. 26

வல்வெட்டித்துறை ஆதி கோவிலடி கடற்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த கட்டுமரத்தின் மீது கடற்படையினரின் 'வோட்டர் ஜெட்' விசைப் படகு மோதியதில் படகிலிருந்தவர் காயமடைந்தார். இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

சம்பவத்தில் காயமடைந்த இதே இடத்தைச் சேர்ந்த எஸ். செல்லத்துரை (வயது 40) என்பவர் வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (ம-117-109)

## கூட்டணி அலுவலகத்தில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக. 26

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். அலுவலகத்தில் இன்று காலை 10 மணிக்கு நடைபெறவுள்ள முக்கிய கலந்துரையாடலில் தற்போதைய அரசியல் நிலைமையில் கூட்டணியின் நிலைப்பாடு குறித்து விளக்கமளிக்கப்படவிருப்பதாக கூட்டணி அலுவலகம் அறிவித்துள்ளது.

தமிழர் விடுதலைக்கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிரேஷ்ட துணைத் தலைவர் வீ. ஆனந்தசங்கரி, மாவை சேனாதிராஜா, க. சிவமகாராஜா மற்றும் யாழ். மாநகர மேயர் என். ரவிராஜ் ஆகியோர் இன்றைய கலந்துரையாடலில் கலந்து கொண்டு சமகால அரசியல் நிலைபரம் குறித்து கட்சி உறுப்பினர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் விளக்கமளிக்கவுள்ளனர். (ஐ)

## நகரசபைக் கட்டடத் திறப்பு விழா

நெல்லியடி, ஓக 26

சுமார் 30 லட்சம் ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட்ட வல்வெட்டித்துறை நகரசபை அலுவலகக் கட்டட திறப்புவிழா எதிர்வரும் 30 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு இடம்பெறும்.

யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் கட்டடத்தைத் திறந்து வைப்பார்.

வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் எம். கே. சிவாஜிலிங்கம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த சமய குரவர்கள் ஆசியுரை வழங்குவார்கள்.

பிரதம விருந்தினர்களாக யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி. வி. கிருஷ்ணசாமி, பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி கட்டடத் திணைக்கள பிரதம பொறியியலாளர் எம். ஸ்ரீகாந்தா ஆகியோரும் —

சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம். மகேந்திரன், யாழ். கட்டடத் திணைக்கள நிறைவேற்றுப் பொறியியலாளர் எஸ். சாந்தகுமார், வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி கே. மயிலேறும்பெருமாள் உட்பட இன்னும் பலரும் கலந்துகொள்வர்.

வடமராட்சிப் பகுதியில் கடந்த 1989 ஆம் வருடம் இடம்பெற்ற குண்டு வீச்சின் போது வல்வெட்டித்துறை சந்தியில் அமைந்திருந்த மேல்மாடிக்கட்டடமான நகரசபை அலுவலகம் முற்றாக தரைமட்டமாகியிருந்தது குறிப்பிடத்தக்கது. (ம-109)

## விளையாட்டு நிகழ்வு

வலி. வடக்கு, ஓக. 26

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நவாலி நாமகள் விளையாட்டுக் கழகம் நவாலி அட்டகிரி விளையாட்டு மைதானத்தில் நடத்திவரும் 7 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

★ அளவெட்டி கலைவாணி வி. க. அணி எதிர் ஊரெழு பாரதி வி. க. அணி.

★ அராலி எ. எல். வி. க. அணி எதிர் சுன்னாகம் காந்தி நியூ ஸ்ரார் வி. க. அணி. (ம-86)

★ ★ ★

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சிச் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு வலி. தெற்கு பிரதேச சபை மருதனார் மடம் திறந்தவெளி அரங்கு மைதானத்தில் நடைபெறும்.

மயிலிட்டி பாடும் மீன் வி. க. அணியை எதிர்த்து பண்டத்தரிப்பு சாந்த விநாயகர் வி. க. அணி மோதும். (ம-86)

## மாட்டு வண்டிச் சவாரி

யாழ்ப்பாணம், ஓக. 26

பன்னாலை அண்ணமார் ஆலய வளர்ச்சி நிதிக்காக நடத்தப்படும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒருமணிக்கு நீர்வேலி சவாரித் திடலில் நடைபெறவுள்ளது. (ம-4-15)

## தொழில் வழிகாட்டி கைநூல்

வலி. வடக்கு ஓக. 26

ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் நன்மை கருதி யாழ். நகர்மைய றோட்டறக்ட் கழகத்தினர் தொழில் வழிகாட்டி கைநூல் ஒன்றை வெளியிடவுள்ளனர்.

இந்த நூல் அடுத்த மாத இரண்டாம் வாரத்தில் வெளியிடப்படவுள்ளது. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான பல்வேறு வகையான பயன்பாடுகளையும் இந்த நூல் கொண்டுள்ளது. (ம-86)

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

கோப்பாய், ஓக. 26

வலி. கிழக்குப் பிரதேச செயலக பிரிவின் மாதாந்த பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும் விவசாய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும் நாளை திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக பிரதேச செயலர் க. கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ஐ-72)

## சனசமூக நிலையங்களுக்கு நன்கொடை.

சண்டிலிப்பாய், ஓக. 26

வலிகாமம் மேற்குப் பிரதேச சபையின் சுழிபுரத்தில் உள்ள தலைமைச் செயலகம் இப்பிரிவிலுள்ள சனசமூக நிலையங்களுக்கு இவ்வருடத்திற்கான (2001) உதவி நன்கொடைப் பணக் கொடுப்பனவை விரைவில் வழங்கவுள்ளது.

இதற்கான நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-155)

# இரட்டைத் தன்மை அரசியல் ஈ.பி.டி.பிக்கு உடன்பாடில்லை

## அமைச்சர் டக்ளஸ் கூறுகின்றார்

யாழ்ப்பாணம், ஓக. 26

இரட்டைத் தன்மை அரசியலில் ஈ. பி. டி. பிக்கு எப்போதும் உடன்பாடில்லை என்று அக்கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா கூறுகின்றார்.

சாவகச்சேரி மற்றும் தென்மராட்சிப் பிரதேசங்களைச் சேர்ந்த — சுமார் ஐநூறுக்கும் அதிகமான — மக்கள் மத்தியில் உரையாற்றுகையில் அமைச்சர் இப்படிக் கூறியதாக அக்கட்சியின் செய்திக் குறிப்பு ஒன்று தெரிவித்தது.

யாழ். ஸ்ரீதர் தியேட்டரில் உள்ள ஈ. பி. டி. பி. அலுவலகத்தில் நடைபெற்ற அந்தக் கூட்டத்தில் அமைச்சர் ஆற்றிய உரையின் விவரம் அந்தச் செய்திக் குறிப்பில் இடம்பெற்றிருந்தது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சுமார் இருபது வருடங்களுக்கு முன்பாக நீங்கள் இந்தக் கட்டடத்திற்கு வரும்போது பொழுதுபோக்கு எண்ணத்துடன் அல்லது மகிழ்ச்சியைக் கொண்டாடும் நோக்கத்துடன் வந்திருக்கக் கூடும். ஆனால் இன்று ஒருவித ஏக்கத்துடனும், ஒருவித எதிர்பார்ப்புடனும், ஒரு தேவையுடனும் தான் வந்திருக்கிறீர்கள். இந்த நிலை மாறவேண்டும்.

உங்களைத் தேடிவரக்கூடிய சூழல் தற்போது எனக்கு இல்லை. அது ஏன் என்பது உங்களுக்கு நன்கு தெரியும். நான் தற்போது ஒரு விதத்தில் பங்கருக்குள் வாழ்ந்துகொண்டிருந்தாலும் பொது மக்களாகிய உங்களைச் சந்திக்காமல் இருக்கவில்லை; உங்களின் தேவைகளையும் பிரச்சினைகளையும் கண்டுகொள்ளாமல் இருக்கவில்லை; உங்களின் குரலைச் செவிமடுக்காமல் இருக்கவில்லை.

தற்போது தொடர்ந்து கொண்டிருக்கும் போர் நடவடிக்கைகளை — தாக்குதல் சம்பவங்களை — பொது மக்களாகிய நீங்கள் விரும்பவில்லை. உங்களில் பெரும்பாலானவர்களுக்கு அமைதியும், நிம்மதியுமான வாழ்க்கையே தேவைப்படுகிறது.

மாணவர்கள் சத்தமிட்டுக் கொண்டிருக்கும் ஒரு வகுப்பறையில் நுழையும் ஆசிரியர் மெல்லிய குரலில் 'அமைதி' எனக் கூறினால் அமைதி வந்துவிடாது, மாறாக, உரத்த தொனியில் மேசையைத் தட்டி பலத்த சத்தத்துடன் 'அமைதி' எனக்கூறும்போது நிசப்தம் நிலவும். அதேபோல பலமான சத்தத்துடன் வரும் யுத்தத்தை நிறுத்த வேண்டுமானால் பொதுமக்களாகிய நீங்கள் பலத்த சத்தத்தில் அமைதி என முழங்கவேண்டும். யுத்தம் வேண்டாம் எனக் குரல் எழுப்பவேண்டும்.

நாங்கள் எப்போதும் உங்கள் வீட்டு பிள்ளைகளாக— மீனவ நண்பர்களாகவே வாழ விரும்புகின்றோம்.

எங்களிடம் இரட்டைத் தன்மை இல்லை. ஜனாதிபதியுடன் பேசுவதையே உங்களிடமும் உங்களிடம் பேசுவதையே ஜனாதிபதியிடமும் பேசுகின்றேன். ஆனால் இங்குசிலர் இருக்கின்றனர் — உங்களுக்கு முன்னால் வந்து வீரம் பேசுவார்கள்; அரசாங்க நிர்வாகத்தைக் கண்டனம் செய்வார்கள்; மாற்றுக் கட்சிகளை எள்ளி நகையாடுவார்கள். எனினும் ஜனாதிபதியுடன் பேசும் போது "அது அரசியல், எங்களுக்கும் அச்சம் இருக்கிறது. மிரட்டல் தொடர்கிறது" என்றெல்லாம் கூறிக் கூழைக்கும்பிடு போட்டு நிற்பார்கள். தங்களது சொந்த தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வர். இவ்விதமான அரசியலுடன் எங்களுக்கு உடன்பாடில்லை.

மத்தியில் கூட்டாட்சி. மாநிலத்தில் சுயாட்சி, எக்காலத்திலும் பிரிக்க முடியாத வடக்கு-கிழக்கு ஓர் அலகு, அதற்கு விசேட அதிகாரம். ஐக்கிய இலங்கைக்குள் சமாதான சகவாழ்வைக் கட்டியெழுப்பும் அடிப்படை,— இதுவே— இதுதான்—எங்கள் இலக்கு, — என்றார். ]உ!

## சமய சந்நிதிகளில்

அராலி கரைப்பிட்டி கணபதீஸ்வரன் திருக்கோயில் மணவாளக் கோலவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 7 மணிமுதல் இடம்பெறும் 1008 (ஆயிரத்தெட்டு சங்காபிஷேகத்தைத் தொடர்ந்து மாலை 4 மணிக்கு தண்டிஉற்சவம் இடம்பெறும். (ஐ-15)

★ ★ ★

இணுவில் கிழக்கு திருவருள்மிகு அண்ணமார் பாமருக்மணி சமேதவேணுகோபாலர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவுள்ளது.

உற்சவ தினங்களில் தினமும் மாலை 6 மணிக்கு கீதோபதேசவித்தகர் என். தவராஜா 'தசாவதாரம்' என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றுவார். (ஐ-4)

## விளக்கமறியல் நீடிப்பு

தென்மராட்சி, ஓக. 26

வல்வெட்டித்துறைப் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற வைத்திலிங்கம் புஷ்பாதேவி என்னும் பெண்ணின் மரணம் தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபரான சின்னையா ரகு என்பவர் கடந்த வியாழன்று பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

சந்தேக நபரை எதிர்வரும் ஐந்தாம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (க-117)

# வடமராட்சிக் கடற்பகுதியில் மீனவரிடமிருந்து மீன்கள் பறிப்பு

தென்மராட்சி, ஓக 26

கடலில் மீன்பிடிக்கச் சென்ற இன்பருட்டியைச் சேர்ந்த மீனவரிடம் இருந்து, கடற்படையினர் அனைத்து மீன்களையும் பறிமுதல் செய்ததாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

கடலில் மீன்களைப் பறிகொடுத்த நாகர்கோயிலைச் சேர்ந்த எஸ். செல்லக்கண்ணன் என்பவர் இன்பருட்டி கடற்றொழிலாளர் சங்கத்தில் இது குறித்து முறைப்பாடு செய்துள்ளார்.

விசைப்படகில் வந்த கடற்படையினர் இந்த மீனவர்களின் உடைகளை களையச் செய்து விட்டு படையினரால் அனுமதிக்கப்பட்ட நேரம் வரை தடுத்து வைத்திருந்து விடுவித்ததாகவும்—

அதன் பின்னர் அங்கிருந்து கரைக்கு வரத்தாமதமாகியதால் கரையில் படையினரின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதாகவும்—முறையிட்டுள்ளார். (ம-117)

வடபகுதியில் இருந்து கொழும்பு செல்லும் பயணிகளுக்கு

இதோ ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி!

பம்பலப்பிட்டியில் மிகையான சூழலில் மிகைப்படுத்தப்பட்ட அழகு மிளிர் தங்குமிட விடுதி

**ராஜ்கோ இன்**

கொழும்பு மாநகரில் பம்பலப்பிட்டி சென்.பீற்றேஸ் பாடசாலைக்கு அருகாக அமைந்துள்ள

**RAJCO INN விடுதியின் சிறப்பம்சங்கள்**

1. வெளிநாட்டு, உள்நாட்டு தொலைத்தொடர்பு வசதி.
2. வெளிநாட்டு பிரயாண விமான ரிக்கற் வசதி.
3. வாகன போக்குவரத்து வசதி.
4. இந்த விடுதியானது தங்குமிட வசதியுள்ள நிலப்பரப்பு பரந்ததும் விசாலமானதுமான நன்கு காற்றோட்டமுள்ள பாதுகாப்பான இடத்தில் அமைந்துள்ளது.

*மேலதிக விவரங்களுக்கு:-*

திரு.கே.பாலேந்திரன்
ராஜ்கோ இன்
27, ப்ரீட் பிளேஸ், பம்பலப்பிட்டி,
கொழும்பு - 4
தொலைபேசி 554065, 554066, 554067

**RAJCO INN**
*PAREED PLACE,*
*BAMPALAPITIYA,*
*COLOMBO - 4.*

*தகவல்:* K.விமலராஜ்
*'நவலோகம்'*
*நெல்லியடி, கரவெட்டி.*

(C/18004)


# நோயாளர் கப்பல் சேவை செவ்வாயன்று

யாழ்ப்பாணம்,ஓக.26

யாழ்ப்பாணத்துக்கும் திருகோணமலைக்கும் இடையில் வாரம் தோறும் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு நடத்தும் நோயாளர் கப்பல் சேவை அடுத்த வாரம் மாத்திரம் 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறும் என்றும் - தொடர்ந்து வழமை போல் வியாழககிழமைகளில் கப்பல் சேவை இடம்பெறும் என்றும் -

யாழ்.ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ-7)

# சந்தை திறப்பு விழா

வலி.தென்மேற்கு,ஓக.26

பண்டத்தரிப்பு - மாதகலில் நாலரை லட்சம் ரூபா செலவில் புதிதாகக் கட்டப்பட்ட சந்தை திறந்து வைக்கப்படவுள்ளது.

அடுத்த மாதம் 3ஆம் திகதி மேற்படி சந்தையின் திறப்பு விழா மானிப்பாய் பிரதேச சபைத்தலைவர் வெ.அ. ஜோன்சன் தலைமையில் இடம் பெறும்.

வலி.தென்மேற்குப் பிரதேச செயலாளர் நா.வேதநாயகன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினராக யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி கலந்து கொள்வார்.

இதேவேளை -

மேற்படி சந்தைக்கான காணியை மலேசியாவில் வாழும் ஏ.கே.எட்வேர்ட் என்பவர் இலவசமாக வழங்கியிருந்தார். (ஐ-185)

# தகுதிகாண் பரீட்சை

வலி.தென்மேற்கு,ஓக.26

தொழில்நுட்பவியலாளர் பயிலுநர்களை நிரந்தர சேவைக்குள் உள்வாங்குவதற்கு தகுதிகாண் பரீட்சை விரைவில் நடைபெறவுள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் திருமதி க.சிவசிதம்பரம் கோரியுள்ளார்.

மேற்படி தகுதிகாண் பரீட்சை மூலம் தொழில்நுட்ப சேவை (சிவில்) தரம் II வகுப்பு 'ஆ' பிரிவிற்கு வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 56 பேர் தோற்றவுள்ளனர். (ஐ-185)

# பாடசாலைக்கு நூல்கள் அன்பளிப்பு

வலி.தென்மேற்கு,ஓக.26

மானிப்பாய் விவேகானந்தா வித்தியாசாலைக்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான நூல்கள் வழங்கப்பட்டுள்ளன.


பாடசாலை அதிபர் த.தர்மசோதியிடம் நூல்களை மானிப்பாய் பிரதேச சபைத் தலைவர் வெ.அ. ஜோன்சன் வழங்கினார். (ஐ-185)

தமிழ்த்தாயின் தவப்புதல்வன்
தமிழினத்தின் தானைத் தலைவன்

## அமரர் அ.அமிர்தலிங்கம்

அவர்களின்

## 75ஆவது பிறந்தநாள்



**தமிழ் இனத்தின் விடுதலைக்காகத் தன்னைத் தந்த தலைவர் அமிர்தலிங்கம் அவர்களின் நினைவு நிகழ்ச்சிகள் இன்று (26.08.2001) ஞாயிறு காலை 9.00 மணியளவில் 57/48, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் த.வி.கூட்டணிப் பணிமனையில் இடம்பெறும்.**

(C/18007) அமரர் அமிர்தலிங்கம் நற்பணி மன்றம்.

# கண்ணீர் அஞ்சலி

## திருமதி விமலலோஜினி தர்மகுலசிங்கம்

யா/இராமநாதன் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் நீண்டகால நிர்வாக சபை உறுப்பினரும் மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆசிரியையுமான திருமதி விமலலோஜினி தர்மகுலசிங்கம் அவர்களின் மறைவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

பழையமாணவர் சங்கம்,
இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்.

(91608)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி வசந்தி எட்வேர்ட் றெஜினோல்ட்
அவர்களின் அன்புத் தாயாராகிய

## திருமதி மகேஸ்வரி பொன்னுத்துரை

அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.*
யா/ஊர்காவற்றுறை புனித மரியாள் மகளிர் வித்தியாலயம்.

(91595)

# மரண அறிவித்தல்கள்

## முருகேசு கனகசபை

கருங்காலி, காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட முருகேசு கனகசபை நேற்று (25.08.2001) சனிக்கிழமை காலமாகிவிட்டார். அன்னார் அமரர் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், செல்வராணி, செல்வகுமார்,ஸ்ரீஸ்கந்தராசா, செல்வமணி, அமரர் நாகராசா ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், முத்துலிங்கம், சாந்தமலர், மைதிலி, சுப்பிரமணியம் (லெபனான்), ஆகியோரின் அன்பு மாமனாரும், இராசலட்சுமி, நடராசா (வவுனியா), சுப்பிரமணியம் (வவுனியா), பொன்னம்பலம், சிவபாக்கியம், பரமேஸ்வரி (ஜேர்மன்), ஆகியோரின், அன்புச் சகோதரனும் கணேசமூர்த்தி, சரோசினிதேவி (குணம் - நீர்கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.08.2001) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீலங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
ஸ்ரீஸ்கந்தராசா(சிறி)
(மகன்)

*கருங்காலி, காரைநகர்.* (91598)

## பிரம்மஸ்ரீ பஞ்சாட்சரக்குருக்கள் அருணாசலஐயர்

புலோலி தெற்கைப் பிறப்பிடமாகவும் திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட பிரம்ம ஸ்ரீ பஞ்சாட்சரக்குருக்கள் அருணாசலஐயர் நேற்று (25.08.2001) சனிக்கிழமை காலை காலமானார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுககொள்ளவும்.

*புலோலி தெற்கு, புலோலி.*

*Mrs.R.ARUNASALAIYER,*
*No.08, SLPA QRTS,*
*RIFLE GREEN,*
*TRINCOMALEE. T.P:- 026 - 22062*

தகவல்
அ.சிவராசா
(மகன்),

(91599)


# கொழும்பில் தங்குமிட வசதி

சகல வசதிகளுடன், குறைந்த செலவில், நிறைந்த சேவை புரியும், சுத்தமான, பாதுகாப்பான, அமைதியான சூழலில் **No: 89, HINNY APPUHAMY MAWATHA, CO.-13** இல் அமைந்துள்ளது

**VANI INN லொட்ஜ்.**

தங்குமிடம் தேவைப்படுவோர் மேற்படி விலாசத்துக்குப் பதிவு செய்து வரலாம். மேலதிக விவரமறிய: **T.P: 01-433182, 472582**

(91605) - முகாமையாளர்.

# அதிவேக விற்பனை

தமிழின் முதலாவது தேர்க்கலை விமர்சன நூல்

**செல்வச் சந்நிதி தேர்த்திறன்**

சர்வதேச தரத்தில் அதியுயர் பதிப்பு

**கிடைக்குமிடம்:**
சந்நிதி ஆலய நிர்வாக அலுவலகம்
நூலின் விலை: 300/=
ஆலய வாயிலில்:-250/=

விளம்பர அன்பளிப்பு:
நியூ லலிதா ஜுவலர்ஸ்

170,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
165,செட்டியார் தெரு. கொழும்பு - 11 (91596)

# இன்று அன்னதானம்

*சீராநற்றெலிநகர் சேரேர் உழுகுடைப்பதிவாள்*
*வாரார் துர்க்காதேவி பண்ணவிக்கு தாரார் பணி*
*செய் தங்கம்மா அன்னைவாழி!*

தெல்லை நகர் இந்து இளைஞர் சங்கம், மாதர் சங்கம், மகளிர் இல்லம் ஒன்றிணைந்து நடத்தும் அன்னதானப் பணி நீடூழி வாழிய வாழியவே!

துர்க்கை அடியவர்களை அன்புடன் அழைக்கும்

**புதிய நதியா நகைமாடம்**
*103, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*
**T.P.021- 3261** (91600)

# "அன்னம்ஸ்"

எமது வாடிக்கையாளர் கவனத்துக்கு!

**ALFA GOLD LT 730 PLUS**
**EUROSTAR LT 950 GOLD**
**EUROSTAR DIGITAL SATELLITE**
**LNB - EUROSTAR**
**DISC ANTANA**

ஆகியவை நேரடியாகக் கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்டுள்ளன.
கொள்வனவு செய்வோருக்கு அன்ரானா பொருத்திக்கொடுககப்படும்.
இல.114, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.

(91612)


# கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தின் ஆசிரியர் திரு.தர்மகுலசிங்கம்
அவர்களின் அன்புத் துணைவியார்

## திருமதி விமலலோஜினி தர்மகுலசிங்கம்

(ஆசிரியை, மானிப்பாய் மகளிர் கல்லூரி)

அவர்களது மறைவினால் துயருறும் அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

A.T.C. Institute,
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

(91604)


# இலவசம்

உலகின் எப்பாகத்துக்கும் உறவினர்களின் பிறந்தநாள், திருமண வாழ்த்துக்களை E.MAIL மூலம் தெரிவிக்க

**SRI MURUGAN**
***303, K.K.S. ROAD, JAFFNA.***
E.MAIL del - Smukr @eureka. lk

(C/18009)

# யாழ்ப்பாணக் கல்வி நிலையம்

**The Jaffna Education Centre**

சாந்தி சினிமா முன்பாக
*(மேல்மாடியில்)*

**Spoken English with Grammar**
சிங்களம்
**Short hand Typing**
ஆகிய பாடங்கள் இரு மொழிகள் மூலமும் நடைபெறுகின்றன.

புதிய பிரிவு ஆரம்பம்:
28.08.2001

(91579) -நிர்வாகி.

# போதைப்பொருள், கசிப்பு விற்பனையில் சிறுவர்களே பயன்படுத்தப்படுகின்றனர்

## தலைமைத்துவப் பாசறையில் உரை

யாழ்ப்பாணம்,ஓக.26

குடாநாட்டில் போதைப்பொருள் மற்றும் கசிப்பு, மதுபானம் போன்ற வற்றை விற்பனை செய்வதற்கும் பாலியல் தொழிலில் ஈடுபடுத்துவதற்கும் சிறுவர்களே பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றனர்.

- இவ்வாறு கவலை தெரிவித்தார் கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சிறினிவாசன். மனித முன்னேற்ற நடுநிலையத்தின் உயிர்ப்பூட்டல் செயல் திட்டத்தின் கீழ் வடமராட்சி இளைஞர், யுவதிகளுக்கான தலைமைத்துவப் பாசறை அண்மையில் பருத்தித்துறை சென்.தோமஸ் பெண்கள் பாடசாலையில் நடைபெற்றது.

இந்தப் பாசறையில் கலந்து கொண்ட கரவெட்டி பிரதேச செயலர் 'சமூக அபிவிருத்தியில் இளையோர் பங்கு' என்ற கருப்பொருளில் உரையாற்றினார்.

தனது உரையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று குடாநாட்டின் எதிர்காலத்தையே கேள்விக்குரியதாக்கியுள்ள சமூகச் சீர்கேட்டு நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்த இளைஞர், யுவதிகள் முன்வரவேண்டும். இத்தகைய சமூகச் சீர்கேட்டு நடவடிக்கைகளுக்கு எமது சிறுவர்களே பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றனர். அல்லது அவர்களாக ஈடுபடுகின்றனர். அவர்களை நன்நெறிப்படுத்தி ஆற்றல் உள்ள மனித சமூகத்தைக் கட்டி எழுப்பி மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்துவது அவசியம்.

எமது நாட்டுக்கு ஆன்மீக வளர்ச்சி, சமூக அபிவிருத்தி, மனிதவள அபிவிருத்தி என்பன தொடர்பான விழிப்புணர்ச்சி இன்று மிக அவசியமாகத் தேவைப்படுகிறது.

இளைய தலைமுறையினர் மத்தியில் ஆன்மீகப் பற்று வளர்க்கப்பட வேண்டும்.

இன்றைய உலகில் பிரச்சினைகள் தோன்றுவதற்கு முக்கிய காரணமாக இருப்பது ஆன்மீகச் சிந்தனை குறைவடைந்து சென்றமையே ஆகும்.

கிராம ரீதியாகத் தோன்றும் வளர்ச்சிகள், சிந்தனைகள் நகர மட்டத்துக்கு விரிவுபடுத்தப்பட வேண்டும். இதன்மூலம் நல்லதோர் உலகம் மலரமுடியும்.

கலை, கலாசார, அபிவிருத்தி, பொருளாதார அபிவிருத்தி போன்றவற்றுக்கு எமது மக்களின் பங்களிப்பு இன்றியமையாததாகும்.

இந்தச் செயற்பாடுகளில் இளையோரின் பங்கு மிக முக்கியம். நாம் உள்நாட்டு மூலப்பொருகளைக் கொண்ட உள்ளூர் உற்பத்தியை ஊக்குவித்து எமது பொருளாதாரத்தை கட்டி எழுப்புவதுடன் புதியதோர் சமூகத்தைப் படைக்க வேண்டும் - என்றார்.

தொடர்ந்து உரையாற்றிய உயிர்ப்பூட்டல் குழு இணைப்பாளர் எஸ். ஜோசப்பாலா கூறியதாவது:-

சமூகத்தை விழிப்புணர்வுடன் வழிகாட்ட நல்ல தலைவர்கள் உருவாக வேண்டும். இதனை ஒரு நாளில் ஏற்படுத்தி விடமுடியாது. முன்னேற முற்படும்போது ஏற்படும் தடைகளை சவால்களாக எதிர்கொள்ளும் மனப்பக்குவம் ஏற்பட வேண்டும்.

இன்றைய தலைமுறையினரை இலட்சிய நோக்குடன் வழிநடத்த வேண்டும். புதிய தலைமுறையினரான உங்கள் செயல்கள் ஒவ்வொன்றும் முன்மாதிரியானவையாகவும் - சமூகத்தை வழிநடத்துபவையாகவும் இருக்க வேண்டும் - என்றார்.(ம-6)

### உதைபந்தாட்ட மத்தியஸ்தர் கூட்டம்

யாழ். மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர்கள் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும். உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளது. (ம)

### இரு இளைஞர்கள் கைது!

மாதகல் மற்றும் ஈச்சமோட்டைப் பகுதிகளைச் சேர்ந்த இரு இளைஞர்கள் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர்களின் உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாதகலைச் சேர்ந்த இரத்தினம் நடராசா (வயது25) என்பவர் கடந்த வியாழனன்று பிற்பகல் 3 மணியளவில் வீட்டில் வைத்தும் -

ஈச்சமோட்டையைச் சேர்ந்த ஜெயபாலசிங்கம் ஜெனால்ஸ்ரன் பெனால்ட (வயது26) என்பவர் நேற்றுமுன்தினம் பகல் 11.30 மணியளவில் மாதகலில் வைத்தும் -

முறையே படையினராலும் பொலீஸாராலும் கைது செய்யப்பட்டதாக இந்த முறைப்பாடுகளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-10)

### நீதிமன்றின் முன் நின்ற சைக்கிள் திருட்டு

யாழ்.நீதிவான் நீதிமன்றின் முன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிள் ஒன்று நேற்றுப் பகல் 11 மணியளவில் திருடப்பட்டுள்ளது.

வழக்கு விசாரணைகளுக்காக நீதிமன்றுக்கு வந்திருந்த ஒருவரின் சைக்கிளே திருடிச் செல்லப்பட்டுள்ளது.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக யாழ்.பொலீஸ் நிலையத்தில் சைக்கிள் உரிமையாளரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-6)

## குடிசைகள் உடனடித் திருத்தம்

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 27 இடம்பெயர்ந்தோர் முகாமகளைச் சேர்ந்த 672 குடிசைகள் உடனடித் திருத்தம் செய்யப்படவுள்ளன.

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சரின் பணிப்புக்கமைய நேற்று முன்தினம் பிரதேச சபை செயலாளர் சி.பசுபதி, சபை தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், ஈ.பி.டி.பியின் நெல்லியடி அமைப்பாளர் ராசீக் ஆகியோர் ஒவ்வொரு முகாமுக்கும் சென்று சேதங்களை மதிப்பீடு செய்தனர். (ம-117)

---

**நூல் வெளியீட்டு விழா**

அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளையின்

பத்திரிகை இயலுக்கு ஓர் அறிமுகம்

நூல் வெளியீடு

இடம் : பாதுகாவலன் பணிமனை
காலம் : இன்று (26-08-2001) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணி.
கருத்துரை : ந.வித்தியாதரன் *(இணை ஆசிரியர் - உதயன்)*

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

C.C. கொனிந்திரன்
செயலாளர்,
பாதுகாவலன் பத்திரிகையாளர் சங்கம்.
(C/18017)

---

ஓம் நமோ நாராயணா

**ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்**

**மஹா கும்பாபிஷேக மலர் வெளியீட்டு விழா**

கடந்த 27.07.2001 ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த மேற்படி மகா கும்பாபிஷேக மலர் வெளியீட்டு விழா, இன்று (26.08.2001) ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு புதிய வசந்த மண்டபத்தில் அறங்காவலர் சபைத் தலைவர் திரு.இ.அன்னலிங்கம் அவர்களின் தலைமையில் நடைபெறும்.

பக்த அடியார்கள் அனைவரையும் இவ்விழாவுக்கு வருகைதந்து, விழாவைச் சிறப்பித்து, மகா கும்பாபிஷேக மலரான இவ்வருட் பிரசாதத்தையும் பெற்று, எம்பெருமான் அருள்பெற்று ஏகுமாறு அன்பாக வேண்டுகின்றோம்.

மலர்க்குழு,
ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்.
*துன்னாலை வடக்கு, புலோலி.*
(C/18016)

---

**கண்ணீர்ப் பூக்கள்**

எமது கல்லூரி ஆசிரியை

**திருமதி விமலலோஜினி தர்மகுலசிங்கம்**

அவர்களின் திடீர் மறைவு எமக்கு அதிர்ச்சியையும் ஆறாத்துயரையும் அளித்துள்ளது. அன்னாரின் மறைவு எண்ணிப் பார்க்கவே முடியாது உள்ளது. அவரது இழப்பால் துயருறும் இவ்வேளையில் அவரது கணவன் மற்றும் குடும்பத்தினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

அதிபர்,
ஆசிரியர்கள், ஊழியர்கள்,
மாணவர்கள்.
*மானிப்பாய் மகளிர் கல்லூரி, மானிப்பாய்.*
(91602)

---

**கண்ணீர் அஞ்சலி**

எமது கல்வி நிறுவன ஆசிரியர் தர்மா
அவர்களின் அன்பு மனைவி

**த.விமலலோஜினி**

காலமானதையிட்டு துயருறும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

BITSMANS கல்வி நிறுவன
இயக்குநர்,ஆசிரியர்கள்,மாணவர்கள்.
(91615)

---

**கண்ணீர் அஞ்சலி**

எமது கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தில்
கூட்டுறவுப் பரிசோதகராகக் கடமையாற்றும்
எங்கள் அன்புச் சகோதரர் திரு.இ.ஜெயமுகானந்தன்
அவர்களின் அருமைச் சகோதரியான

**திருமதி விமலலோஜினி தர்மகுலசிங்கம்**

(ஆசிரியை, மானிப்பாய் மகளிர் கல்லூரி)

அவர்கள் காலமான செய்தி அறிந்து கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம். துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

- சக உத்தியோகத்தர்கள்,
கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்.
*தட்டாதெரு, யாழ்ப்பாணம்.* (91601)

---

**கண்ணீர் அஞ்சலி**

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் (தெல்லிப்பழை)
திரு.இ.தர்மகுலசிங்கம் அவர்களின் அன்பு மனைவி

**த.விமலலோஜினியின்**

இழப்பினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*375, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.* (91618)
து.சிறிகந்தராஜா
குடும்பத்தினர்.

---

**மரண அறிவித்தல்**

**சபாபதி திருநாவுக்கரசு**

(Tower builders உரிமையாளர்)

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் பொற்பதி வீதி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதி திருநாவுக்கரசு (ரவர் கட்டட உரிமையாளர் - Tower builders) நேற்று (25.08.2001) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் மனோன்மணியின் அன்புக் கணவரும் யாதவன் (லண்டன்), யாழினி (மக்கள் வங்கி, காங்கேசன்துறை) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*'ஆயர்பாடி', பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.*

தகவல்:
தி.யாழினி (மகள்)
(மக்கள் வங்கி, காங்கேசன்துறை)
(91616)

---

**AIDSக்கான 'அகுபங்சர்', 'ஹோமியோபதி' சிகிச்சை**

AIDS எனப் பெயரிட்டு அழைக்கப்படுகின்ற நோய் நிலைமை உட்பட அனைத்து நோய்களையும் "அகுபங்சர்", "ஹோமியோபதி" போன்ற "சக்தி சிகிச்சை" (ENERGY TREATMENT) முறை மூலம் முற்றிலும் குணப்படுத்த முடியும்.

சகோதர சகோதரிகளே! குறிப்பிட்ட சில நோய் நிலைமைகளை முற்றிலும் குணப்படுத்த முடியாது என்றும், கட்டுப்பாட்டில்தான் வைத்திருக்கலாம் என்று சொல்வதும் நோய் நிலைமைக்கான மூலகாரணத்தை (Cause) துல்லியமாக அறியமுடியாத இயலாமையில் பிறந்த, வியாபாரத்தைக் குறியாகக் கொண்ட (TO MAKE MONEY), மேலைத்தேய ஆதிக்கவாதிகளின் புரளியேயல்லாமல் வேறில்லை.

நோய் நிலைமையின் அடிப்படைக்காரணத்தைக் குறிவைத்துத் தாக்கும் போது எந்த ஒரு நோய் நிலைமையும் குணமாகித்தான் ஆகவேண்டும். அதுதான் நியதி. இதில் எந்த மாற்றுக்கருத்துக்கும் இடமில்லை.

குறிப்பிட்ட ஒரு நோய் நிலைமையைக் 'கொன்ட்ரோலில்' வைத்திருப்பதற்கு ஒரு காரணம் (Cause), முற்றாகக் குணமாக்குவதற்கு வேறொரு காரணம், ஆக ஒரு நோய் நிலைமைக்கு இரண்டு காரணங்கள் இருக்க முடியாது. நோய் நிலைமைக்கும், அந்நோய் முற்றாகக் குணமாகிய நிலைக்கும் இடைப்பட்ட நிலையில்தான் 'கொன்ட்ரோல்' நிலை இருக்க முடியுமே தவிர முடிவான நிலையாக இருக்கமுடியாது. இது உறுதியானது.

ஆகவே சகோதர சகோதரிகளே! AIDS நோய் நிலைமைக்குக் காரணம் HIV கிருமியிலில்லை.

"நோய் எதிர்ப்பு சக்தி குறைவு" (Lack of Immune Power)

அதாவது "பாதுகாப்புச் சக்தி குறைவு" (Lack of Defence Force) காரணமாக கிருமிகள் வாழக்கூடிய ஏதுவான சூழ்நிலை உருவாக்கப்பட்டதுதான் உண்மையான நிலைமை.

நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகமாக்கும்போது அல்லது உறுதிப்படுத்தும் போது எந்த நோயும் குணமாகியே ஆகவேண்டும். இந்நோய் நிலைமையுள்ளவர்கள் தீண்டத்தகாதவர்கள் அல்லர்.

"AIDS நோயாளி" என்று அடையாள முத்திரை குத்தப்பட்ட நோயாளிகள்

*தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:*

Dr.K.Rahuram,
C/o, Dr.V.Kathiravelu,
Urumpirai East, Urumpirai.
(near Urumpirai Hindu College)

தென் இலங்கையில்...
Dr.A.Shanthakkumar,
"National homeopathic clinic",
72/H, Liberty building,
Dunbar Road,
Hatton.
(91610)

**புதிய வீடியோ CD வெளியீடு**

✦ அர்ஜுன், அபிராமி, வினித் நடித்த

**வேதம்**

மிலேனியம் ஓடியோ வீடியோ சென்ரர்

238, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

T.P. - 3646

உடன் பிரதிகள் பெறலாம். (91611)

**நாகம்ஸ்** சுன்னாகம்

மாதவன், ஜோதிகா, விவேக் நடிக்த

**டும் டும் டும்**

(ரீல்ஸ்)

காட்சிகள்:- 11.00, 2.30 (புதியநேரம்)

(91603)

**ராஜா** யாழ்ப்பாணம்

இன்று மட்டும்
லேடி சுப்பஸ்ரார்
விஜயசாந்தி, சரத்குமார்
நடிப்பில்

**முதலமைச்சர் ஜெயந்தி**

தினசரி :- 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு :- 10.30, 2.00, 5.00(பு.நே.)

நாளை 27/8/2001 முதல்

**உன்னைத்தேடி**

(C/17875)




ஆரோக்கியமான முதுமையை
இலக்காகக் கொண்ட
பத்துக் கட்டுரைகளைத்
தன்னகத்தே தாங்கியுள்ள

முதுமை

நூல் வெளியீடும்
காட்சிக் கோலமும்
கைலாசபதி கலையரங்கில்
இன்று மாலை 3 மணி (புதிய நேரம்)
சாந்திகம் வெளியீடு (C/18018)

பருத்தித்துறை விதவைப் பெண் விவகாரம்:

# மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ்.அரச அதிபருக்கு அழைப்பாணை

வடமராட்சி,ஓக.26

பருத்தித்துறைப் பகுதியைச் சேர்ந்த விதவைப்பெண் ஒருவருக்கு குடும்ப அட்டை வழங்க மறுத்தும், அவரது இறந்த கணவனின் விதவைப் 'பென்சனை' வழங்காது தடுத்தும் மனித உரிமைகளை மீறியதாக தெரிவிக்கப்பட்ட முறையீடு தொடர்பான விசாரணை அடுத்தமாதம் 10 ஆம் திகதி கொழும்பில் உள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுத் தலைமையகத்தில் நடைபெறவுள்ளது.

இம் முறையீடு தொடர்பான விசாரணைக்கு சமுகமளிக்குமாறு பருத்தித்துறை பிரதேச செயலர், யாழ். அரச அதிபர் ஆகியோருக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுத் தலைவர் பாயிஸ் முஸ்தபா அழைப்பாணை அனுப்பியுள்ளார். (ம-173)

எமது புதிய வீடியோ CD
வெளியீடு
அர்ஜுன், வினீத் நடித்த
ஷேவிதம்
(பிரதிகளை உடன்
பெற்றுக் கொள்ளலாம்)
அல்டி எலெக்ரோனிக்ஸ்,
15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (C/18015)

இன்றைய புதிய வீடியோ CD
வெளியீடு
அர்ஜுன், திவ்வியா நடித்த
ஷேவிதம்
பிரதிகள் உடன் பெறலாம்.
விஷ்ணு வீடியோ,
கோண்டாவில். (91617)

ஸ்ரீ செல்வா சினிமா
யாழ்ப்பாணம்
அர்ஜுன், திவ்வியா நடித்த
ஷேவிதம்
தினசரி:10. 30, 2. 30.
CD வெளியீடு (C/18013)

## லயன்ஸ் கழக ஆதரவில் இலவச கணனி வகுப்பு

நெல்லியடி,ஓக.26

வறுமை நிலையில் உள்ள, பெற்றோரை இழந்த, யுத்த சூழ்நிலையால் பாதிக்கப்பட்ட ஜி.சீ.ஈ. சாதாரண தரம் சித்தியடைந்தோருக்கான இலவச கணனிப் பயிற்சி நெறி ஒன்று வடமராட்சி லயன்ஸ் கழகத்தினால் ஆரம்பிக்கப்படவுள்ளது.

பயிற்சி நெறியை மேற்கொள்ள விரும்பும் ஆண்,பெண் இருபாலாரும் லயன் க. கமலேஸ்வரன், சைபர்ஸ் பேஸ், அல்வாய் தெற்கு அல்வாய் என்ற முகவரிக்கு எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(ம-109-173)

எமது புதிய வீடியோ CD
வெளியீடுகள்
★ ஷேவிதம்
★ நரசிம்மா
(Five Star)
(பிரதிகள் உடன் பெறலாம்)
வீடியோ விமல்,
யாழ்ப்பாணம். (C/18014)

Certificate Courses
MS Word
MS Excel
CorelDRAW
Duration: 2 Months
Start: 20, 24 -08-2001
மேலதிக விபரங்களிற்கு
STP

Internet & E-mail
Duration: 1 Month
Start: 20, 24 -08-2001
இது விசேடமாக அலுவலர்கள், மாணவர்களுக்காக ஒழுங்கு படுத்தப்பட்டது..
கணனி வலைப்பின்னல் (Computer Network) பற்றிய பயிற்சியுடன் முடிவில் உங்களிற்கு தனியான E-mail Address வழங்கப்படும். தொடர்ந்தும் எமது நிறுவனத்தின் மூலம் நீங்களாகவே தொடர்புகளை பேணலாம்.
மேலதிக விபரங்களிற்கு
STP
In touch with your World
55A, Palaly Road,Kantharmadam
TP-2674, Email: stpedu@hotmail.com

தேவை
தொலைபேசி இயக்குநர்
(பெண்)
தேவை.
தொடர்பு:-
பிரகாஷ்
தொலைத் தொடர்பகம்.
கடற்கரை வீதி,
பருத்தித்துறை. (91593)

இன்று ஆரம்பம்
2002
வணிகக்கல்வி
"முகாமைத்துவம்"
By.V.MURALEE B.B.A. (F.M. Spl)
பொருளியற் கல்லூரி
★ யாழ்ப்பாணம்.
★ இணுவில். (91609)

DCS COLLEGE OF COMPUTER TECHNOLOGY வழங்கும்
கணனி புலமைப் பரிசில் திட்டம் 2001/2002

விண்ணப்பங்கள்
மேற்படி பரீட்சைக்கு 15 வயதுக்கு மேற்பட்ட இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. யாழ். குடாநாட்டிலிருந்து மேற்படி பரீட்சையில் அதி கூடிய புள்ளியைப் பெற்ற 100 மாணவர்களுக்கு முற்றிலும் இலவச பயிற்சி நெறிக்கு அனுமதிக்கப்படுவதுடன் மேலும் 200 மாணவர்கள் கற்கைநெறிக்கான கட்டணத்தில் 20% மட்டும் செலுத்திப் பாட்நெறியைத் தொடர அனுமதிக்கப்படுவர்.

கற்கை நெறிகள்
2001ஆம் ஆண்டில் பல்வேறுபட்ட தரத்தினரின் கணனி அறிவின் தேவையைக் கருத்திற்கொண்டு இம்முறை 5 கற்கை நெறிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இலங்கை அரசின் தகவல் தொழில்நுட்பச் சபையால் கணனி இயக்குநர்களுக்கான தரக்கட்டுப்பாட்டுச் சான்றிதழ் (SLCDL) சர்வதேசரீதியில் அங்கீகாரம் பெற்ற பிரித்தானிய ACP நிறுவனம் ஆகியவற்றின் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

நுழைவுத் தேர்வுப் போட்டிப் பரீட்சை
பரீட்சை வினாத்தாள் I. நுண்ணறிவு
II. பொதுஅறிவு
ஆகிய இரு பகுதிகளை உள்ளடக்கியதாக அமைந்திருக்கும்.

விண்ணப்பிக்கும் முறை
எமது ஏதாவது ஒரு கிளை நிறுவனத்தில் பெற்ற விண்ணப்பப் படிவத்தில் அல்லது இப்பத்திரிகை விளம்பரத்திலுள்ள விண்ணப்பப் படிவம் மூலமோ அல்லது அதன் போட்டோப்பிரதி மூலமாகவோ விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பிக்கும் நிலையங்கள்
எமது நிறுவனத்தில் தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் விரிவுரைகள் நடைபெறுகின்றன. அத்துடன் யாழ்ப்பாணத்தில் கல்வி பயிலுகின்ற மாணவர்களுக்கு அவர்களின் வசதி கருதி கொழும்பிலும் நாட்டின் வடகிழக்குப் பகுதியில் உள்ள ஏனைய கிளை நிறுவனங்களிலும் கற்கைநெறிகளைத் தொடர்ந்து கற்றுக்கொள்ள ஏற்பாடுகள் செய்து தரப்படும். கீழ்வரும் எமது கிளை நிறுவனங்களில் ஏதாவதொன்றில் விண்ணப்பிக்க முடியும்.
1. Jaffna: No.124/2, Palaly Road, Thirunelveli, Jaffna.
2. Vadamarachchi: N.M.M.V Road, Nelliyadi, Karaveddy.

NEW COMPUTER COURSES
1. B.Sc. In COMPUTER SCIENCE - 1ST Year
(From Leading Australian University)
2. DIPLOMA IN COMPUTER SOFTWARE ENGINEERING
(DURATION - 18 MONTHS)
3. DIPLOMA IN OFFICE MANAGEMENT
- Microsoft Word 2000
- Microsoft Excel 2000
- Microsoft Power Point 2000
- Microsoft Access 2000
- Microsoft Windows 98/2000
- Internet & E - mail
(DURATION - 06 MONTHS)
4. DIPLOMA IN MULTIMEDIA PROGRAMMING
- Macromedia Flash (5.0)
- Ulead Gift Animator (4.0)
- Ulead Cool 3D
- Ulead Photo Impact (6.0)
- Print Shop (5.0)
- Adobe Photoshop (6.0)
- HTML
(DURATION - 08 MONTHS)
5. DIPLOMA IN WEBPAGE DESIGNNING
- HTML
- Microsoft Front Page (2000)
- Adobe Photoshop (6.0)
- Dream Weaver (3.0)
- Macromedia Flash (5.0)
- MS Photo Draw (2000)
- Internet & E - mail

DCS Scholarship Scheme - 2001/2002
(British ACP Recognized Training Centre)
Application Form
Official Use
PLEASE USE BLOCK CAPITALS
01. Last name with initials:
Last Name
Initials
Names denoted by initials
02. Sex
Male Female
03. Address
04. Date of Birth DD MM YYYY
05. Identity Card No.
06. Course you like to follow:
I II III
IV V
I certify that the information given by me is correct and accurate. I do hereby agree to be bound by the regulation of this examination and the rules for candidates issued by Board of Directors of DCS.
Date Signature

நீங்களும் கணனிப் பட்டதாரியாகலாம் (C/17995)

பரீட்சை தொடர்பான கலந்துரையாடல்
இறுதி வருட கலைப்பீட மாணவர்களுக்கானது.
காலம்:- நாளை (27-08-2001) திங்கட்கிழமை மு.ப.10மணி
இடம்:- Students Complex
மாணவ பிரதிநிதி
யாழ்.பல்கலைக்கழகம். இறுதிவருடம், கலைப்பீடம். (91564)

AJAY COMPUTER INSTITUTE
32, TEMPLE ROAD, JAFFNA. SANGARAPILLAI VEETHY, ANAIKODDAI.
புதிய பிரிவுகள் ஆரம்பம்
08-09-2001

A/L பரீட்சை எழுதிய மாணவ, மாணவிகளே!
- MS WORD
- MS EXCEL
- MS PAINT
- MS POWER POINT
DURATION:- 3 Months
FEE:- 1000/= Only

அலுவலக உத்தியோகத்தர்களே! பல்கலை மாணவர்களே!
- MS ACCESS
- VISUAL BASIC
- DOS
- WINDOWS
DURATION:- 4 Months
FEE:- 2000/= Only

பாடசாலை செல்லும் மாணவ, மாணவிகளே!
- COMPUTER FUNDAMENTALS
- COMPUTER GAMES
- MULTIMEDIA
- MS POWER POINT
DURATION:- 2 M onths
FEE:- 500/= Only

கணனி வேலைவாய்ப்பை தேடுவோர்களே!
- PRINTING WORKS
- CARD CREATION
- COREL DRAW
- ADOBE PAGE MAKER
DURATION:- 3 M onths
FEE:- 3000/= Only

- விண்ணப்பப் படிவங்களையும், நேர அட்டவணையையும் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.
- 07-09-2001 இற்கு முன்னர் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும். பதிவுக் கட்டணம் அறவிடப்படமாட்டாது.

இச் சலுகை முதலில் இணையும் 500 நபர்களுக்கு மட்டுமே

(91523) DIRECTOR

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.08.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.